# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

பக்கம் - 20

வார வெளியீடு

நாதம் - 01 பெப்ரவரி 11 - 17 / 2005 வெள்ளி - 42






## மரணிக்கவில்லை – நீங்கள் வரலாறு படைத்துள்ளீர்கள்....



## அரசுக்கு எதிராக முஸ்லிம்கள் போர்க்கொடி!



## ஜே.வி.பி. ஊடுருவல். காத்திருக்கும் ஆபத்து

## அதிரடிப்படை அடாவடி...

## சிந்தனைக்கு



சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும். தன்மானம் இழந்து தலை குனிந்து வாழ வேண்டும். பயந்து பயந்து பதட்டத்துடன் வாழ வேண்டும். படிப்படியாக அழிந்து போக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழியெதுவும் இல்லை.

**தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன்**


ஈழநாதம்
மக்கள் தினசரி — மட்டக்களப்புப் பதிப்பு


பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
Tel: 065-2226110
E-Mail: batti@eezhanatham.com

11-02-2005

# தமிழனின் பலத்தை சிதைக்க முடியாது!

தமிழினம் பலம் பொருந்தி நிற்கிறது எத்தகைய சவால்கள் வந்தாலும் அதனை முறியடித்து வெற்றியை இலக்கு வைத்து விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

துப்பாக்கிகளைக் காட்டி சுடுகலன்களால் தமிழனின் பலத்தை சிதைக்கவோ, அழிக்கவோ சிங்களப் பேரினவாதிகள் முனைவார்களாயின் அது முடியாத காரியம்.

அவர்களே முட்டாளாகி அழவேண்டிய காலம் வரும் கடந்த இருபது வருட விடுதலைப் போராட்டத்தில் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கப்படாதபட்ட சிங்களப்பேரினவாதிகளின் சதி நாசகாரத் தனங்கள் எல்லாம். முறியடிக்கப்பட்டு இன்று சர்வதேசமே தமிழனின் பலத்தைக் கண்டு பிரமித்து நிற்கின்றது.

தமிழீழ விடுதலை வரலாற்றை நோக்குகையில் தேசவிரோதிகள் தலையாட்டி பொம்மைகளாகவும் தாக்குதலாளிகளாகவும் எத்தனையோ கறைபடிந்த வரலாற்றை உருவாக்கி ஈற்றில் அவர்களின் செயற்பாடுகள் வெட்டிச் சரிக்கப்பட்டு விட்டது.

நெருப்போடு விளையாடுவதற்கு ஒப்பானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் துரோகத் தனங்கள், அவை முறியடிக்கப்படும் அதே வேளை விடுதலைப்போராட்டம் பலம் பெறும் என்பது உண்மை.

கடந்த வருடம் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை சிதைக்க அழிக்க கருணா வகுத்த பிரதேச வாத வியூகம் கூட முறியடிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலை உணர்வில் இருந்து விலகவில்லை. அவர்கள் பற்றுறுதியுடன் உள்ளனர்.

ஒரு விடுதலைப் போராட்டத்தை பலத்துடன் கட்டி எழுப்புவது என்பது இலகுவான காரியமல்ல: சிறந்த தலைமைத்துவம், மக்கள் பலம், போரிடும் திறன இவை கருத்திற் கொள்ளப்பட வேண்டியது அத்தகைய அம்சங்களை மிகைக் கொண்டு தமிழீழ விடுதலைப்போராட்டம் பலம் பெற்று நிற்கிறது.

உலக போராட்ட வரலாறுகளில் ஒரு விடுதலை அமைப்பை சிதைக்க அழிக்க சூழ்ச்சிவலைகள், பேரம் பேசல்கள் மூலம் பல தந்திரோபாயங்கள் கையாளப்பட்டுள்ளன.

அதில் ஆழம் அறியாமல் காலை விட்டு பலமிழந்து நொடிந்து போன வரலாறுமுண்டு.

அதுவும் போர் ஓய்வு, சமாதானம் என்ற சாயப்பூச்சுக்களை காட்டிக் கயவர்கள் காரியம் சாதித்துள்ளனர்.

அத்தகைய வலை விரிப்புக்கள் மூலம் தமிழீழத்தின் போராட்டத்தை பலவீனப்படுத்த முடியாது என்பதை எதிரிகள் புரிந்துள்ளனர். இருப்பினும் அவர்களது குரோத நடவடிக்கையால் அவர்களுக்குப் பின் விளைவுகள் ஏற்படக்கூடும்.

போர் ஓய்வு நிலையில் சமாதானத்தை மீளக் கொண்டு வருவதில் இழுத்தடிப்புக்களை அரசு மேற்கொண்டு வருகிறது. அவ்வாறான இழுபறிக் கால கட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் தமிழர் தாயகத்தை அழித்து சிதைத்து விட்டது.

சமாதானமும் தேவை, அதே வேளை போர் அனர்த்தம், போர் அனர்த்தத்தினால் சிதைந்த தாயகத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை அரச இயந்திரம் சம பங்கிடுதலுடன் மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் அவ்வாறான பகிர்வு எதுவும் வழங்காது விடுதலைப் புலிகளை அழித்து பலத்தைச் சிதைத்து விடுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையிலேயே மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யனின் மீதான தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

இந்த தாக்குதலில் லெப்.கேணல்.கௌசல்யன் மற்றும் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்ததுடன் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாட்டுப் பற்றாளர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.


இப்படுகொலைகளால் தமிழனின் பலம் அழிந்தோ, சிதைந்தோ போகாது. இது மேலும் விடுதலை உணர்வை ஊட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுயலாப அரசியலால் அரச நிவாரணம் கேள்விக்குறியாகிறது

கடற்கோள் அனர்த்தத்தால் வடகிழக்கு மாகாணத்தில் கரையோரப் பிரதேசங்கள் யாவும் பாரியளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டு ஒரு மாதமாகியும் இப்பாதிப்பில் மீன்பிடியை ஜீவனோபாயமாகக் கொண்ட பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தமது வாழ்க்கையைத் தொடர்ந்தும் வாழ்வதற்கு முடியாமல் அனாதரவான நிலையில் நிர்க்கதியாக்கப்பட்டுள்ள வேளையில் அரசு கடற்கரையில் இருப்போர் 300 மீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியிருக்குமாறு உத்தரவிட்டதால் மீன்பிடித் தொழிலை தொழிலாகக் கொண்ட குடும்பங்கள் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் உள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. என்பது டன் இந்த நிலைமையைக் கொண்டு பேரினவாதிகளும், அரசியல்வாதிகளும் அரசியல் நடத்துவதற்கு சுயலாபம் தேடமுற்படுவதாக மீனவர்கள் பலர் குற்றச் சாட்டுச் சுமத்திவரும் வேளையில் பொத்துவில் மாவட்ட மீனவர் பேரவை இணைப்பாளர் ஏ.எம். அப்துல் ஜபார்யை சந்தித்த வேளை அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் கூறியதாவது:~

**கேள்வி:-** கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு கரையோர மீனவர்களுக்கு அரசாங்கம் எவ்வகையான உதவிகளை வழங்கி வருகின்றது.

**பதில்:-** கடந்த 26ஆம் திகதி இலங்கைக்குள் தேசிய மட்டத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவத் தொழிலாளிகளின் உரிமைகள் இயற்கையின் அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகி விட்டது. விஷேடமாக வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற வேளை பேரினவாத அரசியல் வாதிகளாலும், முதலாளித்துவ வாதிகளாலும் வழிநடத்தப்படுகின்றது என்ற உண்மையை அப்பட்டமாக சர்வதேசமும் அறிந்திருக்கின்ற இக்காலகட்டத்தில்கூட கடந்த காலத்தில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய தமிழ் அமைப்புக்கள், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகள் சம்மந்தமாக கூட இன்று அதற்கான அங்கீகாரத்தை வழங்கக்கூடிய ஒரு ஒப்பந்த நகர்வு இருந்த பட்சத்தில் இன்று அதற்கான உரிமைகூட மறுக்கப்பட்டு மீண்டும் இங்கு வாழ்கின்ற மக்கள் பாதிப்பான நிலைக்கு தள்ளப்படக் கூடியதாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கின்றது. இதனைச் சில ஊடகத்துறை, சில பத்திரிகைகள் மூலம் நாங்கள் பார்க்கும் போது புலனாகின்றது. விஷேடமாக சிறிலங்காவில் இயங்குகின்ற ஊடகத்துறை ஒருதலைப் பட்சமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கான சான்றுகள் வடகிழக்கில் இன்று எத்தனை அனர்த்தங்கள் சார்பாக அல்லோலகல்லோலமாக அனாதைகளாக்கப்பட்டு விதவைகளாக, ஊனமுற்று எத்தனை குடும்பங்கள் பல திசையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் தேசிய மட்டத்தில் இருக்கின்ற தலைவர்கள், முதலாளிகள் இன்று என்ன செய்கிறார்கள்? என்று பார்த்தால் மக்களை பிரித்தாண்டு அவர்களின் நிலமைக்கு ஏற்ற வகையில் சிறிய மீனைப்போட்டு பெரிய மீனைப் பிடிப்பது போன்று மீண்டும் ஒரு பாதாளத்தில் தள்ளக்கூடிய நிலமையை இங்கு காணக்கூடியதாக உள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நாங்கள் கடந்த காலத்திலிருந்து இந்தப் பிரதேசத்திலிருக்கின்ற மீனவர்களின் நில உரிமை மறுக்கப்படக் கூடாது. மீனவர்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். மீனவர்களுக்கான அனைத்து உரிமைகளும் தென் மாகாணத்தில் வாழுகின்ற மீனவர்களுக்கு எவ்வாறு வழங்குகின்றார்களோ, அவ்வாறே வடகிழக்கில் வாழுகின்ற மீனவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். என்ற நோக்கில் நாங்கள் தேசிய மட்டத்திலான தேசிய மீனவர் என அழைக்கப்படும் ஒரு அமைப்பின் பங்காளியாக இந்த மாவட்ட மீனவர் பேரவையை கிழக்கு மாகாணம் வரையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இந்த அடிப்படையில் எங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இங்கு பாதிப்புக்குள்ளான மக்களும் இந்தவகையிலும் உதவிகளும், நிவாரணங்களும் சரியாகச் சென்றடையவில்லை என இங்கு வாழ்கின்ற மக்களும் சர்வதேசமும் அறிந்த உண்மையாக இருந்தபோதிலும் அவை அனைத்தும் மூடி மறைக்கப்பட்ட ஒரு கதையாகவே இருந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையைக் கண்டறிவதென்றால்



பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்று அவர்களின் பிரச்சினையை வழிநடத்தும் போது தான் அந்த உண்மையை தெளிவாகக் காண முடியும். பொத்துவில் பிரதேசத்தில் ஒரு உதாரணத்தைக்கூற வேண்டுமாயின் சின்னஉல்லை, கோமாரி, பாசறைச்சேனை, பொட்டுக்கல், களப்புக்கட்டு போன்ற பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் அனாதைகளாகவும், ஆதரவற்றவராகவும் உள்ள வேளை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உலருணவு நிவாரணங்களும் எந்தவித பாதிப்புமற்ற பாணமை என்ற பிரதேசத்திற்கு சென்றடையக்கூடியதாக இருக்கிறது. இதற்குக் காரணம் இங்கு வழிநடத்துகின்ற இனவாத அரசியல் சக்திகளின் தலையீடுதான். இந்த உண்மைகள் இருக்கின்ற அரசியல் தலைவர்களோ அல்லது மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய தலைமைத்துவமோ வழி நடத்திச் செல்லவில்லை என்பது உண்மையாகும். கடந்த காலங்களில் சுயநிர்ணய உரிமைக்காக தமிழ் மக்கள் போராட்டம் நடத்திய அந்தக் காலகட்



டத்தை உணர்ந்து கொண்ட சர்வதேச மட்டம் சமாதானப் பேச்சு வார்த்தையை இடைநடுவில் கைவிட்ட வேளையில் இந்தக் கடல் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

**-சரவணன்-**

இந்தக் கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களை மீண்டும் ஒரு சீரான நிலைக்குக் கொண்டு வருவதை விட்டு விட்டு இந்த பேரினவாத முதலாளித்துவ அரசியல்வாதிகள் வெளிநாடுகளுக்குச் சென்று யுத்த விமானங்கள், யுத்தத் தளபாடங்கள், ஆயுதங்கள் கொள்வனவு செய்கின்றனர். இவ்வாறு இந்தச் செயற்திட்டத்தைப் பார்க்கும்போது வடகிழக்கில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களை எந்த நிலமைக்கு கொண்டு செல்லப் போகின்றனர் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. உதாரணமாக ஏகாதிபத்திய பாசிசவாத வல்லரசுகள் கடல் அனர்த்தத்தைப் பயன்படுத்தி இலங்கைக்குள் ஊடுருவியிருப்பது இன்று ஆச்சரியத்தையும், கேள்விக்குறியையும் உண்டாக்கியுள்ள நிலையில் தான் கரையோரப்பகுதியில் வாழுகின்ற வடகிழக்குப் பிரதேசத்தில் விசேடமாக மீனவர்களைப் பாதிக்கின்ற விடயமாகவுள்ளது. இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு தேசிய மட்டத்தில் வாழ்கின்ற மீனவர்கள் ஒன்று சேர்ந்து வர்க்கப் போராட்டம், மறியல் போராட்டம் ஜனநாயகப் போராட்ட ரீதியாக இன்று வடகிழக்கில் வாழுகின்ற மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய நிலைப்பாட்டில் தான் நாங்கள் இன்று நிதானமாகவும் ஆழமாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த அடிப்படையில் கூட பேரினவாதிகளின் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் கூட நாங்கள் முகம் கொடுத்துக் கொண்டு எங்கள் போரட்டத்தை ஒரு அகிம்சைப் பயணத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அனர்த்தத்தால் விதவைகளாக்கிப்பட்ட பெண்கள், அங்கவீனமான பெண்கள், பராமரிப்பற்ற பெண்களுக்கொரு சரியான பராமரிப்பு, பாதுகாப்பு இங்கு இல்லை. இவற்றையெல்லாம் ஒரு நல்ல நிலமைக்கு கொண்டுவர வேண்டுமாயின் எந்தவித அரசியல் பின்னணியுமற்ற மனித உணர்வு, யதார்த் தத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையில் ஒரு சுயாதீனமான குழுவை அமைத்து அந்தக் குழுவின் மூலமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீண்டுமொரு புதிய நிலமைக்குக் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூறு இருக்கும் பட்சத்தில் அதை விடுத்து சுயலாபங்களுக்காக அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகளின் வழிகாட்டியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலமை கேள்விக்குறியாக இருக்கிறது.

**கேள்வி:-** கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்துக்கு அப்பால் குடியிருப்புக்கள் அமைக்கப்பட வேண்டும் என அரசு அறிவித்திருக்கும் பட்சத்தில் மாவட்ட மீனவர்கள் பேரவை எவ்வாறான தீர்மானங்களை எடுத்துள்ளீர்கள்?

**பதில்:-** தென் மாகாணத்தில் வாழுகின்ற மீனவர்களுக்கு கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியிருக்க அரசு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் வடகிழக்குப் பிரதேசத்தில் 300 மீற்றர் தூரத்திற்கு அப்பால் குடியிருக்கலாமென ஊடகங்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. இதே நிலமையை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரு விஷேடமான விடயம் என்வென்றால் சுனாமியின் நிமிர்த்தம் இந்த மீனவர்கள் அங்கு குடியிருக்க முடியாது.

300 மீற்றர் தொலைவில்தான் இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் மீண்டும் ஒரு சுனாமியால் தாக்கப்படலாம் எனக் கருத்தைக்கூறுகின்ற பேரினவாத புத்தி ஜீவிகள் சற்றுச் சிந்திக்க வேண்டும். மீனவர்கள் வாழுகின்ற இந்தப் பிரதேசத்தை தாக்கக் கூடிய அந்தப் பேரலை அதே பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் இராணுவ முகாம்கள், உல்லாச விடுதிகள் அமைக்கின்றார்கள்.

இந்த இராணுவ முகாம்களை உல்லாச விடுதிகளை அந்தப் பேரலை தாக்குவதில்லையா? என்ற கேள்வியை நாங்கள் கேட்கின்றோம். இந்நிலைப்பாட்டிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# விடுதலை வரலாற்றில் வீழ்த்தப்பட்ட பெரும் சுவர்



**த**மிழீழ விடுதலைப் பயணத்தின் பெரும் சுவர் இடிந்து விழுந்து விட்டது. அதன் வீழ்கையால் தமிழீழ தேசம் கதறி அழுகின்றது. கண்ணீர் சிந்துகின்றது.

விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டார்.

அதன் காரணமாக தன்னையும் அண்ணனின் விடுதலைப் போர்ப் பாசறையில் ஓர் போராளியாக இணைத்துக் கொண்டார். போராட்ட காலத்தில் எதிரிகளின் களம் கண்ட கௌசல்யன் பின் பல பொறுப்புக்களைச் சுமந்து விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பைச் திறமையாகச் செய்துள்ளார்.

நிதிப் பொறுப்பாளராகப் பதவி வகித்த இவர் பின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினார். சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டு போர் ஓய்வுக் காலம் அரசியல் பணிகளை விஸ்தரித்து பல்வேறு ஆக்கபூர்வமான பங்க

சிங்களப் படைகளின் பாசறைக்குள் புகுந்து கருணாவும், கருணா கும்பலும் பல்வேறு தேசவிரோதச் செயல்களில் ஈடுபட்டனர். பல போராளிகளை, பொது மக்களை இந்தச் தேச விரோதக் கும்பல்களும் சிங்களப் படைப் புலனாய்வும் நயவஞ்சகத் தனமாகக் கொன்றொழித்த போது போர் நிறுத்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடித்து தமது அரசியல் போராளிகளின் பணிகளை வழிநடத்திச் சென்றார். போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சிறிலங்காப் படைத்தரப்பினருடன் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பி மாவட்டத்தில் இயல்பு நிலை சீராக்கத்திற்காக அரும்பாடு பட்டார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் படை அதிகாரிகளுக்கும்,

தலைவர் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அவர் கடந்த வருடம் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அங்கு சென்று பிரதேசவாதம் மற்றும் தேசவிரோதச் செயற்பாடுகள் குறித்து புலம்பெயர்ந்து வாழும் உறவுகளுக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஒட்டுமொத்தத்தில் குறுகிய காலத்தில் கௌசல்யன் அவர்களின் அரசியல் பணி விசாலமானது, வேகமானது. திடீரென தமிழர் தாயகத்தை ஆழிப்பேரலை அனர்த்தம் காவு கொண்டபோது கலங்கிய கௌசல்யன் துயர்துடைப்புப் பணிகளில் மும்முரமாகச் செயற்பட்டார்.

மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு அவர்களின் ஆலோசனை வழிநடத்தல்கள் மூலம் அனர்த்தத்தால் அதிகம் பாதிப்புற்ற அம்பாறை மாவட்டத்தில் மனிதாபிமானப் பணிகளை முன்

அது யாருக்காக? விடுதலை வரலாற்றில் வீரகாவியம் படைத்திருக்கும் லெப்.கேணல் கௌசல்யன் அவர்களுக்குத் தான். அந்த வீரவேங்கை காவியமான துயரச் செய்தி எம்காதுகளுக்கு திங்கள் இரவு வருகிறது.

புனாணைப் பகுதியில் கௌசல்யன் ஆட்கள் வந்த வாகனம் தாக்குதலில் சிக்குண்டு ஆட்களுக்குச் சேதமாம். இதுதான் பறந்து வந்த செய்தி.

இதில் உண்மையா? அல்லது பொய்யா? பல மணி நேரத்தின் பின் அந்தச் செய்தி நிஜமாகி விட்டது. கௌசல்யன் என்ற அந்த விருட்சம் ஈனர்களினால் வீழ்த்தப்பட்டு விட்டது என்ற துயரம் எம்மை மட்டுமல்ல, மட்டு அம்பாறை மாவட்டத்தை மட்டுமல்ல, தமிழீழ தேசத்தையே அழவைத்து விட்டது.

லெப்.கேணல் கௌசல்யன் மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்தவர். துணிவு, அன்பு, அடக்கம், பரந்த அறிவு, போராளிகளுடனும், பொதுமக்களுடனும் களிவோடு பேசும்திறன், இன்னும் ஏராளமான சிறந்த குணாம்சங்களைக் கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையைச் சேர்ந்த பண்டாரி

> **"ஒட்டுமொத்தத்தில் குறுகிய காலத்தில் கௌசல்யன் அவர்களின் அரசியல் பணி விசாலமானது, வேகமானது. திடீரென தமிழர் தாயகத்தை ஆழிப்பேரலை அனர்த்தம் காவு கொண்டபோது கலங்கிய கௌசல்யன் துயர்துடைப்புப் பணிகளில் மும்முரமாகச் செயற்பட்டார்."**

யாவெளி இந்தக் கௌசல்யனின் பிறந்த இடம். இவரது வீட்டுப் பெயர் லிங்கராசா. இளையதம்பி நாகம்மா தம்பதிகளுக்கு கடந்த 25.0 3.1972ஆம் ஆண்டு புகழ் சேர்க்க இந்த வீரமகன் அவதரித்தார். இவருக்கு புவனலோஜினி, ரேணுகா, கிரேஸ்குமார், டிலோஜினி, சதீஸ்குமார் ஆகியோர் பாசமிகு சகோதரர்கள். இவரது துணைவியார் விஜயமலர். இது அவரது குடும்பத்தின் சுருக்கமான குறிப்புகள்.

இளவயதில் கல்வியைத் தொடர்ந்த காலத்தில் தேசியத் தலைவனின்

ளிப்பை மேற்கொள்ள வேண்டிய காலகட்டத்தில் கௌசல்யனின் அரசியல் பணி முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது.

தமிழ் பேசும் சமூகங்களிடையே இருந்த கசப்புணர்வுகளைக் களைந்து முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கான திட்டமிடல்கள் முறையாக வகுக்கப்பட்டு முஸ்லிம் புத்திஜீவிகள், மதத் தலைவர்களை அழைத்து பல கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளார். ஒவ்வொரு கலந்துரையாடல்களிலும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றி ஆழமாகக் கேட்டறிந்து அதற்கான தீர்வுகள் காணப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்களில் நிறைந்திருந்த கௌசல்யன் பல்வேறு மட்டத்திலும் பல்வேறு அரச அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணி வந்தார். மாவட்டத்தில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிகாரிகளுடன் பேசி தீர்வு காண வேண்டிய விடயங்களுக்குத் தீர்வு கண்டார்.

கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக மட்டு மாவட்டம் காணப்பட்டது. இந்த மாவட்டத்தின் கல்வியை ஒரு முன்னேற்றமான நிலைக்குக் கொண்டு வருவதற்காக பல்வேறு திட்டங்களை மேற்கொண்டார்.

படுவான்கரை கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தது. இதற்காக அரும்பாடுபட்டார். பல ஆசிரியர்களை, அதிபர்களை படுவான்கரைப் பாடசாலைகளுக்கு நியமித்ததுடன் மட்டுமன்றி, பாடசாலைகளுக்குத் தேவையான கற்றல், கற்பித்தல் பௌதீக வளங்களுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். குறிப்பாக கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவராகச் செயற்பட்டார். கல்விமான்கள், புத்திஜீவிகளுடன் அவர் கல்வி வளர்ச்சி பற்றி பல தடவைகள் பேசி உள்ளார்.

இவ்வாறு அவரது பரந்துபட்ட அரசியல் தளம் வேகமாக முன்னெடுத்து வந்த காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தேசியத் தலைமைக்கும் எதிராக கருணா விரித்த சதி வலையிலிருந்து விலகி தேசியத் தலைமையின் போராட்டத்திற்கு தமது முழு ஆதரவை வழங்கி மட்டு அம்பாறை மாவட்டத்தில் தோன்றிய பிரதேச வாதத்தை முறியடிப்பதற்கும் முன்னின்று உழைத்தார்.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட பின்னர்



விடுதலைப் புலிகளுக்குமிடையில் பல சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு சந்திப்புக்களின் போதும் படைத் தரப்பினரின் போர் நிறுத்த மீறல்கள் குறித்தும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் படை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றை, தீர்த்து வைப்பதற்குப் பாடுபட்டார்.

**-தமிழ் மகன்-**

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் மீண்டும் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் வேலைத்திட்டங்களை குறுகிய காலத்திற்குள் கட்டியெழுப்பியவர். அதேவேளை ஊடகவியலாளர்களுடனும் நெருக்கமான உறவு வைத்திருந்தார். ஊடகவியலாளர்களுடன் அடிக்கடி சந்திப்புக்களை நடாத்தி அவர்களுடன் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்வார்.

தேச விரோதக் கும்பலால் ஊடகவியலாளர், நாட்டுப் பற்றாளர் ஜி.நடேசன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அதன்பின் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் வேதனைப்பட்டார்.

கௌசல்யன் அவர்களின் அரசியல் இருப்பு காத்திரமானது. தேசியத்

னெடுப்பதில் அயராது பாடுபட்டார். மீட்புப் பணி, நிவாரணப் பணிகளில் தமது அரசியல் போராளிகளையும் களமிறக்கிய கௌசல்யன் இரவு பகல் பாராது தமது பணிகளை முன்னெடுத்து வந்தார்.

இறுதியில் சுனாமித் தாக்கத்தின் விளைவாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மக்களுக்கு மறுவாழ்வு அழிப்பது தொடர்பாக தலைமைப் பீடத்துடன் கலந்துரையாடுவதற்காகச் சென்றிருந்தார். அங்கு கலந்துரையாடலில் கலந்து கொண்டார். அது தான் தலைவரின் சந்திப்புக்கான இறுதி வருகை என்பதை கௌசல்யன் எண்ணியிருக்க மாட்டார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனும் நீண்ட கலந்துரையாடல். தமது பணி விடைபெறப்போகிறது என்பதை அந்தக் கணத்தில் கௌசல்யன் நினைத்திருக்கவேமாட்டார். இறுதியாக வன்னி மண்ணிலிருந்து தமது சேவைக்காக வந்தபோது தேச விரோதக் கும்பல்களின் துப்பாக்கி வேட்டுக்கு இந்த வீரவேங்கை காவியமாகி விட்டது. அவரோடு பக்கபலமாகவிருந்த போராளிகளான மேஜர் புகழன், மேஜர் செந்த

> **"கௌசல்யன் அவர்களின் அரசியல் இருப்பு காத்திரமானது. தேசியத் தலைவர் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்."**

மிழன், 2ஆம் லெப் விதிமாறன் ஆகியோரும் வீரச்சாவடைந்து விட்டனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளரின் அரசியல் பணிகளுக்குப் பக்கபலமாக நின்ற இந்தப் போராளிகளும் வீரகாவியம் படைத்துச் சென்றுவிட்டனர்.

இன்று கௌசல்யனின் மறைவு தமிழீழ தேசத்திற்கு ஒரு பேரிழப்பு. அரசியல் பணிகளில் ஒரு இடைவெளியை விட்டுச் சென்றுள்ளது. தமிழீழ தேசம் கலங்கி நிற்கின்றது. கண்ணீர் வடிக்கின்றது.

ஆனால் கௌசல்யன் மரணிக்கவில்லை. அவரது பணி விடுதலை வரலாற்றில் தடம் பதித்து நிற்கின்றது. அவரது இலட்சியம், கனவு விரைவில் நனவாகும்.

# போர்க்களத்தில் மட்டுமல்ல புலி வீரர்....

**திரு. அ. தாசீசியஸ் அவர்கள் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களால் நன்கறியப்பட்ட வானொலி கலைஞர்.. தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்து வரும் இவர் தனது சொந்த ஊரான தாளையடிக்கு வந்து நின்ற போது ஆழிப்பேரலை அனர்த்தத்தை பட்டுணர்ந்தவர். அவரின் நேரடி அனுபவங்களை ''தமிழ்க்குடில்'' இணையத்தள வானொலியின் ஊடாக தமிழ் உறவுகளுடன் பகிர்ந்து கொண்டார் அதில் இருந்து சில பகுதிகளைத் தொகுத்து ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாசகர்களுக்காகத் தருகிறோம்.**

கடல் தன் எல்லை மீறி கொலை அலை யாக ஊர்மனைக்குள் தறிகெட்டு ஓடி அனர்த்த சன்னதமாடி ஓய்ந்த மறுகணமே கடற்புலிகளின் ஆண்களும் பெண்களும் அந்தக் கிராம இளைஞர்களும் புற்றீசல்களாகப் புறப்பட்டு சுறுசுறுப்போடு மீட்புப் பணியில் இயங்கத் தொடங்கினார்கள். குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த பலரை மீட்டு தற்காலிக தூக்கு படுக்கைகளில் சுமந்து மருத்துவமனைகளுக்கு அனுப்பு வதில் ஒரு பிரிவினர் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிரு ந்தார்கள்.

காதுகளில் இருந்து ஈரத்துணியால் சேற்றைத் துடைத்து விடுவதில் அங்கே நின்றவர்கள் ஈடுபட்டோம். புலிப்படை துணைப் பொறுப்பாளர் ஒருவர் அங்கே வந்தார். அவரிடம் இருந்து ஆணை ஒன்று வேண்டுகோளாகப் பிறந்தது. 'சூசை அண்ணையிடம் இருந்து தகவல் வந்திருக்கின்றது. இரண்டாவது கொலை அலை எந்த நேரமும் வர லாமாம். கரையோரத்தில் நிற்கும் எல்லோரையும் ஒரு மைலுக்கு அப்பால் கொண்டு போய் விடட்டாம்; வாருங்கள் வண்டிகளில் ஏறுங்கள்' என்றார்.

போகின்றது. இன்னொன்று மறுபக்கம் பளைக்கு போகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும் பளை மருத்துவ மனைக்கும் அனுப்ப வேண்டியவர்களை பளை வண்டியிலேயே ஏற்றுங்கள். பளையில் இருந்த அவர்க ளைக் கொண்டு செல்ல வண்டிகள் ஏற்பாடுகள் செய்ய ப்பட்டு விட்டன என்றார்.

புதிதாக அங்கு வந்த வண்டிகளில் இரு ந்து குதித்த புலிகள் காயப்பட்டவர்களை துரிதமாக ஏற்றினார்கள். இப்படியான வேலைக்குப் பயிற்சி பெறாதவர்கள் ஆண்டாண்டாக இந்த வேலையைச் செய்பவர்கள் போல அமைதியாகவும் வேகமாகவும் ஆற்

இடிபாடுகளிடையே காயப்பட்டவர்களை மீட்பதில் துரிதமாக செயற்படும் அரசியல்துறை, காவல்துறை, திலீபன் மருத்துவப் பிரிவு என்பன ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிறுவுவதில் தம்மிடையே நடைமுறைத் தெளிவை உருவா க்கினார்கள்.

மருதங்கேணி மருத்துவமனையில் காயப் பட்டவர்களுக்கு முதலுதவி. இதற்கிடையில் இவர்களை எந்த நகருக்கு எந்த மருத்துவமனைக்கு அனுப்புவது என்ற திலீபன் மருத்துவமனையினர் வேகமாகத் தீர்மானம் எடுத்தார்கள். முல்லைத்தீவி லும் கடும் உயிர்ச் சேதம். அங்கிருந்தும் காயப்பட்டவர்களை கிளிநொச்சிக்குத் தான் கொண்டு வருவார்கள். அதனால் கடுங்காயம் உள்ளவர் களை மட்டும் கிளிநொச்சிக்கு அனுப்புங்கள். மீதிப்பேரைப் பளைக்கு அனுப்புங்கள். தேவையென்றால் சாவ கச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பளையில் இருந்து அனுப்பி வைப்பார்கள் என்று திலீபன் மருத்துவமனையின் பொறுப்பாளரான பெண் போராளி கூறினார்.

காயப்பட்டவர்களை அனுப்பும்போது வாகனங் களிலிருந்தால் இருந்தால் உடலங்களை குளிரறை பாதுகாப்புள்ள தூர இட மருத்துவமனைகளுக்கு அனுப் புங்கள் என்று இப்போராளி கூறினாள். எல்லாம் சேறு குளித்து காயங்களுடன் உள்ள உடலங்கள். நீரும் உப்புநீர். அதனால் அவை மேலும் உப்பி பெருத்து பழுத டைந்து விடும். அடை யாளம் காணமுடியாது போய்விடும். சொந்தக் காரர் பாவம் அல்லவா? என்றாள் அவள்.



கடைசியாகக் கொண்டு வரப்பட்ட காய ப்பட்டவர்களை வண்டி யில் ஏற்றினோம். பெண்க ளையும் குழந்தைகளையும் ஏற்றினோம். 'மேட்டை நோக்கி ஓடுங்கள்' என்றா ர்கள். ஏனையோர் நடக்கத் தொடங்கினோம். ஆனால், அந்த இளம் பொறுப்பாளரும் ஏனைய போராளிகளும் அங்கேயே நின்றார்கள். அப் படி என்றால் நீங்கள்? என்று ஒரு போராளியைக்கேட்டேன். 'பார்த்தீர்கள் தானே இன்னும் எத்தனை பேர் காயப்பட்டுக் கிடக்கி ன்றார்களோ தெரியாது. எங்களுடைய உயிர்களைப் பார்த்தால் அவர்களது உயிர்களை யார் காப்பாற்றுவது? இதுதானே எங்களது பணி? ' என்று சாதாரணமாக தன்னு யிரை தானம் பண்ண விடுதலை வேட்கையோடு முன்வந்த நவீன குருசேத்திர கர்ணன் கூறினான்.

**''மேட்டை நோக்கி ஓடுங்கள்'' என்றார்கள். ஆனால் , அந்த இளம் பொறுப்பாளரும் ஏனைய போராளிகளும் அங்கேயே நின்றார்கள். ''அப்படியானால் நீங்கள்? '' என்று ஒரு போராளியைக் கேட்டேன்.**

**''பார்த்தீர்கள் தானே இன்னும் எத்தனை பேர் காயப்பட்டு கிடக்குகிறார்களோ தெரியாது. எங்களுடைய உயிர்களைப் பார்த்தால் அவர்களுடைய உயிர்களை யார் காப்பாற்றுவது? இதுதானே எங்களது பணி'' என்று சாதாரணமாக தன்னுயிரை தானம் பண்ண விடுதலை வேட்கையோடு முன்வந்த நவீன குருசேத்திர கர்ணன் கூறினான்.**

காயங்களோடு வீழ்ந்து கிடந்தவர்களை புலி வாகனங்களில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்புவதில் முனைப்போடு இன்னொரு பிரிவினர். உயிரற்ற உடலங்களை வீதியோரம் வளர்த்தி விட் டு, அதற்கென வந்த தட்டைப் பார ஊர்திகளில் அவற்றை ஏற்றி மருத்துவமனை உடல் கூடப் பிரிவுக்கு அனுப்பும் பணியில் இன்னொரு பிரிவினர்.

கரை நீளம் வாழ்ந்த மக்களை இந்தக் கொலை அலை என்ன செய்திருக்கும் என அஞ்சி னோம். கரையை நோக்கி ஓடினோம். எங்கும் கருஞ் சாம்பல் சேறு. அக்கம் பக்கம் வீடுகளைக் காணவில்லை. காயத்தோடு சிலர் நின்றார்கள். போக்கு வரத்து நடமாட்டம் உள்ள பெரு வீதிக்கு வந்து சேர்ந்த போது, விடுதலைப் புலிகளின் கடற்புலிப் போராளிகள் ஏற்கனவே காயப்பட்டவர்களோடு உத வியபடி நிற்கக் கண்டோம். அவர்களது வோக்கி டோக்கி உதவிக் கோரிக்கை விடுத்த வண்ணம் நிற்கக் கண்டோம்.

'தரையில் முட்கம்பி வேலிகள் பெயர்ந் துள்ளன. சேற்றில் புதைந்தும் இருக்கின்றன. கவனமாக நடவுங்கள்' என்று அவர்கள் எச்சரித்தார்கள். உதவி வாகனங்கள் வருவதற்கு ஏதுவாக வீதிக்கு குறுக்கே கிடக்கும் தடைகளை அகற்றப் பாருங்கள் என பொறுப் பாளர் ஒருவர் கூற, எல்லோரும் அதில் ஈடுபட்டோம். கடற்கரையில் அலைச் சத்தத்தை மிஞ்சும் வகையிலே அழுகுரல் ஓலங்கள் ஒலிக்கத் தொடங்கியிருந்தன. குரல் கேட்ட திக்கெல்லாம் கடற் புலிகள்; பெண்கள் உட்பட. பாய்ந்தார்கள்; காயப்பட்டவர்களைத் தூக்கி வந்தார்கள். வீதியோரமாகப் பத்திரமாகக் கிடத்தி விட்டு, பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு மீண்டும் உதவிக்குப் பாய்ந்தார்கள்.

தங்கள் வீட்டாரைப் பத்திரப்படுத்திய ஊர் இளைஞர்களும் புலிகளோடு சேர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டார்கள். பத்து நிமிடங்களில் புலிகளின் வாகனங்கள் வந்தன. முதலில் காயம்பட்டவர்களைத் துரிதமாக மருத்துவமனைகளுக்கு அனுப்பினார்கள். புலிகள் அன்று வேகமாகச் செயற்பட்டதாலேயே குற்றுயிராகக் கிடந்த பலர் காப்பாற்றப்பட்டார்கள; உயிர் தப்பினார்கள் என்பதை நேரே கண்டுணர்ந்த போது, கண்கள் குளமாக நெஞ்சம் கனக்க வன்னி அமைந்திருந்த திசை நோக்கி வெம்மூச்சு விட்டேன்.

கடற்கரை வரம்போடு நிற்க வேண்டிய அலை தன் நீர் நெறி பிறழ்ந்து கரையேறி வெறியாடியதால் ஆண்டாண்டு காலமாக தாளையடி பூண்டிருந்த இயல் கற்பு சூறையாடப்பட்டிருந்தது. கண் முன்னே கடல் மட்டும் குமுறிக் கொண்டிரு ந்தது. இரு பக்கமும் கரை நீள அனைத்து ஊர்களுக்கும் சாபமாகியிருக்கின்றது என்பது பார்த்த பார்வையிலே வெளிச்சமாகியது.

அலைக்குள் அகப்பட்ட சிலர் குற்றுயிரும் குலையுயிருமாகக் கொண்டு வரப்பட்டார்கள். வீதியோரம் வளர்த்தப்பட்டிருந்த அவர்களது மூக்கு, வாய், கண்,

கடலில் இருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில் தாளையடிப் பெரு வீதியில் உள்ள மருதங்கேணி மருத்துவமனை கூப்பிடு தூரத்தில் இருக்கும் போதே அங்கிருந்து எழும் கூக்கு ரல்கள் அந்த திக்குகளை நோக்கி நடந்து கொண்டிருந்த எங்கள் காதுகளைத் தீய்த்தன. அங்கே போனதும் காரணம் புரிந்தது. மருத்துவமனை உடல் கூடம் நிறைந்திருந்தது. மருந்து கட்டும் கூடத்து விறாந்தை, படுக்கைப் பகுதி வெளித் தாழ்வாரம் இப்படி எங்கெல்லாம் இடமிருந்ததோ அங்கெ ல்லாம் இறந்தவர்களின் உடல்களை நீட்டி வளர்த் தியிருந்தார்கள்.

கூடுதலாக பெண்களும் குழந்தைகளுமே மரணப்பட்டியலில் பெயர் பதியப்பட்டிருந்தார்கள். கடற்பு லிகளின் தரை வாகனங்கள் வெவ்வேறிடங்களில் இருந்து காயப்பட்டவர்களைக் கொண்டு வந்து கொண்டிருந்தா ர்கள். ஆழியவளையில் விடுதலைப் புலிகளின் திலீபன் மருத்துவமனை அமைந்திருக்கின்றது. அந்த வட்ட கையில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நவீன மருத்துவத் தளம் அது. அங்கே கூட காயப்பட்டவர்களும் இறந்த உடல்களும் நிரம்பத் தொடங்கியிருந்தன. அவர்களை பளை, கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற பெரிய மருத்துவமனைகளுக்குத் தேவைக்கேற்ப பிரித்து அனுப்புவதானால் அதற்கு வசதியான இடம் வடமராட்சி கிழக்கில் நடுநாயகமாக உள்ள தாளையடி வீதியேதான்.

அந்த வீதியில் உள்ள மருதங்கேணி மருத்துவமனையில் காயப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள் மேலும் மேலும் குவிய கூக்குரலும் ஒப்பாரியும் அலைய லையாகப் பெருகிக் கொண்டிருந்தன. நோயாளிப் படுக் கைக் கூடம் ஒன்றை தற்காலிக மருந்து கட்டும் இடமாக மாற்றியிருந்தார்கள். உள்ளே ஒவ்வொரு கட்டிலிலும் இரண்டு, மூன்று, நான்கு பேர் கூட வளர்த்தப்பட்டி ருந்தார்கள். தரையிலும் பலர் வளர்த்தப்பட்டிருந்தார்கள். கை கால் முறிந்த நிலையில் தலையில் பலத்த காயத்தோடு சிலர். வெளி விறாந்தையில் சிறு காயங்களுக்கு மருந்து கட்டும் பணியும் சூடு பிடித்திருந்தது. பெண் விடுதலைப் போராளிள் ஐந்து பேர் அங்கு பம்பரமாக சுற்றிச் சுழன்று உதவிக் கொண்டிருந்தார்கள்.

மருந்து கட்டும் பகுதிக்குள் தமது உறவி னர்களைத் தேடி வந்தவர்கள் நெருக்கடி ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். காயப்பட்டவர்களும் மேலும் வந்தனர். பெண் போராளி ஒருவர் திடீரென வெளியே ஓடினார். சிறிது நேரத்தில் வேகமாகத் திரும்பி வந்தார். காயப் பட்டவர்களை பெரிய மருத்துவமனைக்கு அனுப்ப வண்டிகள் தயார். ஒரு வண்டி கிளிநொச்சிக்குப்

றொழுக்காகவும் காதடைக்கும் துயர ஓலங்க ளுக்கு மத்தியில் தம் துயர உணர்வுகளைக் கட்டுப் படுத்திய வண்ணம் செயற்பட்டுக் கொண்டிருப்பது பார்க்கப் பெருமையாக இருந்தது.

வெளியே விடுதலைப் புலிகள் பம்பரம் போலச் சுழன்று வேகமாகப் பணிபுரிந்து கொண்டி ருந்தார்கள். ஆனால், அவர்களின் செயலில் நிதானம் இருந்தது; ஒழுங்கிருந்தது; நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பக்குவம் தெரிந்தது.

பொதுவாக கடலில் இருந்து பேரலை வந்தால் இன்னும் இரண்டு பேரலைகளை எதிர் பார்க்கலாம் என்று யாரோ அனுபவஸ்தர் கூற செய்தி வேகமாகப் பரவியது. இதற்கிடையில் தளபதி சூசையிடம் இருந்து அடுத்த பணிப்பும் வந்து விட்டதாகக் கூறினார்கள். கடலோரம் குடியிருந்த மக்களை அப்புறப்படுத்துமாறு அவர் முதலில் விடுத்த கட்டளையை மாற்றி கடலில் இருந்து ஒரு மைல் வரை உள்ள பகுதிகளில் வாழும் மக்களை பாதுகாப்பான தூர இடங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று தமக்கு கட்ளை வந்திருப்பதாக களத்தில் நின்ற புலிகள் கூறினார்கள். தங்கள் தளபதியின் ஆணையை நடைமுறைப்படுத்த கடற்புலிகள் குறி யாக நின்றார்கள்.



கடலிடம் இருந்து தம் மக்களை காப்பாற்ற கடற்புலிகள் தரையில் செயற்படுவது மனநிறைவாக இருந்தது. கடல் ஒரு புறம் தன் கொடுமையால் எம்மை மலைக்க வைக்க கடற்புலி வீரர்கள் மறுபுறம் தம் காரிய நேர்த்தியால் எம்மை வியக்க வைத்துக் கொண்டிருந்தார்கள்.

திலீபன் மருத்துவப் பிரிவு அணி ஒன்று வந்து சேர்ந்ததை அவர்களின் வண்டி உணர் த்தியது. அரசிய ல்துறை துணைப் பொறுப்பாளர் சுதா, கட்டளைத் தளபதி மங்களேஸ் பணிகளை ஒருங்கிணைத்துச் செய்து கொண்டி ருந்தார்கள். போரா ளிகளை ஊக்குவிப்பதிலும் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு தேறுதல் கூறுவதிலும் சளைக்காது ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணதில் இருந்து உதவிப் பொருட்களுடன் கத்தோலிக்க குருமார் வந்திரு ந்தனர். விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் கரையிலே

உடலங்கள் ஏற்றிய வண்டி புறப்படும்போது ஒவ்வொரு தடவையும் ஒப்பாரி ஓலம் நெஞ்சைப் பிளந்தது. இது போராளிகள் அல்லர். பொதுமக்கள் . ஆகவே உடல ங்களோடு வந்த உறவினர்களையும் ஏற்றிச் செல் லுங்கள். அரசியல் துறை சுதா தனது வழமையான நிதானக் குரலில் ஆணையிட்டார்.

ஒப்புக்கான ஒப்பாரியாக இல்லாமல் உயிர் ஒடுக் கி குடலறுக்கும் குமுறல் குளறலாக பீறிட்ட அவர்களின் ஆற்றாமை அலறல் செவிப்பறைகளை வேதனைப் பற்களால் குதறின. சாதாரணமாக ஒரு நாளில் ஒரு மரணத்தைப் பார்த்து துயரப்படும் எமக்கு அங்கே ஒரு தருணத்தில் பல துயரங்களைப் பார்க்கும் அந்தத் துயர நிலை. சுற்றிவர நின்றவர்களும் விக்கித்துப் போய் நின்றதைக் கண்டேன். தூக்கி ஏற்றிக் கொண்டிருந்த புலி வீரர்களின் கண்களில் இருந்தும் நீர் வழிந்தோடக் கண்டேன். இவர்க ளையா பயங்கர வாதிகள் என்ற அந்தப்பாதகன் கதிர்கா மன் உலக மேடைகளில் கொக்கரித்துக் கொண்டிருக்கிறான் என்ற ஆத்திரமும் வந்தது. இந்தத் துயரவேளையில் அந்தக் கொடியவனின் நினைவு ஏன் எனக்குவந்தது என்று எரிச்சலும் கசப்புணர்வும் ஏற்பட்டது.

பொறுப்பாளர் ஒருவர் அடுத்த பேரலை வரப் போகிறதாம் . அதற்கு முன் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக் கட்டாம். தொண்டு செய்ய போது மான போராளிகளும் ஊர் இளை ஞர்களும் இருக்கிறார்கள். நீங்கள் புறப்படுங்கள் என்றார்.

பயணப் பேருந்துகள் வரிசையாக நின்றன. முதலில் காயப்பட்டவர்களையும் உடல ங்களையும் ஏற்றிய வண்டிக ளைச் செல்ல அனுமதித்தார்கள். ஒன்றன் பின் ஒன்றாகச் சென்ற வண்டிகள் புதுக்காட்டுச் சந்தி யை அடைந்ததும் சில பளையை நோக்கித் திருப்பப்பட்டன. வேறும் சில கிளிநொச்சியை நோக்கித் திரும்பின.

கிளிநொச்சிக்குப் போகும் வழியில் இயக்கச்சி தமிழ்ப் பாடசாலையில் சில வண்டிகள் நின்றன. அங்கே இருக்கக் கூடிய வளங்களைக் கொண்டு மக்கள் தங்க வைக்கப்பட்டார்கள். சிறிது நேரத்தில் ஒரு முச்சக்கர வண்டி அங்கே நுழைந்தது. இரண்டு பேர் இறங்கினார்கள். சிவப்புச் சட்டைக்காரர்கள் TRO என்று எழுதியிருந்தது. கைகளில பால்மா பொட்டலங்கள் பிள்ளைகளுக்கு கரை ச்சுக் குடுங்கோ பக்கத்து வீடுகளில் கேட்டால் சுடுதண்ணீர் தருவார்கள் என்றனர் . அவர்களுக்கு வேறு முகாம்களுக்குப் போகும் அவசரம் . காலை முதல் வேறு முகாம்களுக்கும் போனதால் தாமதமாகிவிட்டது . பெரியவர்களும் பசியாய் இருப்பீர்கள் கெதியில் உணவு வரும் என்றார்கள்.

# புறக்கணிப்பும்! போராட்டமும்!

இதுவரை காலமும் சிங்களப் பேரினவாதத்தின் புறக்கணிப்புக்கு எதிராக தமிழினம் தமது போராட்டங்களை காலத்திற்குரிய வடிவங்களில் வெளிப்படுத்தி வந்த சூழ்நிலையில் தற்போது மற்றுமொரு சிறுபான்மையினமான முஸ்லிம் சமூகமும் அரச புறக்கணிப்பு தொடர்பாக விழிப்படைந்துள்ளன.

சுனாமிப் பேரழிவுக்குப் பின்னர் இவர்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய உணர்வாளர்களாக உருவெடுத்துள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் அதிக பேரழிவை ஏற்படுத்திய போது அதில் தமிழர் தாயகம் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி தமிழர்



தாயகத்தில் 16,934 பேர் உயிரிழந்துள்ளனர். இது தவிர 5,589 பேர் காணாமல் போயுள்ளனர்.

இவர்களில் அம்பாறை மாவட்டத்தில் அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. 10 436 பேர் உயிரிழந்துள்ளனர். 2207 பேர் காணாமல் போயுள்ளனர். அத்துடன் சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

இவ்வாறு அதிக உயிரிழப்பு, உடமைகள் இழப்பை அம்பாறை மாவட்டம் சந்தித்திருக்கிறது. தமிழ் முஸ்லிம் சமூகங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அரச நிவாரணப் பகிர்வில் அரசு இரு சமூகங்களையும் புறக்கணித்து பாரபட்சம் காட்டத் தொடங்கியிருப்பதை தற்போது முஸ்லிம் சமூகம் உணரத் தொடங்கியுள்ளது.

இதுவரை காலமும் இலங்கை அரசியல் வரலாற்றில் கடந்த இருபது வருடத்திற்கு மேலாக தமிழினம் தமது உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலை தோன்றியது. இது எதற்காக? அரை நூற்றாண்டு காலம் தமிழினத்தின் உரிமைகளை சிங்களத் தலைமைகள் வழங்க முன்வரவில்லை. தமிழ் அரசியல் வரலாற்றில் தந்தை செல்வா சிங்கள ஆட்சியாளர்களுடன் நடத்திய அகிம்சை வழிப்போராட்டங்கள் எதுவும் பயனளிக்காது போய்விட்டது. ஆனால் தமிழினப் போராட்டம் ஒரு பக்கம் எழுச்சி பெற்றுச் சென்ற சமயம் தமிழ் பேசும் சமூகத்தைத் தன் வயப்படுத்தும் தந்திரோபாய அரசியல் காய் நகர்த்தல்களிலே இரு பிரதான சிங்களக் கட்சிகள் ஆர்வம் காட்டின.

சிறுபான்மைக் கட்சிகளின் பலமின்றி ஆட்சி அமைக்க முடியாத தொரு சூழ்நிலை உருவாகி முஸ்லிம் பிரதிநிதித்துவங்களின் ஆதரவுடன் இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஆட்சியை நடத்தியுள்ளமை ஒரு புறமிருக்க தமிழினத்தின் விடுதலை நோக்கிய போராட்டம் நகர்வதற்கு முஸ்லிம் சமூகம் துணை நிற்கக் கூடாது. இரு சமூகங்களையும் பிரித்து முஸ்லிம்களை சிங்களத் தலைமைகளின் ஒட்டுண்ணிகளாக்கும் அரசியல் தந்திரோபாயங்கள் கனகச்சிதமாக கையாளப்பட்டு வந்தன. அரசோடு இணைந்து நிற்கும் கட்சிக்கு முழு, அரை அமைச்சுப் பதவிகள், தேசியப் பட்டியலில் எம்.பி பதவிகள் எல்லாம் வழங்கி செல்லத்தனத்தைக் காட்டி வந்தமை கடந்த கால அரசியல் பக்கங்களில் பதிவுகளாக உள்ளன. ஆனால் சுனாமிப் பேரழிவுக்குப் பின் தமது சமூகம் நிவாரண உதவிகளில் புறக்கணிக்கப்பட்டிருப்பது முஸ்லிம் சமூகத்திற்கு வெளிப்படையாகத் தெரிந்து விட்டது.

அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலர் இன்று ஆளும் தரப்பில் உள்ளனர்.

கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சர் பேரியல் அஷ்ரப், அமைச்சர் அதாவுல்லா, பிரதிஅமைச்சர் சேகு இசைதீன், அன்வர் இஸ்மாயில் இவர்கள் எல்லாம் ஆளும் தரப்புடன் இருந் தும் என்ன பயன் என்ற நிலை உருவாகியிருக் கிறது. இதனால் கொதி ப்படைந்த முஸ்லிம்கள் சிறிலங்காவின் 57 வது சுதந்திரமான கடந்த 4ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய தினம் ஜும்மாத் தொழுகையில் ஒன்று குழுமிய முஸ்லிம்கள் இந்தப் போராட்டத்தில்



குதித்தனர்.

கல்முனை, கல்முனைக் குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் போன்ற இடங்களில் இந்தப் போராட்டம் நடந்தது.

இவர்களது உணர்வுகள் பாதாதைகளில் காட்சியளித்தன.

* படுமோசமாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசம் நிவாரணம் அம்பாந்தோட்டைக்கா?

அம்பாறையில் புதிய குடியிருப்புப் பணி ஆரம்பம். அம்பாறைக் கரையோரப் பிரதேசத்திற்கு ஏன் இன்னுமில்லை.

* அரசின் புறக்கணிப்பா எமது அமைச்சர்களின், எம்.பிக்களின் அசமந்தமா? எங்கள் மடியில் விழுந்தது இடி, அரசின் மடியில் பரிசா எங்கே எங்கள் பங்கு.

* சமாதானத்தில் ஓரங்கட்டப்பட்ட முஸ்லிம்களுக்கு சுனாமி நிவாரணப் புனரமைப்பிலும் புறக்கணிப்பா?

* மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் எங்கே? உட்பட பல வாசகங்கள் தாங்கிய பதாதைகளை பேரணியில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

மருதமுனையைச் சேர்ந்த சுபைர் கருத்துத் தெரிவிக்கையில்:- தற்போது அரசு சுனாமி நிவாரணத்தில் பாரபட்சம் காட்டுகிறது.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற நிவாரணப் பொருட்களை எல்லாம் அம்பாந்தோட்டைக்கும், காலிக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பிரதேசம் தான் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம். ஆனால் நிவாரணத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம் என்றார்.

கல்முனைக் குடியைச் சேர்ந்த ஜிப்ரி நிஸ்மியா என்னும் பெண் அரசின் புறக்கணிப்பு தொடர்பாக தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தை அரசு புறக்கணித்து விட்டது.

கொபி அனான் வந்தாரு, கொலிங் பவல் வந்தாரு அம்பாந்தோட்டையைக் காட்டி அவங்கள அனுப்பித்தாங்க. எங்க மக்களில் அரசுக்கு அக்கறையிருந்திருந்தா கூட்டி வந்திருப்பாங்க. எங்கட ஆக்கள் அமைச்சர்களாக, எம்.பிக்களாக இருந்து என்ன பிரயோசனம்? கொபி அனானை இவங்களால கூட்டி வரமுடியாது போய் விட்டது தானே என மனவேதனைப்பட்டுக் கூறினார். ஆர்ப்பாடடம் நடந்தும் இது பற்றி அரசு கட்டாயமாக எந்த உறுதி மொழிகளையும் வழங்கவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் அரசு நிவாரணத்தில் புறக்கணிப்புச் செய்வதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஐ.தே.கட்சி உறுப்பினர் மயோன் முஸ்தபா ஆகியோர் வெளிப்படை யாகத் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் சமூகம் நிவாரணத்தில் புறக்கணிக்கப்படுகிறது. அரசு அம்பாந்தோட்டையில்தான் அதிக கவனம் செலுத்துவதாக ரவூப் ஹக்கீம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

அம்பாறை மாவட்ட ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான

**-பிரவீனா-**

மயோன் முஸ்தபா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்: அரசு தமிழர்களை மட்டுமல்ல முஸ்லிம்களையும் திட்டமிட்டுப் புறக்கணித்து வருகிறது. சுனாமிப் பேரழிவுக்குப் பின் இனவாதமும் பிரதேச வாதமும் தாண்டவமாடுகிறது. தென்னிலங்கையை மீளக் கட்டியெழுப்புவதிலேயே அரசு முனைப்பாக இருக்கின்றது. அதே கருத்தை அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான நிஜாமுதீனும் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் நிவாரணப் பகிர்வில் அரசு அம்பாந்தோட்டை, காலிப்பகுதியை ஒரு கண்ணோட்டத்திலும், வடக்குக் கிழக்கை இன்னொரு கண்ணோட்டத்திலுமே தமது பார்வையைச் செலுத்தி வருகின்றது.

கடந்த ஜனவரி 19ம் திகதி காலிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அவர்கள் காலி நகரம் நவீனமயமாக்கப்படும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

காலி நகரை நவீனமயமாக்கும் தேவை நீண்டகாலமாக இருந்து வந்தது. அது இப்போது நிறைவேற்றப்படப்போகிறது எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் தமிழர் தாயகத்தில் முல்லைத்தீவு நகரமும் ஆழிப்பேரலையால் அழிந்து கிடக்கிறது.

அப்படியானால் முல்லைத் தீவை நவீன நகராக்கும் தேவை ஏற்பட்டுள்ளது என்று ஏதாவது வார்த்தை முணுமுணுத்திருப்பாரா முடிய




வே முடியாது.

அம்பாந்தோட்டையும் காலியுமே சுனாமிப் பேரழிவின் முகவரிகளாக சர்வதேச சமூகத்திற்கு அரசு காட்டமுனைகிறது. அத்துடன் அம்பாந்தோட்டைப் பகுதிக்கான அனர்த்த நிவாரணத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற போர்வையில் தெருவெல்லாம் கூத்தடித்து வீட்டுத்திட்டங்களுக்கான அத்திவாரக்கற்களும் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சர்வதேச சமூகத்திலிருந்து வரும் உதவிகள் எல்லாம் தெற்கே நகர்த்தப் படுகின்றன.

வெளிநாட்டுப் படைகளில் குவிக்கப்பட்டு மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன. தகரத்திலான தற்காலிக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நிரந்தரமான வீட்டுத் திட்டங்களுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேவேளை அம்பாந்தோட்டை மீனவர்களுக்கு மல்ரி போட் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்று மாதகாலம் கடலில் தங்கி நின்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியும். பிடிக்கும் மீன்களை படகில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் குளிரூட்டப்பட்ட அறை இத்தனை வசதிகள் அவர்களுக்கு தாரா



ளமாகக் கிடைக்கின்றன.

வடக்குக் கிழக்கில் மீனவர்களுக்குரிய மீன்பிடிப் படகுகள் மற்றும் உபகரணங்கள் கிடைக்கவில்லை. அம்பாந்தோட்டை மீனவர்களுக்கு மல்ரி போட். அம்பாறை மீனவர்களுக்கு கட்டுமரத்துக்கு கூட வழியில்லாத பரிதாப நிலை. இதனை இப்போதுதான் தமிழ் பேசும் சமூகம் உணரத் தலைப்பட்டிருக்கிறது. காலம் கடந்து ஞானம் பிறந்திருக்கிறது. முஸ்லிம் சமூகம் எழுச்சி கொண்டு சிங்களப் பேரினவாதத்தின் திசை திருப்பலை முறியடிக்க வேண்டும்.

சிங்களத் தலைமைகளுடன் கூட்டுமுகாமில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இனியாவது சிங்களப் பேரினவாதத்தின் உண்மைத் தன்மையை உறுதியாக உணர வேண்டும். அவ்வாறான தொரு சூழல் உருவாகுமானால் தமிழ் பேசும் சமூகங்களின் ஐக்கியம் பலமானதாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பேரழிவை தமிழர் தாயகம் சந்தித்திருக்கிறது. தமிழ்பேசும் சமூகம் அவலங்களைச் சந்தித்திருக்கிறது. அரசியல் சுயலாபங்களுக்கு அப்பால் பெரியதொரு பேரழிவினால் தேசம் சிதைந்து கிடக்கிறது.

இந்நிலையில் இரு சமூகமும் ஒன்றுபட்டு நின்றால் சிங்கள தேசத்தின் அரச புறக்கணிப்பை முறியடிக்க முடியும். தமிழினம் கடந்த 50 வருடமாக ஏமாற்றப்பட்ட சமூகம். இப்போதும் சிங்களத் தலைமைகள் ஏமாற்ற முயற்சிக்கின்ற போதிலும், தமிழினம் பலமாக நிற்பதால் அவர்களால் தான்தோன்றித்தனமாக ஏமாற்றி ஓடிவிட முடியாது.

சர்வதேச சமூகம் அரசியல் ரீதியாகவும், சுனாமிப் பேரழிவின் பின்பும் இலங்கையை அக்கறையுடன் பார்ப்பதால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தப்பமுடியாது.

ஆனால் முஸ்லிம் தலைமைத்துவங்கள் ஏதாவது ஆட்சியமைக்கும் அரசின் பொறியில் வீழ்ந்து விடுவார்கள். இதனால் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும் என்பது சிங்கள ஆட்சியாளர்களின் நிலைப்பாடாகும்.

எனவே எதிர்காலத்திலும் தமிழினம் ஏமாற்றப்பட்டது போன்று முஸ்லிம் சமூகமும் ஏமாற்றப்படாமல் இருப்பதானால் உறுதியாக நிற்க வேண்டும். தமிழினத்தின் வேண்டுதல்களுக்கு தீர்வு முயற்சிகளுக்குப் பக்கபலமாக நின்று சிங்களப் பேரினவாதத்தை முறியடிக்க வேண்டும்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் அரசு புறக்கணிப்பில் ஈடுபடுவது மட்டுமல்ல எதிர்காலத்தில் இன்னும் எத்தனை எத்தனை குழிபறிப்புக்கள் முஸ்லிம் சமூகத்தின் மீதும் மேற்கொள்ளலாம். எனவே முஸ்லிம் சமூகம் சிந்திக்க வேண்டிய காலமிது.

# மாலையில் கிறிஸ்மஸ் விழா மறுநாள் காலை மரண ஓலம்



மார்வின்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி, டச்பார் போன்ற பிரதேசங்கள் சுனாமியின் கோரப்பசிக்கு அதிகளவு பலியான, பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தற்போது தமது உறவுகள், உடமைகள் என அனைத்தையும் இழந்து நலன்புரி நிலையங்களில் தற்காலிக கூடாரங்கள் அமைத்து பொது இடங்களில், பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். டச்பார் பகுதி அகதிகள் சிசிலியா பெண்கள் பாடசாலைகளில் தங்கியிருந்தனர் தற்போது பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ளதன் காரணமாக மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயத்தில் மீளமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் பறங்கியர் என்று அழைக்கப்படுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 48 வீதத்தைப் பறங்கியர் கொண்டிருப்பதனால் இவர்களுக்கு அதிகளவான பாதிப்புக்களை சுனாமி ஏற்படுத்தியிருக்கின் றது. உயிரிழந்தோர் எண்ணிக்கை விகிதா சாரத்தின்படி தமிழ், முஸ்லிம், பறங்கியர் என்ற அடிப்படையில் 0.79, 0.08, 5.57 எனப் பறங்கியர் இனமே அதிகள வாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. 3000 பேர் வரைக் கொண்ட இப்பிரதேசத்தில் 169 பேர் சுனாமியினால் கொல்லப்பட்டுள்ளனர். 290 குடும்பங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல குடும்பங்கள் இருப்பிடங்கள், தொழில் உபகரணங்கள் என்பவற்றையெல்லாம் இழந்தவர்களாக மிகவும் அதிக பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகக் குறைந்த பரம்பரையைக் கொண்ட பறங்கியர் இனத் தினரிடம் அவர்களின் பாதிப்புத் துயரங்களை அறிந்து கொண்டோம்.

அந்த வகையில் சிங்கள மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கின்ற டச்பார் பகுதியைச் சேர்ந்த அகதிமுகாமின் பொறுப்பாளர் மாவின் டச்பார் பிரதேசம் பற்றியும், உயிர் இழப்புக்கள், தமது இயல்பு வாழ்க்கை, மீள்குடியமர்த்தல் பற்றியும் நிவாரணக் கொடுப்பனவுகள் பற்றியும் இவ்வாறு கூறுகின்றனர்.

எங்களது பிரதேசத்தில் அதிகளவு உயிரிழப்புக்கள், பொருளிழப்புக்கள் ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. எங்கள் டச்பார் கிராமத்தில் 145 பேர் மொத்தமாக இறந்துள்ளனர். இது தான் எங்கள் அனைவருக்கும் பெரிய கவலை. இது எங்களால் என்றுமே மறக்க முடியாது. சுனாமித் தாக்கம் ஏற்படுவதற்கு முதல் நாள் எங்களுடன் ''கிறிஸ்மஸ்'' விழாக் கொண்டாடி சந்தோசமாக இருந்தவர்கள் மறு நாள் காலை வேளையிலே எங்களை விட்டுப் பிரிந்து விட்டனர். பலர் தூங்கிக் கொண்டிருந்த வேளையிலே இந்தச் சுனாமி அலை அடித்துச் சென்று விட்டது. இவைகளை மறக்க முடி யாமல்தான் ஒவ்வொருவரும் தினம்தினம் அழுது கொண்டிருக்கிறார்கள். இந்த இழப்பை எப்படி ஈடு செய்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை.

எங்களது பிரதேசத்தில் 266 மொத்தக் குடும்பங்கள் வாழ்ந்தோம். இந்தக் குடும்பங்களின் அங்கத்தவர்களில் இறந்தவர்கள் 145 பேர் எங்களது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். மற்றும் வெளிக் கிராமங்களிலிருந்து கிறிஸ்மஸ் கொண்டாடவந்தவர்கள் 15 பேர் அடங்கலாக மொத்தம் 169 பேர் எங்களது டச்பார் கிராமத்தில் அலை யினால் இறந்துள்ளனர். 200 க்கு மேற்பட்டோ ருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு பாடசாலைகள் திங்கள் கிழமை ஆரம்பமாகியுள்ளது. நாங்கள் முகாமைவிட்டு வந்ததன் பின்பு எமது முகாமில் உள்ள மாணவர்கள் கல்வியை எந்த விதத்திலாவது தொடர வேண்டும் என்று கொஞ்சப் பிள்ளைக்ளுக்காக சிசிலியாவில் போய்க் கேட்டுள்ளோம். அவர்கள் 15 ஆம் திகதிக்குப் பின் சொல்கின்றோம் என்று கூறியுள்ளார்கள். க.பொ. சா.தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை கடந்த திங்கள் கிழமை சேர்த்துள்ளார்கள். அத்துடன் டச்பாரிலுள்ள பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களுக்கு சாகிறா கல்லூரிக்கு வந்து கல்வி கற்கலாம். அதற்கான வசதிகள் செய்து கொடுப்பதாகவும் சொல்லியிருப்பதனால் அந்தப் பிள்ளைகள் அங்கே கல்வியைத் தொடர ஆயத்தமாக உள்ளனர். அவர்களுக்கு பாடசாலைச் சீருடை, புத்தகங்கள், புத்தகப்பை போன்றவை இல்லாமல்தான் பாடசாலைக்குச் செல்கிறார்கள். இவர்களுக்கான அனைத்து வசதிகளையும் பெறுவதற்கு முயற்சிகள் செய்து கொண்டிருக்கின்றோம்.

நிவாரணம் என்று கூறும்போது அரசினால் ஆரம்பத்தில் எந்தவிதமான உதவிகளும் வழங்கப்பட வில்லை. கிட்டத்தட்ட 28 நாள் ''எகெட்'' நிறுவனத்தினரும் வேறு பல அரச சார்பற்ற நிறுவனங்களும் தான் உதவிகளைச் செய்தார்கள். நிவாரணப் பொருட்கள் பெருமளவு கிடைக்கின்றன. அத்துடன் அண்



மையில் தான் உயிரிழந்தவர்களுக்கு 15,000 ரூபா அனைவரது குடும்பத்தாருக்கும் வழங்கிருந்தது. அத்துடன் ஒரு மாத காலத்திற்கான செலவுகளுக்காக பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் 5,000 ரூபா வழங்கப்பட்டது. அது மட்டுமின்றி பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு 2500 ரூபா தருவதாகக் கூறியுள்ளனர். அதுவும் ஓரிரு தினங்களில் தருவதாகக் கூறியுள்ளனர். நிவாரணங்களில் தற்போது எந்தவிதக்குறையும் இல்லை.

**-அ.நிஷாந்தன்-**

மீள் குடியமர்த்தலுக்கான கூடாரங்கள் அரசால் வழங்கப்படுமென பிரதேச செயலாளர் கூறியுள்ளார். ஆனால் எங்களுக்கு கூடாரங்களில் சிலர் வாழ்ந்து கொண்டு சிலர் கட்டடங்களில் வாழ்வது விருப்பமில்லை. நாங்கள் அனைவரும் டச்பாரில் எவ்வாறு இருந்தோமோ அவ்வாறே ஒன்றாகவே எங்கேயேனும் இருக்க விரும்புகிறோம். நாங்கள் எப்படி நெருக்கடியாக இடம் போதாததர்க இருந்தாலும் ஒன்றாகவே இருக்க விரும்புகிறோம். அதுமட்டுமல்லாது, வேறு வேறு இடத்தை அரசாங்கம் மீள்குடிய மர்த்தல் தொடர்பாக தெரிவு செய்து அங்கே குடியமர்த்த தீர்மானித்தாலும் எங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் கூடியமர்த்த வேண்டும் என்றுதான் நாங்கள் அரசாங்க அதிபரிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளளோம்.

அது மட்டுமின்றி நாங்கள் மீண்டும் எங்களது இனத்தை அழித்த அந்த டச்பார் பகுதிக்குச் சென்று குடியேறமாட்டோம். அத்தோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலாளர் சொல்லியிருக்கிறார் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைக் காட்டி அதனுள் இருப்பவர்கள் மீளக்குடியேறலாம். அது பிரச்சினை இல்லாத பகுதி என்று கூறியிருக்கிறார். ஆனால் அது அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இந்தப் பகுதியில் வாரது என்றால் ஒரு முப்பது குடும்பந்தான் வரும். மற்றக்குடும்பங்கள் அந்த 200 மீற்றர் எல்லைக்குள் தான் போகுது. அதனால்தான் நாங்கள் போவதென்றால் எல்லோரும் போறது. இல்லையென்றால் ஒருத்தரும் போறதில்லை என்ற முடிவில் இருக்கிறோம் என்று கருத்துத் தெரிவித்தார்.

மற்றுமொருவர் தனது நாலு பிள்ளைகளைப் பறிகொடுத்திருக்கின்ற பாலசுப்பிரமணியம் விக்கினேஸ்வரன் அவர்கள் சுனாமியின் தாக்கத்தினால் அவரது பாதிப்புக்கள், இழப்புக்கள் பற்றிக்கூறுகிறார்.

நாங்கள் அன்று விடியம் 4.00 மணியளவில் கடலுக்கு போயிற்றம். பிறகு மீன் எல்லாம் புடிச்சிட்டு மீன் பாழுதாப்போயிரும் என்று போட்டு 8.35 மணியிருக்கும் தோணியைக் கரை சேர்த்து வியாபாரிக்கு மீனைக் கொடுத்துவிட்டு திரும்பிப் போறதுக்குத்தான் நிண்ட. அந்த நேரத்திலதான் ஒரு சின்னதாய் ஒரு கடல் வந்தது. கடல் வந்து தோணியை இழுத்திட்டுப்போக நாங்க பார்த்தம் பெருக்குதான் வருது என்று போட்டு இழுத்து வச்சம். திரும்பிப் பார்த்தம் இன்னொரு பெருக்கு உரக்க வந்திச்சு. திரும்ப நாங்க பாத்தம் ஓடுவம் எண்டு இருக்கக்குள்ள ஒரு பக்கம் சவுக்கு மரம் அங்காலப் பக்கம் போக இயலாது என்று ஒன்றும் தெரியாம நிக்கக்குள்ளதான் எங்களையும் சேத்து தோணியை அடிச்சு உடைச்சித்து தண்ணி கொண்டு போனது. அப்பதான் ஒரு மாதிரி மரம் ஒண்டப் பிடிச்சிட்டு மரத்துல ஏறித்து நிண்ட நான் அப்பவும் அந்த மரத்துத் தலப்புக்கு தண்ணி வந்துட்டு. இப்படி ஏறி இழுத்துட்டு எல்லாத் தண்ணியும் வடிஞ்சப் பிறகு இங்க வந்து பாத்தா எங்கட ஊரே இல்ல. பிறகுதான் ஆஸ்பத்திரியில என்ட மனைவி இருக்கா என்று தகவல் வந்திச்சு. அதோட என்ட பிள்ளையில ஒன்று றோட்டுல நிண்டது. ஓடித் தப்பிட்டு என்று அறிஞ்சன். அதுல ஐந்து பிள்ளைகளில நாலு பேர் கடலோட போயிட்டுகள். ஒரு பிள்ளைதான் இப்ப எனக்கு இருக்கு. எங்களுக்கு நிவாரணங்கள் கிடைக்குது. வீடு வாசல்தான் கிடைக்கல்ல. மற்ற அனைத்து வசதிகளும் கிடைக்குது. ஆனால் மீண்டும் டச்பாருக்கு போக எங்களுக்கு விருப்பமில்லை. வேறு இடம் தந்தால் நாங்கள் போயிருப்போம். நாங்கள் கடல் தொழில்தான் செய்வது. ஆனால் இன்னும் கடலுக்குப் போவதற்கு மனம் விருப்பமில்லாமல் இருக்குது. கடை வைச்சிருந்த நாங்கள். பிறகு கடைத் தொழில்தான் செய்ய வேண்டும். அத்துடன் எங்களது டச்பார் மக்கள் அனைவரும் இந்த முகாமில் இருப்பதனால் சுகாதாரம் சிறப்பாக உள்ளது என்றார்.

மற்றுமொருவர் தனது பேரப்பிள்ளைகள், மகனின் மனைவி, போன்றோர்களை இழந்த அனாட் ராகல் என்னும் ஒருவர் தனது கருத்தை இவ்வாறு தெரிவித்தார்.


எங்கட குடும்பம் மிகவும் துயரமான நிலையிலேயே இன்று இருக்கிறது. எங்களது குடும்பத்திலேயே ஆறு பேரை இழந்து நிற்கின்றோம். சுனாமி என்பது நாங்கள் எதிர்பார்க்காத ஒன்றுதானே. காலையில் சந்தோசமாக எழுந்து நாங்கள் எல்லோரும் கோயிலுக்குப் போய்வந்து சமைக்கிற நேரம்தானே, சமைக்கிறத்திக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிற நேரம்தான் எதிர்பாராத விதமாக எங்களை வந்து சுனாமி தாக்கினது. இதனால் எங்களது உடமைகளோ, எந்த ஒரு பொருளையோ எடுத்துக் கொள்ள முடியாத ஒரு நிலையில, ஏதோ ஒரு மிருகம் ஒன்று எங்களைத் துரத்தி வந்தது போல் வேதனையில் நாங்கள் ஓடினது. இப்படி ஓடிக் கொண்டு ஒரு இடத்தில நாங்கள் போய்ச் சேருகிற நேரத்தில எங்கட குடும்பத்தில ஆறு பேரை நாங்கள் இழந்திட்டம். இப்படி இழந்து அனாதரவான நிலையிலதான் இந்த முகாமில நாங்கள் இருக்கிறோம். நாங்க இடம்தான் இல்லாம தெருக்களில இருப்போமே தவிர டச்பார்ல மீண்டும் போய் வாழ்வதற்கு எங்களுக்கு விருப்பமில்லை. எங்கள அங்கு குடியமர்த்த ஏற்பாடு செய்யவும் கூடாது. நிவாரணம் என்று சொல்லி ஒரு மாதத்துக்குப் பிறகுதான் அரசாங்கம் தருகிறது. அதற்கு முன்பு எங்களை அரசாங்கம் திரும்பிப் பார்க்கவில்லை. ''எகெட்'' போன்ற அமைப்புக்கள்தான் அது வரையும்



எங்களப் பாதுகாத்தவங்க. 28 நாளைக்குப் பிறகுதான் அரசாங்கத்துல இரு ந்து ஒரு முஸ்லிம் அமைச்சர் ஒருவர் வந்து சிசிலியா பாடசாலையில் அகதிமுகாமிலி ருக்கும் போதுதான் வந்து கதைத்தவர். எங்க ளுக்கு அனைத்து சேவைகளையும் உடன டியாக

**''சுனாமித் தாக்கம் ஏற்படுவதற்கு முதல்நாள் எங்களுடன் ''கிறிஸ்மஸ்'' விழாக் கொண்டாடி சந்தோசமாக இருந்தவர்கள் மறு நாள் காலை வேளையிலே எங்களை விட்டுப் பிரிந்து விட்டனர். பலர் தூங்கிக் கொண்டிருந்த வேளையிலே இந்தச் சுனாமி அலை அடித்துச் சென்று விட்டது. இவைகளை மறக்க முடியாமல் தான் ஒவ்வொருவரும் தினம்தினம் அழுது கொண்டிருக்கிறார்கள்.''**

வழங்கியவர். சீனி, மா, உள்ளிட்ட உணவுப் பொருட்கள் சகலவிதமான தேவை களையும் அப்போது நிறைவு செய்தவர்கள் ''எகெட்'' நிறுவனத்தினரே தான். அரசாங்கம் இப்பதான் வந்து 5000 ரூபாய்க் காசும் 6 மாதத்துக்கான நிவாரணக் கூப்பனும் இரண்டு வாரங்களுக்கான பாவனைப் பொருட்களும் தந்திருக்கின்றது. பலரும் வந்து பதிகின்றனர். ஆனால்



நிவாரணம் மிகவும் குறைவானவர்களிடமிருந்தே கிடைக்கிறது. ஆனால் அரசாங்கம் உயிரிழப்புத் தொகையாக ஒருவருக்கு 15,000 தீர்மானித்திருக்கிறார். ஆனால் இந்த 15,000 ரூபாவால் முடியுமா? அந்த உயிரைத் திருப்பி எடுக்க என்று கேட்டார். அத்துடன் தனது கணவரையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்து தற்போது தனிமையில் தமக்கு நேர்ந்த கொடுமையை இவ்வாறு அழுது புலம்பிக் கொண்டுதான் எங்களுக்குத் தெரிவித்தார்.

*தொடர்ச்சி 19ஆம் பக்கம்...*




# கண்ணீர் விட்டே வளர்த்தோம்

**''தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் போது, தென் தமிழீழப் பகுதிக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகையில் சந்தித்த சம்பவங்கள், எதிர் கொண்ட நடவடிக்கைகள், கற்றுக் கொண்ட அனுபவங்கள் என்பன இங்கு நினைவு கூரப்படுகின்றன.தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள இந்த வேளையில் உணர்வு பூர்வமிக்கதான எங்களுடைய போராட்டத்தை விளக்குகின்றது''.**

எப்படியோ மட்டக்களப்புக்குக் கொண்டு செல்ல தற்கு ஆயுதம் கிடைத்து விட்டது! இரண்டு 45 ரக சுழல் துப்பாக்கிகள் மட்டக்களப்புக்கு என ஒதுக்கப்பட்டு விட்டன.எங்கள் முகத்தில் பூரிப்பு. இதைக் கொண்டு செல்வதற்காக மட்டக்களப்பிலிருந்து பிரான்சிஸ் யாழ்ப்பாணம் வந்திருந்தான்.

தற்போது புலிகளின் ஆதரவாளராகஇருப்போரை 'தடா' சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுவதாக மிரட்டிக் கொண்டிருக்கும் இந்திய அரசிடம் அப்போது (1983இல்) பயிற்சி பெற்ற டேவிட் பயிற்சி முடித்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தான்.இந்த இருவருடன் நானும் மட்டக்களப்புக்குப் புறப்பட ஆயத்தமானேன். கூடியவரை மிதிவண்டியிலேயே செல்வதென்பது எமது திட்டம்.மிதிவண்டியில் ஆகக் கூடியளவு மதவாச்சி வரை செல்ல முடியும்.அதற்கப்பால் தொடர்ச்சியாக மிதிவண்டி ஓட்டுவது கடினம்.இடையில் தங்குவதென்பதும் முடியாத காரியம். மதவாச்சி வரை காட்டுப் பாதைகளூ டாகச் செல்வதெப்படி? இதற்குத் தான் உதவுவதாக அப்போது போராளியாக இருந்த தவம் அண்ணை உறுதியளித் தார். ''அவ்வளவும் போதும். அதற்கு மேல் நாங்கள் பார்த்துக் கொள்ளுவம்'' என்று கூறினோம்.

இரு மிதி வண்டிகளில் எமது பிரயாணம் ஆரம்பமாகியது.நானும் டேவிட்டும் ஒரு மிதிவண்டியில், மற்றையதில் தவம் அண்ணையும், பிரான்சிஸ்சும்.இன்று கொழும்புப் பாதையாகி விட்ட கொம்படிப் பாதை அந்தக் காலத்தில் ஆள் நடமாட்டமில் லாத இடம். இதனூடாகச்செல்லும் ஒவ்வொரு தடவையும் முள்ளுக் குத்தி மிதிவண்டிக்குக் காத்துப் போய்விடும். அப்படியானால் இடையில் உதவியே கிடைக்க வாய்ப்பில்லை. இதைக் கூட வந்தவர்களுக்குச் சொன்னேன். மிக அவதானமாகப் போனதால் மிதிவண்டிக ளுக்குக் காற்றுப் போகாத முதல் பயணமாக அமைந்தது.நாம் கிளிநொச்சி யைச் சென்றடைந்தோம்.அங்கு எமக்குத் தெரிந்த ஒரு இடத்தில் தங்கியிருந்தோம்.

**மு.மனோகரன்**
**(கரும்புறவை பசீர்காக்கா)**

பரந்தனில் சிவதாசன் என்ற துரோகிக்கு மரணதண்டனை வழங்குவ தென்று ஏற்கெனவே தீர்மானித்திருந்தோம். கிளிநொச்சிக்கு வந்த இடத்தில் அதனை நிறைவேற்றாமல் போனால், பின்னர் இப்பகு திக்கு ஆயுதம் கொண்டு வரும் போது தா ன் நிறைவேற்ற முடியும். பெரும்பாலும் பரந் தன் சந்தியில் தான் சிவதாசன் நிற்பான். அப்பகுதியில் இராணுவ ரோந்து அடிக்கடி நிகழும். ஆனாலும், அதற்காக இதனைத் தள்ளிப் போட முடியாது. ஆகவே ஒரு தடவை இராணுவம் ரோந்து வந்து சென்ற தும் உடனடியாக இதனை நிறைவேற்றுவ தென தீர்மானித்தோம். ஏனெனில், அடுத்த ரோந்துக்கு சிறிது நேரம் செல்லும். ஆனால் தண்டனையை நிறைவேற்றப் போன அன்று நாம் எதிர்பார்த்த நேரத்திற்கு இராணுவம் வரவில்லை. இந்தத் துரோகிக்காக எமது பயணத்தை ஒத்திப் போடவும் முடியாது. எனவே இப்போதே நிறைவேற்றுவோம் எனத் தீர்மானித்து அப்படியே செய்தோம்.

தண்டனையை நிறைவேற்றி விட்டு 150 யார் கூடச் சென்றிருக்க மாட்டோம்.அதற்குள் இராணுவம் வந்துவிட்டது.பரந்தன் சந்தியில் நின்ற எவருமே எம்மைக் காட்டிக் கொடுக்க வில்லை. ஆதலால் தப்பினோம்.

உடனடியாக இடத்தை மாறி வேறு இடத்தில் நிற்பதற்குரிய ஒழுங்குகளை அப்போதைய கிளிநொச் சிப் பிரதேசப் பொறுப்பாளராக விளங்கிய மாறன் செய்திருந்தார்.

அடுத்த நாள் எமது காட்டுவழிப் பயணம் ஆரம்பமானது. இடையிலே மிதிவண்டிக்குக் காத்துப் போய் விட்டதால் நீண்ட நேர நடை.ஒருவாறு வவுனியா மாவட்டத்தி ற்குள் போய் விட்டோம். இதேவேளை யாழ்ப்பாணத்தில் அலன் தம்பதிகளைக் கடத்தியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் வேண்டுகோளின் பிரகாரம் அவர்களை அன்றைய தினம் விடுதலை செய்வதாகக் கூறியிருந்தது. ஆகவே அன்று வடபகுதியெங்கும் இராணுவம் தனது ரோந்தைத் தீவிரமாக்கியிருந்தது.

ஓமந்தையில் இருந்த அகதிகள் முகாமருகே நாம் சென்ற போது, இரு இராணுவ வண்டிகள் வேகமாக எம்மைத் தாண்டிச் சென்றன.அதன் பின் எமது கோலத்தில் சற்று மாறுதல்கள் செய்தோம். அப்பாவிக் கிராமவாசி போல் தலைப்பாகை கட்டியிருந்தார் தவமண்ணை.சற்றுத் தூரம் சென்றதும் ஊர்ந்தபடியே இரு இராணுவ வண்டிகள் வந்தன.எமது இரு மிதிவண்டிகளுக்குமிடையில் அதிக தூரம் இடைவெளி இருந்தது.

தொடரும்.....

# போர் உலா

**''உலக மகா கவிஞருள் ஒருவரான ஷெல்லி இறக்கும்போது வயது 29. மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இறக்கும்போது வயது 29. யுகக் கவிஞன் என அழைக்கப்பட்ட பாரதி இறக்கும் போது அவனுக்கு வயது 39. இந்நூலாசிரியன் இறந்த போது இவன் வயது 20 தான்''**

## கப்டன் மலரவன் 05

இதயன் சலாமைச் சொறிய ஆரம்பித்தான். ஏற்கெனவே கொட்டாவி விட்டவனுக்கு நல்லா ஏற, அருகே கிடந்த கட்டையால் வீசினான்.

"ரோட்டால வந்த அம்மா இஞ்சதான்ரா வாறா".

அம்மா களைப்புடன் குடத் தை இறக்கி வைத்துவிட்டு பாசமாய்ச் சிரித்தாள்.

"என்ன பிள்ளையள் வாடிப் போனியள்.ராவும் நித்திரை முழிப்புப் போல. குடத்துத் தண்ணியில கையை க் கழுவி விட்டுச் சாப்பிடுங்கோ, பிறகு உடம்புக்கு ஏதும் செய்தாலும்"

எல்லாம் அறிந்தவள் போல கூறிச் சிரித்தாள். சிறுமி பையை வைத் து விட்டு ஆயுதங்களைப் பார்க்கப் போனாள்.

"அது வெடிக்கும் தங்கச்சி கவனம்."

"இல்ல இல்ல" என மழலை சிரித்தது. "நீங்கள் சாப்பிட்டியளோ?"

"இல்ல,நீங்க சாப்பிடுங்கோ. நான் பிறகு சாப்பிடுறன்."

"அது சரிவராது.எல்லோரும் ஒன்றாய்த் தான் சாப்பிடோணும்."

இதயன் சிறுமியைத் தூக்கி வந்து மடியில் வைத்துக் கொண்டான். பள்ளியால் வந்த அவள் தண்ணீரைக் குடித்துவிட்டுத் தான் வந்திருந்தாள்.

கவளம் கவளமாய்ச் சோற் றை அம்மா திரட்டித் தர உண்டு முடித் தோம். தயிர், நெய் வாசனை தாளவில் லை. "திறமான சாப்பாடு"சலாம் சொ ன்னான். "அம்மான்ர பிள்ளையள் என்ன செய்யினம்?' உணவு இறங்கியவுடன் பழங்கணக்குக் கிளறத் தொடங்கினான் சலாம் "மூத்தது உங்களோட.மற்றது உது. இரண்டும் தான்" ஐந்தாறு அம்மா க்கள் இப்படி உணவுடன் படையெ டுக்க களைத்துப் போன நாங்கள், ஐயோ காணும் எனக் குழறினோம்.

அருவி பாய்கிறதா, அன்பு பாய்கிறதா தெரியவில்லை. பிற்பகல் 6.30. குமுழமுனையில் அரைவாசி மக்களைக் கண்டு கையசைத்த வண்ணம் நகரத் தொடங்கினோம். வசந்தனின்றி.

எனக்குப் பின்னால் இருக்க மனம் வராததால் முன்னே சென்று மட்காட்டில் ஏறிக் கொண்டேன். வாகனம் குலுக்கிய படி மெதுவாக அசையத் தொடங்கிய பின்னர் தன் வேகத்தைக் கூட்டியது. நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். வசந்தனை இப்ப யாழ்ப்பா ணம் கொண்டு போய் இருப்பாங்களோ? ஓ,என விரைவாகத் தலையாட்டினேன். பார் வெளிக்கிட்டு கொஞ்ச நேரத்தில் ஒன்று ம்...ம்... இந்தச் சண்டையில் முன்வரிசையில் அவனையல்லவா எதிர்பார்த்தன்? உயிருக்கேதாவது? சீ! அப்படியிராதென்று நினைக்கிறன். மூவரும் அமைதியடைய ரைக்ரர் சில் லு தூரத்தை விழுங்கிக் கொண்டிருந் தது.

மேற்கில் சூரியன் மௌன மாக அமிழத் தொடங்கினான்.அவனின் அந்த ச் செந்நிற கதிரினால் வானமே சிவப்புக் குழம்பாகத் தோன்றிற்று. முகி ல்களிற் கூட அந்தச் செம்மை பற்றித் தெறி த்தது.

பெரிய வயல் வெளியில் தேங்கிய நீர் கூட சிவப்பாகத் தெறித்து சோகம் கொண்டாடியது. செவ்வானத் திடையே வெண்ணிறக் கொக்குகள் ஊடுருவிப் பறந்தன. மாடுகள் பட்டியா ய்த் திரும்பிக் கொண்டிருந்தன.ஒரு தாய்ப் பசுவைக் கன்று இடைவிடாது மடியை முட்டி உபத்திரவம் செய்து கொண்டே போயிற்று. ஆவலுடன் அ தைத் திரும்பிப் பார்த்தேன். நெஞ்சி லோர் வருடல்.

"மச்சான், அதில துவக்கோ ட நிற்கிறவருக்குப் பக்கத்தில நிப்பாட் டு." வாகனம் ஊர்ந்து சென்று நின்ற து.ஒரு தந்தையும் மகனுமாய் இருக்க



வேண்டும்.

தந்தைக்கு 70 வயதளவிலு ம் மகனுக்கு 45 வயதும் இருக்கும் போல தென்பட்டது. வீட்டு வாசலில் குடும்பத்துடன் கதைத்துக் கொண்டிரு ந்தார். "என்ன தம்பியவை வேணும்?"

"ஒன்றுமில்ல நீங்கள் கதை யுங்கோ. தண்ணீக் கான் சரிஞ்சிட்டுது போல, அதப் பார்க்கத் தான் நிற்பாட்டி னாங்கள்" நல்லாப் பொய் சொல்லு றான் என இதயன் முணுமுணுத்தான்.

"என்னப்பா போறியள், எப்ப வருவியள்?'என்றாள் அம்மா.ஐயாவின் மனைவியாக இருக்க வேண்டும்.

''இண்டைக்குத் தங்கம் அவசரமாகப் போறம்.எப்ப வாறமோ சொல்லேலாது. ஏன்,வீட்டில எல்லாம் கிடக்குத் தானே? ''

"இஞ்ச எல்லாம் கிடக்கு. பேரனுக்கு இரண்டு நாளா காச்சல். அதுதான் யோசிக்கிறம்."

"அப்படியேதும் அவசரம் என்றால் பக்கத்து வீட்டு சின்னப்பு வைக் கூப்பிடு. அவன் வருவான். நானும் சொல்லிட்டுப் போறன்" வீட்டுக் குள்ளிருந்து மருமகள் வெளிக்கிட்டாள்.

"இந்தாங்கோ சாப்பாடு"

"என்ன ஆக்கினனி?' மகன் கேட்டான். "புட்டும் மீன்குழம்பும் இரு க்கு. உங்களுக்குப் பிடிச்ச சாப்பாட் டத்தான் செய்தன்"

அன்புடன் மனைவியைப் பார்த்தான். "மெய்யேப்பா உவன் சின்ன வனுக்கு காய்ச்சல் மாறுதில்லை. கெதியா வந்தியள் என்றால் ஒருக்கா முள்ளியவளைப் பக்கம் கொண்டு போகலாம்."

"அம்மா, தம்பி இப்பவும் வாந் தி எடுத்திட்டான்" இது மூத்த மகள். "நில்லப்பு வாறன்"

உள்ளே ஓடிச் சென்று குழந் தையைத் தூக்கிக் கொண்டான்.அருகே மனைவி. முற்றத்தில் வைத்து முத்தமி ட்ட பின் கொடுத்தான். "நான் கெதியா வந்திடுவன்.என்னைப் பாராமல் நீ மருந்தைப் போய் எடு."

"அப்பு இந்த முறை எத்தி னை ஆமியள் சுடுவியள்?'பேரன் இடுப் பில் கை வைத்தபடி கேட்டான். "உது க்கெல்லாம் கணக்கோடா பொடி. வாற ஆமிக்காரனையும், காடையனையும் நான் உசிரோட இருக்கும் வரை சுடுவன்''

"உசிரில்லாட்டி?'

"நீ ஏன்ரா பொடி இருக்கி றாய்? நான் போனா நீதான் சுடவே ணும். இல்லாட்டி எங்கட வீட்டில இரு ந்து புலவுகளையும் உன்ர அம்மாச்சிப் பசுவையும் கன்றையும் கூட கொண்டு போயிடுவான்கள். பிறகு நீ அடுத்தவன்ர கொட்டிலில தான் இருப்பாய்."

"அப்ப ஏனப்பு எனக்கு நீ காட்டித் தரேல்ல"

"நீ இப்ப சுட்டா உன்னை துவக்கு இழுத்துக் கொண்டு போடும். நீ வளர்ந்த பிறகு பழகலாம். அப்ப, போட்டு வாறம் பிள்ளையள். பொடியக் காட்டி மருந்தை எடுங்கோ"

ஐயா மகனுடன் எம்பக்கம் விரைந்தார். "ஐயாவுக்கு கதையக் குடு. தண்ணி வாங்கிக் கொண்டு வாறேன் என்றேன்.''

"அம்மா கொஞ்சம் தண்ணி" மூத்த மகள் கானைக் கொண்டு போனாள். சிறுமி ஓடி வந்தாள்.

" அம்மா பட்டியில அம்மாச்சி ப் பசுவைக் காணேல்ல. மற்றதெல்லா ம் நிக்குது''

ஒரு கணம் திகைத்து மறு கணம் குரலை உயர்த்திய மகனை இழுத்து வாயைப் பொத்தி உள்ளே இழுத்துச் சென்றாள். "கொப்பர் போற நேரத்தில கத்தாத, வா. இரண்டு பேரும் போய்ப் பார்த்து வருவம்" மெல்லியதா ய்க் கேட்டது.

வீதியால் வந்து என்னைக் கடந்து கொண்டு வெள்ளைப் பசு ஒன்று கன்றுடன் புகுந்தது. "இங்க நிற்குது" ஓடி வந்து கட்டிக் கொண்டு முத்தமழை பொழிந்தான். அதுவும் நாக்கால் நக்கியது. கன்று அவனை செல்லமாக இடித்தது.

இந்த அன்பிற்காக என்றா லும் இவன் தன் பிறந்த மண்ணைக் காக்க உறுதியோடு நிற்பான் என எண் ணிபடி, நீருடன் நடந்தேன். தமிழரின் சரித்திர பூர்வ வாழிடமான வடக்கு, கிழக்கை இணைத்து வரும் இப் புண் ணய பூமியில், இவ்வாறான மக்களின் தேவையை எண்ணி வியந்தேன். பின் னால் இருந்து அப்புவின் குரல் தெளி வாகக் கேட்டது.

50ம் ஆண்டு காலத்தில் சிங்களவர்களுக்கு நல்லாக் குடுத்த நாங்கள் செம்மலைக்கு வந்தவங்கள். நல்ல வெழுவ கொடுக்க ஓடிப் போனா ங்கள். பிணைச்சு வைச்சிருந்த எங்கட ஆக்களையும் மீட்டு அவங்களின்ட வாடிகள் எல்லாத்தையும் கொழுத்திப் போட்டு வந்தனாங்கள் பிறகு பொலிஸ் வர நாங்கள் காட்டுக்க ஒளிச்சிட்டம். எங்கடையாக்கள் நாலு போரை பிடிச்சுட்டுப் போய் வழக்காடி விட்டவ னாம். பிற்பாடு ஆமி வந்தெல்லோ சனங்களக் கொடுமைப்படுத்தி கலைச்ச வன். உதில் நிப்பாட்டுங்கோ நாங்கள் வாறம்''

இருவரும் வயல் வரம்பி னூடாக நடக்கத் தொடங்கினர்.

தொடரும்..........

# முஸ்லிம் பகுதிகளில் ஜே.வி.பி. ஊடுருவல்

## காத்திருக்கும் ஆபத்து ..............



ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு கிழக்கு பகுதிகளில் அரசின் நிவாரணப் பணிகள் மாத்திரமல்லாது மீட்பு மற்றும் சுத்திகரிப்பு வேலைகளும் சீராக இடம்பெறவில்லை. என்பது யாவரும் அறிந்த விடயமாகும். உறவுகளையும், உடைமைகளையும் பேரலைக்குப் பறிகொடுத்து விட்டு நிர்க்கதி அடைந்த மக்களுக்கு பொது அமைப்புக்களின் உதவிகளே முதலில் கைகொடுத்து உதவியது.

டிசம்பர் 26ம் திகதி சுனாமி அனர்த்தம் இடம்பெற்றதைத் தொடர்ந்து கொழும்பு, கண்டி, குருநாகல், போன்ற மாவட்டங்களில் இருந்து தனி நபர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும், பொது நல அமைப்புக்களும் நூற்றுக் கணக்கான லொறிகள் மற்றும் வான்களில் நிவாரணப் பொருட்களைக் கொண்டு வந்து இனமத மொழி பேதம் பாராது இப்பகுதியில் பாதிக்கப்பட்ட



மக்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. மனிதாபிமான ரீதியில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

தமிழ் முஸ்லிம் மக்களின் தாயக பூமியான வடக்குக் கிழக்குப் பிரதேசம் சுனாமியால் கடும் பேரழிவுக்குள்ளாகியிருந்த போதிலும் சிங்களத் தேசிய அரசு தென்பகுதியிலேயே கூடிய அக்கறையுடன் நிவாரணப் பணிகளில் மேற்கொண்டது. இப்போதும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளில் அரசு தென்னிலங்கைக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றது.

இவ்வளவு பேரழிவுக்கு மத்தியிலும் இனமத பிரதேச வேறுபாட்டை நிலை நிறுத்தி காட்டியுள்ள அரசு எதிர்காலங்களில் சிறுபான்மையினரை அரவணைத்துச் செல்லுமென எதிர்பார்க்க முடியாது. ஆழிப் பேரலையின் ஊழித்தாண்டவத்தை விட அரசின் பேரினவாதக் கொடூரம் மிகைத்து நிற்கிறது. எனினும் பௌத்த சிங்கள மக்கள் இப்பேரழிவுக்கு மத்தியில் மனிதாபிமானத்துடன் செயற்பட்டுள்ளனர் என்கின்ற உண்மையை மூடிமறைத்து விட முடியாது.

தென் பகுதியில் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் வடக்குக் கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளைச் செய்திருக்கின்றனர். மீட்புப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை அவசர நிவாரண உதவிகள் மீட்புப் பணிகள் மற்றும் சுத்திகரிப்பு வேலைகளில் கூட அரசு வடக்குக் கிழக்கில் பாரபட்சம் காட்டியபோது பௌத்த

**"தமிழ் முஸ்லிம் மக்களின் தாயக பூமியான வடக்குக் கிழக்குப் பிரதேசம் சுனாமியால் கடும் பேரழிவிற்குள்ளாகியிருந்த போதிலும் சிங்கள தேசிய அரசு தென் பகுதியிலேயே கூடிய அக்கறையுடன் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. இப்போதும் புனர்வாழ்வு புனர்நிர்மான பணிகளில் அரசு தென்னிலங்கைக்கே முன்னுரிமைகொடுத்து வருகின்றது."**

சிங்க ளப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்த ஜே.வி.பிகளத்தில் குதித்து உதவிகள் புரிந்தமை போன்று செயற்பட்டமை ஆச்சரியமடையச் செய்துள்ளது.

உண்மையில் ஜே.வி.பி.யின் இலக்கும் தேவையும் முஸ்லிம் பகுதிகளில் காலூன்றுவதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே நன்கு திட்டமிட்டு இப்பணிகளைச் செய்திருக்கிறது. தனி ஒரு அமைப்பு பெரும் எண்ணிக்கையிலான தொண்டர்களை களத்தில் இறக்கி நிவாரணம், மீட்புப் பணிகளில் ஈடுபட்டது.

### முஸ்லிம் போராளிகள் எங்கே?

மேடைப் பேச்சுக்களிலும், ஊடகங்களிலும் தம்மைப் போராளிகள் என பறைசாற்றிக் கொள்ளுகின்ற முஸ்லிம் கட்சிகளின் தொண்டர்கள் எங்கே? என்று வாக்களித்த மக்கள் கேள்வி எழுப்புகின்ற அளவிலேயே அவர்களின் பங்களிப்பு அமைந்திருந்தது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் சிலர் கட்சியின் சின்னம் பதித்த ரீசேட் தொப்பிகளை அணிந்து கொண்டு சில

**அஸ்லம் எஸ்.மௌலானா.**

இடங்களில் சேவை செய்த போதும் அவை பாதிக்கப்பட்ட மக்களைத் திருப்திப் படுத்தவில்லை. ஜே.வி.பி யினரின் அதிரடியான பணிகளைக் கண்ணுற்று மு.கா தலைமைக் கட்சித் தொண்டர்களை போதியளவில் களத்தில் இறக்குவதற்கு மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை. திட்டமும் இல்லாமல் கட்டுக் கோப்பும் இல்லாமல் போட்டிக்கு ஒப்பாக எதையாவது செய்வோம் என்ற நிலையே காணப்பட்டன.



தேசிய முஸ்லிம் காங்கிரஸ் நுஆ போன்ற கட்சிகளின் தொண்டர்கள் போராளிகள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். கட்சி அமைப் பாளர்கள், அமைச்சு இணைப்பாளர்கள் சிலரே இப்பணிகளில் முன்நின்றனர். வேறு எவரையும் காணக்கிடைக்கவில்லை. தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளுக் காக வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் நிற்கின்ற கட்சிகளின் போராளிகளை கட்டமைப்பு ஒன்றுடன் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கான திட்டமோதைரியமோ இல்லாமல் முஸ்லிம் தலைமைகள் வங்குறோத்து நிலையில் இருப்பது இப்பின்னடைவுக்குக் காரண



மாகும். இதனை ஜே.வி.பி நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பதையே எம்மால் உணர முடிகின்றது. இந்த நாட்டில் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்ற ஜே.வி.பி முஸ்லிம் பகுதிகளில் தளமொன்றை ஏற்படுத்துவதற்கான அத்திவாரத்தை இப்போது இட்டிருக்கின்றது.

### காத்திருக்கும் ஆபத்து

முஸ்லிம் கட்சிகள் தோன்றிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி போன்ற தேசியக் கட்சிகளுக்கு கணி சமான அளவு முஸ்லிம்கள் வாக்களித்து வரும் சூழ்நிலையில் ஜே.வி.பி.யினரின் அரசியல் காய் நகர்த்தல்கள், அக்கட்சிக்கு நல்ல பயனைப் பெற்றுக் கொடுக்கும் என்றே அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

சிங்களத் தேசியக் கட்சிகளிடமிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அந்த முயற்சியும், இலக்கும் வீண் போகவும் இல்லை.இலங்கை முஸ்லிம் குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மு.கா. கொடியின் கீழ் அணிதிரண்டு கொண்டிருந்த போதே அதன் தலைவர் எம்.எச். எம்.அஷ்ரபின் திடீர் மறைவு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்சி பிளவுபட்டு தலைவர்கள் பலர் உருவாகினர்.

அவர்கள் தமது சுய அரசியல் லாபங்களுக்காக, அமைச்சுப் பதவிகளுக்காக, பெருந் தொகைப் பணத்திற்காக பேரினவாதக் கட்சிகளுடன் கூட்டிணைந்து முஸ்லிம் சமூகத்தை ஏற்கெனவே தாரை வார்த்து விட்டனர். அதனால் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் அடிமைச் சமூகமாகவே வழி நடத்தப்படுகின்றனர்.

இந்த நிலையில் முஸ்லிம் பிரதேசங்களில் ஜே.வி.பி.யினர் காலூன் றுவதற்கு மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகள் எதிர் காலத்தில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடுமென புத்திஜீவிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாகாமல் தடுப்பது முஸ்லிம் தலைவர்களின் கடமை எனக் கூறிவிட்டு எவரும் வாழாவிருக்க முடியாது. ஏனெனில் அவர்களே ஜே. வி.பி. கட்சிக்குச் சோரம் போகமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. ஆகையினால் பொதுநல அமைப்புக்களும், புத்திஜீவிக ளும் விழிப்புடன் செயற்படுவது அவசியம் என்பதைப் புரிந்து கொள்வோமாக.




## நாங்கள் அகதிகளல்ல



அம்மணிக்கு!

ஆழிப் பேரலை அனர்த்தம் ஊழித் தாண்டவமாடிய பின்னரும் இனவாதம் கொழுந்து விட்டு எரிகின்றது. விட்டுக் கொடாத் தனமும், முரண்பாடுகளும் அதிகரித்துச் செல்லுகின்றதை நோக்கும் போது மனம் வேதனைப் படுகின்றது.

கடந்த இருபது வருடமாக நடந்த போரின் பின்னர் தோன்றியுள்ள இந்தப் போர் ஓய்வு நிலையை நல்லதொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டும்.

ஆனால் அப்படியானதொரு முயற்சி கனதியாக மேற்கொள்ளப்படவில்லை. ஆழிப் பேரலை திடீரென ஏற்பட்டதால் சிங்கள ஆட்சியாளர்கள் யோகம் அடித்தது போல் துள்ளிக் குதிக்கின்றனர்.

எல்லாம் சரியாகி விட்டது. ஆழிப்பேரலைக்குப் பின் அரசியல் ரீதியான பேச்சுக்கான சந்தர்ப்பம் எதுவுமில்லை என எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் கடந்த இருபது வருடத்துக்கு மேலாக நடந்த போர் தற்போது ஓய்ந்திருக்கிறது. போர் நிறுத்தம் அமுலில் உள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். சுனாமிப் பேரழிவினால் யுத்தப் பேரழிவு திரை மூடி மறைந்துவிடக் கூடாது.

உங்கள் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் சுனாமிப் பேரழிவு எதிரிகளுடன் பேசுவதற்கான சந்தர்ப்பத்தைத் தந்திருப்பதாகத் தெரிவித்துள்ளீர்கள்.

எதிரிகள் என்று நீங்கள் கூறியது யாரை? விடுதலைப் புலிகளையா? , விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் பிரித்துப் பார்க்கமுடியாது. அப்படியென்றால் எங்கள் இனத்தை எதிரிகளாகவே நோக்குகிறீர்களா?.

ஒரு காலத்தில் ஜனாதிபதியாகவிருந்த விஜயதுங்கா தமிழினத்தை மரம், செடி, கொடிகளாக வர்ணித்தார். அம்மணி நீங்கள் எங்கள் இனத்தை எதிரிகளாக வர்ணித்திருக்கிறீர்கள்.

அப்படியானாலும் அனுகுமுறைகள் சுனாமிக்குப் பின் நன்றாக அமையவில்லை. எப்போதும் போரினவாத தவளைகள் போடும் கூச்சலும் குழப்பமும்தான் தொடர்கதையாகிச் செல்கின்றன.

உங்கள் சிங்களப் படைகள் மறைமுகமாக பேர்த் திணிப்பை மேற்கொள்கின்றனர். விடுதலைப் புலிகள் பொறுமையோடு உள்ளனர்.

எத்தனையோ ஆத்திரமூட்டல் சம்பவங்கள் அனர்த்த நிவாரணப் பணிகளைக்கூட செய்யவிடாது தடையேற்படுத்திய போதெல்லாம் போராளிகள் பொறுமை காத்து வருகின்றனர்.

அனர்த்த நிவாரணங்கள் அனைத்துப் பகுதிகளுக்கும் சமமாகப் பகிரப்பட வேண்டும் என்பதில் அவர்கள் அக்கறையோடு உள்ளனர்.

ஆனால் உங்கள் ஆலோசனைகள், செயற்பாடுகள் எல்லாம் சமமான நிவாரணப் பகிர்வுக்கு சாத்தியமானதாக அமையவில்லை.

நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனையைக்கூட உங்கள் அரசு நிராகரித்திருக்கும் நிலையில் இனவாதம் கொழுந்து விட்டு எரிகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே எங்கள் இனத்தை எதிரிகளாகப் பாவனை செய்யாது அனர்த்த நிவாரணங்கள் அனைத்துப் பகுதிக்கும் கிடைப்பதற்கான விடுதலைப் புலிகளின் யோசனைக்கு இணங்க வருக, என்று கூறி மடலை நிறைவு செய்கின்றேன். இங்ஙனம்

ஈழமகன்.

# ஆழிப் பேரலையால் துயருறும் பெண்கள்



"பெண்கள் நாட்டின் கண்கள்" வீட்டிற்கும் பெருமை சேர்ப்பவள் பெண்தான். சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பவளும் பெண்தான். பெண்ணில்லா விட்டால் சமுதாயம்தான் உருவாக முடியுமா?

"பெண் என்றால் பேயும் இரங்குமாம்" இது முதியோர் வாக்கு. ஆனால் இந்த ஆழிப்பேரலை இந்தப் பெண்ணைப்பார்த்து இரங்கியதா? இல்லையே! பெண் குழந்தையைப் பார்த்ததா? மங்கையைப் பார்த்ததா? இல்லவே இல்லை. ஒரு நொடிப்பொழுதில் தன் பசியைத் தீத்துக்கொண்டோடியது.

சுனாமி ஆழிப்பேரலை ஒரு சில நொடிப்பொழுதில் உயிர்களை காவுகொண்டு போனது. ஆனால் பெண்களைக் கவலை என்னும் கொடிய நோய் முழுமையாகப் பீடித்து விட்டது. பல வகையான துயர் துடைப்புப் பணிகள் இடம் பெற்றாலும் பெண் மனம் யார் சொல்லியும் கேட்குமா?

ஆழிப் பேரலை அனர்த்தத்தில் சிக்குண்டு நொந்து போய் நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் பெண்கள் நிம்மதியாக வாழ வழியில்லை. இந்த இயற்கை அனர்த்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய சிலர் பெண்களை இம்சைப்படுத்தும் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். தாயை இழந்து தவிக்கும் ஒரு பெண்ணுக்கு இனி யார்? ஆறுதல் கூறுவது.

ஒரு இளம் பெண்ணுக்கு தாயின் அன்பும், அரவணைப்பும் வேறொருவரால் கொடுக்க முடியுமா? கொடுத்தாலும் அப்பெண் நிம்மதியாக சந்தோசமாக இருப்பாளா? அவள் நிலையை யாவரும் சிந்திக்க வேண்டும்.

உயிரிழந்து, உடமையிழந்து, உறவையிழந்து தவிக்கும் பெண்களுக்கு உபத்திரம் கொடுக்காமல் உதவி செய்ய முன்வர வேண்டும். சுனாமியின் கோரப் பிடியிலிருந்து உயிர் தப்பி நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் பெண்களை தாயாக சகோதர மனப்பான்மையுடன் நோக்க வேண்டும்.

தாயை, சகோதரியை. குழந்தையை இழந்து கண்ணீர் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் பெண்ணினத்தை பெண்களாகிய நாம் தான் கட்டியெழுப்ப வேண்டும். கடலலை காவுகொண்ட உயிர்களின் நினைவலைகள் பாதிக்கப்பட்ட பெண்களின் மனதில் ஆழப் பதிந்திருக்கின்றது. அதை நாம் தான் ஆறுதல் வார்த்தைகள் கூறி அவர்களின் மனதை திடப்படுத்த வேண்டும். இதுதான் எம் பெண்ணினத்திற்கு அழகு.

**ந.விஜி.**


# மகளிர் மகுடம்



## உங்கள் ஆரோக்கியத்திற்கு...

- தலைவலி நீங்க நிழலில் உலர்த்திய மகிழம்பூவை இடித்துத் தூளாக்கி சிறிதளவு எடுத்து நாசியில் வைத்து முகர்ந்தால் கெட்டநீர் வெளியேறி தலைவலி நீங்கும்.
- சுண்டங்காயை உணவோடு சேர்த்து வந்தால் வாதநோய் நீங்கும்.
- பசுந்தயிர் உண்டால் தாகம், இளைப்பு, இருமல், அஜீரணம் குணமாவதுடன் பசி எடுக்கும்.
- மணித்தக்காளி வேரை இடித்து தண்ணீரில் போட்டு காய்ச்சி வாய் கொப்பளித்தால் பல்வலி நீங்கும்.
- மீன் எண்ணையுடன் தேனைக் கலந்து உண்டு வந்தால் ஆறாத புண்கள் விரைவில் ஆறும்.
- சுக்கைப் பொடி செய்து சிட்டிகை அளவு பொடியை நாசியில் விட்டால் உடனே மயக்கம் தெளிந்து விடும்.
- கண் வீக்கம் ஏற்பட்டால் புன்னைப்பூவை நீரில் ஊறவைத்து அந்த நீரைக் கொண்டு கண்களைக் கழுவினால் வீக்கம் நீங்கும்.

## நகங்களும் அதன் குறைபாடுகளும்



விரல்களை அழகாகக் காட்ட வேண்டும் என்று அனைத்துப் பெண்களும் விரும்புகின்றனர். நகத்திற்கு நகப்பூச்சுப் பூசுகின்றோம். அத்தோடு கதை முடிந்து விடுகிறது என நினைக்கின்றோம்.

நகங்கள் உண்மையில் உடம்பின் ஆரோக்கிய நிலையையே சொல்கின்றது.

- ஆரோக்கியமான நகங்கள் உறுதியாகவும், மிருதுவாகவும் இளம் ரோஜா நிறத்திலும் இருக்க வேண்டும்.
- நகங்களின் நிறம் மற்றும் வடிவமே நம் உடல் நிலையைக் காட்டும்.
- உடையும் நகங்கள், மற்றும் நகங்களைச் சுற்றியுள்ள தோலில் ஏற்படும் பாதிப்புக்கள் உணவின் துத்த நாகக் குறைபாட்டினால் ஆகும்.
- நகங்கள் ஊட்டச்சத்து குறைபாடுகளினாலும் பாதிக்கப்படுகின்றன.
- மெல்லிய கரண்டி வடிவ நகங்கள் முக்கியமாக கட்டை விரல் நகங்கள், இரும்புச் சத்து, துத்த நாகக் குறைபாட்டின் அறிகுறிகள்.
- செலினியம் என்றும் நுண் ஊட்டச் சத்துக் குறைபாடு நகங்களைக் கறுப்படையச் செய்யும். மீன் தானிய வகை உண்பதால் இந்தக் குறைபாட்டை தவிர்க்கலாம்.

# சமையல் குறிப்புக்கள்

- மஞ்சள் துண்டுகளில் வண்டு துளைக்காமல் இருக்க மஞ்சளுடன் சிறிது விபூதி போட்டு வைத்தால் வருடக் கணக்கில் வண்டு துளைக்காமல் இருக்கும்.
- தீப்பெட்டிகளில் சில அரிசிகளைப் போட்டுவைத்தால் தீக்குச்சிகள் குளிர் பிடிக்காமல் இருக்கும்.
- கொய்யா இலைகளை எண்ணெய்யில் முதலில் போட்டு எடுத்து விடடால் எண்ணெய் பொங்கி வழியாது.
- தேங்காய் எண்ணெய்யில் கற்பூரத்தைப் போட்டு வைத்து தினமும் அதை உபயோகித்து வந்தால் பேன். பொடுகு தொல்லை நீங்கும்.
- தேயிலைத் தூளை சிறிது நேரம் வெயிலில் உலர வையுங்கள் பின் தேநீர் போட்டு பருகினால் அதிக மணமும் சுவையுமாக இருக்கும்.
- உருளைக் கிழங்கை சீவி ஒரு வெள்ளைத் துணியில் கட்டி கொதிக்கும் நீரில் ஐந்து நிமிடம் அமிழ்த்தி எடுத்த பிறகு குளிர்ந்த உப்பு நீரில் போட்டு எடுத்து பொரித்தால் கிழங்கு வெள்ளையாக இருக்கும்.
- உருளைக் கிழங்கை குளிர் சாதனப் பெட்டியில் வைக்காதீர்கள் அதன் வாசனை மற்றப் பதார்த்தங்களுக்கும் பரவிவிடும்.
- உணவை வாழை இலையில் வைத்து பார்சல் கட்டும் போது இலை கிழிந்து விடுகின்றது. இதற்கு இலையை வெந்நீரில் நனைத்தெடுத்து பின் கட்டினால் இலை கிழியாது.
- குளிர் காலத்தில் தேங்காய் எண்ணெய் உறைந்து விடும். அதற்கு தேங்காய் எண்ணெய்யில் சிறிது விளக்கெண்ணெய் கலந்து வைத்தால் உறையாது.

# புரட்சிப் பெண்ணே..!

**புதிய உலகத்தை**
**புதுப் பொலிவுடன்**
**படைக்க வந்த**
**புரட்சிப் பெண்ணே!**
**கேளடி**

**சுனாமி**
**சுற்றுவட்டாரத்தையே**
**சுக்கு நூறாக்கினாலும்**
**தன்னம்பிக்கை எனும்**
**தூணை உடைக்கவில்லையே!**
**துணிந்து புறப்படு.**

**கடலன்னையின்**
**கொந்தளிப்பு**
**பெண்ணின் மன பலத்தை**
**கொந்தளிக்க விடவில்லையே!**
**எழுந்து வா.....**
**புதிய உலகம் படைப்போம்!**

**கண்ணீர் சிந்திய**
**காலங்கள்**
**கடந்த காலமாகட்டும்**
**இனியும் யோசிக்காதே!**
**விரைந்து வா!**
**புத்துணர்வு மிக்க**
**தரணியை உருவாக்குவோம்!**

**பு.சயந்தினி**

# குழந்தைகளும் பொம்மைகளும்

குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு குழந்தையின் வாழ்விலும் முக்கிய இடம் வகிப்பது பொம்மை. என்னதான் விலையுயர்ந்த தங்க ஆபரணங்களையோ, வெள்ளிப் பாத்திரங்களையோ குழந்தையின் கையில் கொடுத்தாலும் அவர்கள் முகம் மலர்வதென்னவோ பொம்மைகளைப் பார்த்துத்தான்.

பிறந்து முதல் மாதங்கள் ஆக ஆக ஒவ்வொரு பருவத்திலும் குழந்தைகள் ஒவ்வொரு விதமான பொம்மைகளை ரசித்து விளையாடி மகிழ விரும்புகிறது.

முதல் மூன்று மாதத்திற்கு உங்கள் குழந்தைக்கு விளையாட பொம்மை எதுவும் தேவையில்லை. இந்தப் பருவத்தில் பெரிய ஸ்பொஞ் பொம்மையோ, பிளாஸ்டிக் முயல் பொம்மையோ உங்கள் குழந்தையின் கவனத்தை கவர்வதில்லை. இந்தப் பருவத்தில் குழந்தை விரும்பும் விளையாட்டு அதன் பெற்றோர்களே தான். உங்கள் கண்கள், விரல்கள், உடைகள், முகம் இவற்றையே திரும்பத்திரும்ப உற்றுப் பார்த்து மகிழும். உங்கள் குழந்தை வருடி மகிழும்.

குழந்தைக்கு விளையாட்டுக் காட்ட விரும்பினால் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். குழந்தையைத் தூக்கி மார்புடன் அனைத்துக் கொண்டு வீட்டைச் சுற்றிக் காட்டுவதுதான். அவ்வாறு செய்தால் குழந்தை தன் கண்களை அகல விரித்துக் கொண்டு வேடிக்கை பார்க்கும்.

குழந்தை மிகவும் ரசித்து விளையாடும் பொருள் அதன் கை விரல்கள் தான். இந்தப் பருவத்தில் குழந்தை தன் கையைத்தானே திரும்பித் திரும்பிப் பார்க்கும். விரல்களை மூடித் திறந்து பார்க்கும். ஒரு கையால் மற்றொரு கையைத் தொட்டுப் பார்த்து மகிழும்.


கையை வேகமாக அசைத்து மகிழும் சமயங்களில் முகத்தில் வேகமாக இடித்துக் கொள்ளும். விரலை வாயில் போட்டுப் பழகிக் கொள்வதும் இந்தப் பருவத்தில் தான். வாயில் விரல் வைக்க ஆரம்பித்து விடும். இப்பருவத்தில் பெற்றோர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குழந்தையின் அருகில் கூர்மையான பொருட்களையே விழுங்கக் கூடிய பொருட்களையோ வைக்கக் கூடாது.

# பெண்களின் சாதனைகள்

01. ரஷயா நாட்டில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக உள்ளனர்.
02. புகைப் பிடிப்பதில் கனடா நாட்டுப் பெண்கள் உலக சாதனை படைத்துள்ளனர்.
03. இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்க் கரெட் தாட்சர் சாதாரண மளிகைக் கடைக்காரனின் மகளாவார்.
04. அமெரிக்க விமானப் படையில் அதிகளவிலான பெண்கள் வேலை செய்கின்றனர். (சுமார் 67,000 பேர்)
05. இந்தியாவில் பெண்களால் மட்டும் நடாத்தப்படும் 33 வங்கிகள் உள்ளன.
06. உலகிலேயே அதிக நாள் வாழும் பெண்கள் ஜப்பான் நாட்டுப் பெண்களாவர்.
07. அதிகளவு பெண்கள் நீதிபதிகளாக உள்ள நாடு ரஷ்யா.
08. வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த பெண்மணி கான்சி ராணி லட்சுமி பாய் ஆவார்.

**வை.தேவகி, மட்டக்களப்பு**

# வாழைக்காய் வடை.



தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| வாழைக்காய் | - 04 |
| முளைக்கீரை | - ஒருகட்டு |
| பச்சை மிளகாய் | - 10 |
| இஞ்சி | - ஒருதுண்டு |
| கருவேப்பிலை | - ஒருகொத்து |
| பெரிய வெங்காயம் | - 01 |
| உப்பு | - தேவையான அளவு. |

செய்முறை

வாழைக்காயை வேக வைத்து தோலினை நீக்கி நன்றாக துருவிக் கொள்ள வேண்டும். பிறகு கீரை, பச்சை மிளகாய், இஞ்சி, கருவேப்பிலை, வெங்காயம் இவற்றைப் சிறியதாக வெட்டிக் கொள்ள வேண்டும், துருவிய வாழைக்காயோடு உப்புப் போட்டு கெட்டியாகப் பிசைந்து கொள்ள வேண்டும், பின்னர் வடையைத் தட்டி வைத்துக் கொண்டு எண்ணெய் நன்கு கொதித்ததும் வடையைப் போட்டு பொன்னிறமானதும் எடுத்து பரிமாறலாம் இதனைத் தயிர் வடையாகவும் சாப்பிடலாம்

# எமது தேசத்தின் கல்வியை கட்டி எழுப்ப அனைத்து தரப்பினரும் விழிப்படைய வேண்டும்

## மட்டக்களப்பு தாளங்குடா தேசிய கல்விக் கல்லூரியின்பீடாதிபதி சி.பாக்கியராஜா அவர்களுடனான நேர்காணல்



**கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி மார்கழிப் பௌர்ணமியில் இலங்கைத் தீவு வாழ் எல்லோர் மனங்களிலும் மாறாத நினைவுப் பொக்கிஷமாக என்றும் நினைவு கூரப்படும் நிகழ்வு சுனாமி பேரலையின் இராட்சத தாக்கமாகும். இச் சுனாமி இயற்கை சீற்றம் ஏற்பட்டு ஒரு மாத காலம் கடந்தாலும் அச்சம்ப வத்தினுடைய தடயங்களும், சுவடுகளும் இன்னும் மாறவில்லை.**

**யாருக்கும் தெரியாமல் ஊருக்குள் வந்த இராட்சத அலை உயிர்ச் சேதம், பொருள் சேதம், உடமைகள் சேதம், பாசம், பந்தம், அன்பு, காதல் எனும் உறவுகளை எல்லாம் அறுத்தெறிந்து இலங்கை தீவின் கல்வியின் நகர்வுகளைக் கூட தடை போட்டது.**

**இவ் நேர்காணலினூடு மட்டக்களப்பு கல்வியிலும் மட்டக்களப்பு கல்விச் சமூகத்தையும் எவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதென மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி சி.பாக்கியராஜா அவர்களைச் சந்தித்து வினாவியபோது இதனுடைய உண்மை நிலையினை வெளிப்படுத்தினார்.**

**கேள்வி:-** *கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி அலை இலங்கையில் உயிர் இழப்புக்கள், சொத்துக்கள் என்பனவற்றை மட்டும் சூறையாடவில்லை. இலங்கையில் கல்வியின் நகர்வு களைக்கூட பின்தள்ளி வைத்துள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத் தினுடைய கல்வியினை எந்த வகையில் பின்தங்க வைத்துள்ளது. அல்லது பாதிப்பனை ஏற்படுத்தி உள்ளது எனக் கூறமுடியுமா?*

**பதில்:-** கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இலங்கையினுடைய தெற்குப் பிராந்திய கரையோரப் பிரதேசங்களில் மூன்றில் இரண்டு பாகம் சுனாமி என்ற புவி நடுக்கத்தினால் ஏற்பட்ட பேரலையின் நிமிர்த்தமாக இப்பிரதேசத்தினுடைய சொத்துக்கள் மட்டுமல்லாமல் பல்லாயிரக் கணக்கான உயிர்களையும் பலி கொண்டதோடு எதிர்காலத்தினுடைய கல்வியும் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதென்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய உண்மையாகும். அந்த வகையில் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தினுடைய கல்வியானது கடந்த இரு தசாப்தங்களாக இப்பிரதேசத்திலே கட்டவிழ்க் கப்பட் டிருந்த இராணுவ செயற்பாடு காரணமாக மிகவும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது என்பது எல்லோரதும் அபிப்பிராயமாகும்.

ஆகவே இரண்டு தசாப்தங்களாக பாதிக்கப்பட்டிருந்த கல்வி மேலும் இந்த சுனாமி என்ற பேரலையினுடைய கொடூர தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பது யதார்த்தம்.

ஆகவே இந்த அடிப்படையில் குறிப்பாகச் சொல்லப்போனால் கல்வியை வழங்குகின்ற பாடசாலைகள் பல அந்தப் பேரலையினுடைய தாக்கத்தினால் அழிவுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன.

அந்தப் பாடசாலையிலேயே கற்பித்த ஆசிரியர்கள் மரணித்திருக்கிறார்கள். அந்தப் பாடசாலையிலேயே கற்ற பல நூறு மாணவர்கள் பலி எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக இந்தப் பாடசாலைகளிலே கல்வியை வழங்குகின்ற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தப்பிப் பிழைத்திருந்தும் அவர்களுடைய உள ஆற்றல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பது. எம்மால் அறியக்கூடியதாக இருக்கின்றது. எனவே இந்தப் பேரலையினுடைய கொடூரத்தால் தாழ்ந்து போன அல்லது அழிந்து போன அந்தக் கல்வியானது மேலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**கேள்வி:-** *சுனாமி அலை மட்டக்களப்பினுடைய கல்வியில் பலத்த பாதிப்பனை ஏற்படுத்தியுள்ளது. அப்பாதிப்பு எவ்வகையில் தங்களுடைய கல்விக் கல்லூரிக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறமுடியுமா?*

**பதில்:-** தேசிய கல்விக் கல்லூரியைப் பொறுத்தவரையில் இந்தச் சுனாமியினுடைய தாக்கம் எந்தளவு இருக்கின்றது என்ற இந்த வினாவுக்கு ஏறத்தாழ 50 ஆசிரிய பயிலுனர்களுடைய சொத்துக்கள் அதாவது வீடுகளினுள் இருந்த அவர்களினுடைய மிகமுக்கியமான புத்தகங்கள் குறிப்புக்கள் அவர்களினுடைய சீருடைகள் என்பன சுனாமி அரக்கனால் சூறையாடப்பட்டிருக்கின்றது.

மேலும் எங்கள் கல்லூரியினுடைய ஒரு ஆசிரிய பயிலுனர் அதாவது விஞ்ஞானப் பாடநெறிப் பயிலுனர் ஒருவர் கூட இந்தச் சுனாமி அலையினால் உயிரிழந்துள்ளனர். அத்தோடு எங்கள் விரிவுரையாளர்களினுடைய வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்ததோடு அவர்களது உறவினர்களுக்குக் கூட பலத்த சேதத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவ்வாறான சுனாமி அனர்த்தத்தினுடைய தாக்கத்தினால் உயிரிழப்பு, சொத்திழப்பு எல்லாவற்றிற்கும் மேலாக கல்வி பயிலக் கூடிய முக்கியமான ஆவணங்கள் தொலைந்து போன நிலையிலேயே மனத்தாக்கத்திற்குட் படுத்தப்பட்ட வகையிலே இருக்கிறார்கள்.

**கேள்வி:-** *இவ்வாறு எல்லோருடைய மனதிலும் ஆறாத புண்ணாக அமைந்துள்ள இச் சுனாமி அலை உங்கள் கல்வி நிறுவனத்தில் உள்ள சகலரையும் இலகுவாகப் பாதித்திருக்கும். எனவே அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தாங்கள் எவ்வாறான வழிமுறைகளைக் கொண்டு வழி நடத்தினீர்கள்.?*

**பதில்:-** இந்தச் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஓரிரு தினங்களிலேயே நான் எங்களது மிகக் குறைந்த ஆளணியைக் கொண்டிருக்கின்ற விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், உத்தியோகஸ்தர்களைக் கொண்டு ஒரு செயற்பாட்டை செய்யலாம் என உத்திதேசித்திருந்தும் அந்த மனநிலை அதாவது உடனடியாக தொழிற்படுகின்ற மனநிலையில் எங்களது ஆளணியினர் அதாவது உத்தியேகஸ்தர்கள், ஊழியர்கள் இல்லாதிருந்தமை உண்மையாகவே வேதனை தருகின்ற விடயம். ஏனென்றால் அவர்கள் முற்றிலுமாக பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் தான் இருந்தார்கள். உடல் உள ரீதியாகக் கூடப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இதன் பிற்பாடு எங்களது தேசிய கல்விக் கல்லூரி ஜனவரி 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் எங்களுடைய கல்லூரியினூடாக சில வேலைத்திட்டங்களைச் செய்வதாக நாங்கள் தீர்மானித்திருந்தோம்.

**கேள்வி:-** *இன்று சமூக மட்டத்தின் பலத்த எதிர்பார்ப்புக் கொண்டுள்ள நிறுவனங்களில் கல்விக் கல்லூரி நிறுவனமும் பிரதான இடத்தினை வகிக்கின்றது. ஆகவே இவ்வமைப்பு சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டியது இக்கல்விக் கல்லூரிக்குடைய கடமையாகும். ஆகவே நீங்கள் எந்த வகையில் எப்படிப்பட்ட வேலைப்பாடுகளை சமூக மட்டத்தில் செய்து வருகிறீர்கள் எனக் கூறமுடியுமா?*

**பதில்:-** குறிப்பாக வழமை நிலைக்கு பிரதேசத்தைக் கொண்டு வருவதிலே எங்களது விரிவுரையாளர்கள் தங்களால் ஆன பல செயற்பாடுகளைக் குறிப்பாக சிரமதானம் மற்றும் ஆற்றுப்படுத்தல் சேவை போன்றவற்றிலே ஈடுபட்டுத் தங்களது வேலைத் திட்டத்தினைக் கொண்டு செல்கின்றார்கள். அதிலும் பொருட்களை அல்லது உணவு, உடை என்பவற்றை வழங்கினாலும் அதை வழங்குவதற்குப் பல தொண்டர் ஸ்தாபனங்கள், அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் பல செயற்பட்ட போதிலும் மிக முக்கியமாக உளரீதியாக நொந்து போய் இருக்கின்ற அந்த பாதிக்கப்பட்ட மக்களை வழமை நிலைக்குக் கொண்டு வரவேண்டிய ஒரு கட்டாய தேவை கல்விச் சமூகத்திற்கு இருக்கின்றது.

ஆற்றுப்படுத்த வேண்டிய அவசியம் கல்விச் சமூகத்திற்கு இருக்கின்றது. ஆற்றுப்படுத்தல் சேவையை நாங்கள் மிகப் பிரதான ஒரு விடயமாக ஏற்றுக் கொண்டு அதற்கான முழுமூச்சான ஒரு செயற்பாட்டில் இறங்கிக் கொண்டிருக்கின்றோம். மாவட்டத்தினுடைய ஆற்றுப்படுத்தல் சேவையில் அதி நிபுணத்துவம் வாய்ந்த கல்வியலாளர்களையும், வைத்தியர்களையும் கொண்டு ஆசிரிய பயிலுனர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் அதற்கான பயிற்சியை வழங்கி பாடசாலைகள் மற்ற சமூகங்களுக்குள்சென்று வழமை நிலையை ஏற்படுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டுவதில் நாங்கள் ஈடுபாடு காட்டியிருக்கின்றோம்.

இதற்காக வலயப் பணிப்பாளர்களிடமிருந்து பாடசாலைக்குச் செல்வதற்கான அனுமதியினையும் அந்தப் பாடசாலைக்குச் சென்று மாணவர்களுக்கும் அதோடு இணைந்த சமூகத்திற்கும் இந்தச் சேவையை வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அது மட்டுமல்லாமல், கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்பதாக சிரமதானப் பணியிலேயே எங்களது ஆசிரிய பயிலுனர்கள் குறிப்பாக புதுக்குடியிருப்பு, கிரான்குளம் போன்ற பிரதேசங்களுக்குச் சென்று கூடாரங்களை அமைத்துக் கொடுத்தல், வேலிகளை இடுதல், கொட்டகைகளை அடித்துக் கொடுத்தல் போன்றவற்றிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் மீண்டும் சுனாமி அனர்த்தம் வரப்போகின்றது என்ற வதந்திகள் மாவட்டத்தின் பல பாகங்களிலும் பரவிய போதிலும் தளராது தம்முடைய கருமங்களை ஆற்றிக் கொண்டிருந்தமையை இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

> **" மாவட்டத்தினுடைய ஆற்றுப்படுத்தல் சேவையில் அதி நிபுணத்துவம் வாய்ந்த கல்வியலாளர்களையும், வைத்தியர்களையும் கொண்டு ஆசிரிய பயிலுனர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் அதற்கான பயிற்சியை வழங்கி பாடசாலைகள் மற்ற சமூகங்களுக்கு உள்சென்று வழமை நிலையை ஏற்படுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டுவதில் நாங்கள் ஈடுபாடு காட்டியிருக்கின்றோம்."**

### நேர்காணல்:- தனஞ்சயன்

**கேள்வி:-** *கல்விக் கல்லூரி நிறுவனம் பாடசாலை கற்றல், கற்பித்தலுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட நிறுவனமாகும். அந்த வகையில் நீங்கள் சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கும், பாடசாலை மாணவர்களிற்கும் நடப்பாண்டில் எவ்வகையான திட்டங்களை முன்னெடுத்துள்ளீர்கள்?*

**பதில்:-** இந்தக் கல்விக் கல்லூரியினுடைய விசேடமான சில செயற்பாடுகளை கல்வி அமைச்சு ஓராண்டுத் திட்டத்தினைச் செய்வதற்குரிய அனுமதியினையும், செய்வதற்கான சகல ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றது. மாவட்டத்திலே அதிகம் பாதிக்கப்பட்ட அல்லது மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பெரிய கல்லாறு உதயபுரம் வித்தியாலயம், மட்-பெரியகல்லாறு மத்திய கல்லூரி, மட்-ஓந்தாச்சிமடம் விநாயகர் வித்தியாலயம், மட்-புலவர்மணி பெரியதம்பி வித்தியாலயம் அதாவது களுதாவளை, மட்-குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயம், மட்-ஒல்லிக்குளம் வித்தியாலயம், மட்-இக்கினேசியஸ் வித்தியாலயம் ,நாவலடி ஆகிய பாடசாலைகளை மீள் நிலைக்குக் கொண்டு வருவதற்காக கல்வித் திணைக்களமானது அவற்றினுடைய பௌதீகவள அபிவிருத்தியினை செய்கின்றது.

அதேவேளையில் உயர்தர மாணவர்களுக்குரிய சகல குறிப்புக்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கும், அத்தோடு இணைந்தும் அடுத்த கட்டமாக வழமை நிலைக்கு அந்தக் குறிப்பிட்ட நிலைக்குக் கொண்டு வருவதற்கு சகல விதமான ஆசிரிய வளத்தினை வழங்குவதற்கும், அத்தோடு இணைந்து கல்விப் பொதுத் தராதரப் (சா/த) மாணவர்களுக்கும், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்குமான விஷேட வகுப்புக்களை நடாத்துவதற்கும் கல்வி அமைச்சு இந்தச் தேசிய கல்விக் கல்லூரியினூடாக ஒரு வழமையான நிலையினை எய்துவதற்கு எதிர்பார்த்திருக்கின்ற வேளையிலே நாங்கள் முன்னெடுப்பாக இந்தக் குறிப்புக்கள் வழங்குவது, ஆசிரியர் வளத்தினை அந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்குக் கொடுப்பதினூடாக நாங்கள் இந்த மாவட்டத்தினுடைய கல்வி அபிவிருத்தியிலேயே மிகக் கூடிய அக்கறையைச் செலுத்தி வருகின்றோம்.


இது சமூகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக இந்த மாவட்டத்தினுடைய சமூகத்தைப் பொறுத்தவரையிலே தேசிய கல்விக் கல்லூரியினுடைய பங்களிப்பினை கடந்த காலத்தில் ஏற்பட்ட அதாவது கடந்த காலங்களிலே தேசிய கல்விக் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை அதி உன்னதமான தொடர்பைக் கருத்தில் கொண்டு இன்றும் அது வழங்க இருக்கின்ற, வழங்கிக் கொண்டிருக்கின்ற சகல வளங்களையும் சமூகம் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கின்றது.

**கேள்வி:-** *சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களிற்கு உதவும் பொருட்டு தங்களுக்கு ஏதாவது அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் உதவ முன்வந்துள்ளனவா?*

**பதில்:-** இந்த அனர்த்தத்தினால் பா்திக்கப்பட்ட பாடசாலைகளைப் பொறுத்த வரையிலே தேசிய கல்விக் கல்லூரியோடு இணைந்து கல்வித் திணைக்களம், அத்தோடு யுனிசெப் அடுத்ததாக மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய விடுதலைப் புலிகளுடைய கல்விக் கழகம் போன்ற நிறுவனங்களின் துணைகளோடு இந்தப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளினுடைய கல்வி எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதிலே எங்களது கல்லூரி அயராது ஈடுபாடுகளைக் காட்டி வருகின்றது.

(17ஆம் பக்கம் தொடர்ச்சி......

# செவிட்டு மருமகன்



கருவூர் எனும் ஊரில் ஒருவன் இருந்தான். அவன் பெருஞ் செவிடன். காதருகில் வாயை வைத்து சத்தமாகப் பேசினால் தான் அவனுக்குக் கேட்கும். அத்தகைய செவிடனுக்கு திருமணமும் ஆகிவிட்டது.

ஒரு நாள் எதிர் பாராத விதமாக அவனுடைய மாமனார் வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்தது. மாமனார் அதிக நோய் வாய்ப்பட்டிருப்பதாகவும், உடனே மருமகனை வந்து பார்க்கும் படியும் கடிதத்தில் எழுதியிருந்தது. அதனால் மருமகன் மாமனாரைப் பார்க்கப் புறப்பட்டான். அவன் போகும் போது நாம் முதலில் மாமனாரைப் பார்த்து ''உங்களுக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது''? என்று கேட்போம். அவர் 'கொஞ்சம் சுகமாக இருக்கிறது' என்று சொல்லுவார். பிறகு 'என்ன உணவு சாப்பிகிறீர்கள்' என்று கேட்போம். நோயாளிகள் கஞ்சிதானே சாப்பிடுவார்கள்! மாமனாரும் அதைத் தான் சொல்வார். அதன்பிறகு ''எந்த டாக்டர் கொண்டு பார்க்கிறீர்கள்'' என்று கேட்கலாம். எனக்குப் பெயர் தெரியாது. ஒரு டாக்டர் வந்து பார்த்துப் போகிறார். ஆதலால் அவரையே கொண்டு பாருங்கள்' என்று சொல்வோம். அத்தோடு வந்து விடுவது தான் நமக்கு மரியாதை என மாமனாருடன் கதைக்கும் விடயங்களைத்தானே பட்டியலிட்டான் செவிட்டு மருமகள்.

மாமனாரோ நோயின் கடுமையால் மிகவும் மனம் நொந்து இருந்தார். அவருக்கு ''நாம் பிழைப்போம்'' என்னும் நம்பிக்கையே இல்லை. மருமகனும் மாமனாரைப் பார்க்கப் புறப்பட்டு மாமனார் வீட்டை அடைந்ததும் அவரைப் பார்த்து 'மாமா' இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட்டேன்.

மாமனாரோ உடம்பா? அது எமலோகம் போவதற்குரிய நாளை எதிர்பார்த்து இருக்கிறது என்றார். செவிட்டு மருமகனோ சந்தோசம். கடவுளுடைய அருளால் அப்படியே சீக்கரம் ஆக வேண்டும் என்றான். அடுத்து தான் மனதில் திட்டமிட்டபடி என்ன உணவு சாப்பிடுகிறீர்கள்? என்று கேட்டான். உணவா? மண்ணுதான். அதையே தொடர்ந்து சாப்பிடுங்கள் உடம்புக்கும் நல்லது. சுலபமாக ஜீரணமாகும் என்றான்.

தனது மருமகனின் அர்த்தமற்ற பேச்சைக் கேட்ட மாமனாருக்கு கோபம் கோபமாக வந்தது. அவர் எதுவுமே பேசாது மருமகனை முறைத்துப் பார்த்தார். மறுபடியும் அவன் மாமனாரிடம் எந்த டாக்டரை வரவழைத்துப் பார்க்கிறீகள் என்று கேட்டான்.அப்போது மாமனார் ஆத்துரத்துடன் எமன் தான் வைத்தியம் பார்க்கிறார் என்றார். உடனே மருமகன் அவரையே கொண்டு பாருங்கள் உங்களது நோய் சீக்கிரம் குணமாகும். இதைக் கேட்டதும் மாமனாருக்கு கோபம் அதிகமாயிற்று. அவர் மருமகனுக்குத் திட்டினார். காது கேட்காத மருமகனுக்கு எதுவுமே விளங்கவில்லை. மாமனார் தான் அவரைப் பார்க்க வந்ததையிட்டு சந்தோசமடைந்து எனக்கு நன்றி கூறுகின்றார். என நினைத்த மருமகன். மாமா உங்களைப் பார்க்க வேண்டியது எனது கடமையல்லவா அதற்கு போய் எனக்கு நன்றி கூறவேண்டுமா. என்றான். பாவம்! மாமனார் என்ன செய்வார் நமக்கு இவ்வளவு அருமையான அப்பாவி மருமகன் கிடைத்தானே! என்று எண்ணி வருந்தினார்.

## தங்க மாமா

சின்ன மாமா எங்கள் சீனிமாமா
சின்னச் சின்னக் கதைகள்
சொல்லும் மாமா
வெள்ளை மாமா எங்க செல்ல மாமா
விளையாட்டுக்கள் எமக்கு
பழக்கும் மாமா.
இந்த மாமா சொந்த மாமா
உதைத்து விளையாட
பந்து தந்த மாமா
எங்க மாமா நல்ல தங்க மாமா
எங்களுக்கு மிட்டாய்
தந்த மாமா

*யோ.கிதுஷானி, தரம் 03*
*மட்.விவேகானந்தா ம.வித்*

## பழமொழிகள்

- அதிகாரி வீட்டுக் கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைத்ததாம்.
- ஆறுகெட நாணலிடு ஊர்கெட நூலை விடு.
- இடுப்பிலே குழந்தையை வைத்துக் கொண்டு ஊரொல்லாம தேடினாளாம்.
- ஈயைப் போல் சுத்தமும் எறும்பைப் போல் பலமும்.
- உப்பைத் தொட்டு உரலை விழுங்குவது போல.
- ஊமை ஊரைக்கெடுக்கும் ஆமை கிணற்றைக் கெடுக்கும்.
- எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?
- ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
- ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோட.
- ஒரு நாளும் போகாதவன் திருநாளைக்குப் போகத் திருநாளும் வெறும் நாளாயிற்று.
- ஓய்ந்தது பாளை உட்கார்ந்தாள் சானார்த்தி.
- காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு.
- சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததாம்.
- தூரத்துத் தண்ணீர ஆபத்துக்கு உதவாது.
- படிப்பின்றி பட்டம் இல்லை.

*செல்வன்.சு.பாணுகோபன்,தரம்.6எம்*
*மட்.கரடியனாறும.வி*

## நாடறிந்த பெரியார்

ஐக்கிய அமெரிக்காவின் 35வது ஜனாதிபதியாக விளங்கிய ஜோன் கென்னடி, ஜோசப் பெட்ரிக்

# ஜோன். எப். கென்னடி

கென்னடி, ரோஸ் பிட் ஜெரால்டு தம்பதிகளுக்கு 1917 ஆம் ஆண்டு மாச்சு மாதம் சூசெட்ஸ் மாநிலத்திலுள்ள பாஸ்டன் நகரில் பிறந்தார்.

இவரின் உடன் பிறப்புக்கள் 8 பேர். இவர்களில் ஜோன் கென்னடி இரண்டாவது பிள்ளையாவார். கென்னடியின் தந்தையார் பெட்ரிக் கென்னடி ஐரோப்பிய நாடுகளின் அமெரிக்கத் தூதுவராக விளங்கினார். ஜோன் கென்னடி தனது 18 வயதிலேயே கல்லூரிப் படிப்பை முடித்து பட்டம் பெற்றார். இருந்தும் தொடர்ந்து ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் படித்தார்.

அதன் பின்னர் இரண்டாம் உலகமகா யுத்தத்தில் அமெரிக்கக் கடற் படையில் இணைந்து பணியாற்றினார். கடற்படையாக இருந்த காலத்தில் ஒரு டொர்பிடோ மோட்டார்ப் படகுக்கு கென்னடி தலைமை தாங்கிச் செல்லும் போது இவருடைய படகைப் எதிரியின் கப்பல் உடைத்துவிட்டது. இதனால் கென்னடிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. எனினும் கென்னடி சோர்ந்துவிடாது தம்முடன் படுகாயமுற்றிருந்த இன்னுமொருவரையும் அவருடன் ஒன்பது பேரையும் 5 கிலோ மீற்றர் தொலைவில் இருந்த தீவிற்கு கொண்டு சென்று காப்பாற்றினார். இத்தகைய வீரச் செயலுக்காக விருதும் பெற்றார். இரண்டாம் உலகமகா யுத்தம் முடிவுற்றதும் சிறிது காலம் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

1947ஆம் ஆண்டு கென்னடி தனது 29வது வயதில் அமெரிக்கப் பாராளுமன்றத்தின் காங்கிரஸின் பிரதி நிதிகள் மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்பு 1953, 1958 ஆகிய காலப்பகுதியில் மாசச் சூசெட்ஸ் மாநிலத்தில் இருந்து செனட் சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1953இல் ஜேக்குலீன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.




கென்னடி பல நூல்களை எழுதி வெளியிட்டார் நூல்களில் ''இங்கிலாந்து ஏன் தூங்கிற்று'', ''வீரர்களின் வாழ்க்கை'' இவருக்கு புகழ் ஈட்டிக்கொடுத்தன.

அத்துடன் கென்னடி சொற்பொழிவு ஆற்றுவதில் சிறந்து விளங்கினார். இவரது சொற் பொழிவுகள் மக்களிடையே பெரும் புகழை தேடிக்கொடுத்தது.

கென்னடி 1961இல் தனது 43வது வயதில் 35வது அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அமெரிக்காவில் அதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிப திகளில் வயதில் குறைந்தவர் கென்னடி ஆவார்.

அமெரிக்காவில் சிறுபான்மை இனமாக விளங்கிய கறுப்பின மக்களுக்கு சம உரிமை வழங்கினார். இதனை அமெரிக்க தென் பகுதி மக்கள் விரும்பவில்லை. பின்னர் 1963 நவம்பர் 22 டெக்சாஸ் மாநிலத்திலுள்ள டலாஸ் நகரின் சாலையொன்றில் செல்லும் போது அமெரிக்கப் பிரஜை ஒருவராலே சுட்டுக் கொல்லப்பட்டார்.



க.விமலசிறி
தரம் -11
மட்-கரடியனாறு ம.வ.

## பொது அறிவு

- சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படும் கிரகம் எது?
  **செவ்வாய்**
- பாகிஸ்தானும், இந்தியாவும் உரிமை கோரும் நிலப்பகுதி எது?
  **காஸ்மீர**
- இரண்டு தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது?
  **அவுஸ்ரேலியா**
- புவிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் எவ்வளவு?
  **150 மில்லியன் கிலோமீற்றர்**
- கண்டம் கடந்து வேறொரு கண்டத்திற்குச் செல்லும் பறவைகளைப் போல் வேறொரு உயிரினம் எது?
  **மீன்**
- ஐக்கிய அமெரிக்காவில் உள்ள மாநிலங்கள் எத்தனை?
  **50 மாநிலங்கள்**
- காது கேளாதவர் அணிந்திருக்கும் ஒலி வாங்கியின் பெயர் என்ன?
  **ஓடியோ மீற்றர்**
- சுவிங்கியம் தயாரிக்கப்படும் பால் எந்த மரத்தில் இருந்து எடுக்கப்படுகிறது?
  **சப்பதில்லா மரம்**
- முதன் முதலில் விண்கலம் ஒன்றில் சந்திரனை வலம் வந்தவர் யார்?
  **ரஷ்ய நாட்டைச் சேர்ந்த யூரிகரீன் (1961)**
- இறப்பரை வல்கனைஸ் படுத்தும் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் யார்?
  **சாள்ஸ் குட் இயர்**
- 22வருடம் அரும்பாடுபட்டு ஆங்கில அகராதியை 1844ம் ஆண்டு விற்பனைக்கு அனுப்பிய அச்சகம் எது?
  **ஒக்ஸ்போட் அச்சகம்**
- சட்ட மொழி என்று அழைக்கப்படும் மொழி எது?
  **கிரேக்கம்**
- கவிஞர் ரவிந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசைப் பெற்றுக் கொடுக்க காரணமாக இருந்த இலக்கியம் எது?
  **கீதாஞ்சலி**
- ஏரிகள் நிறைந்த நாடு எது?
  **பின்லாந்து**

*குலதீபா, க.ம.ம.வித்தியாலயம்.*

## வாழ்க்கையில் முன்னேற

## வறுமை ஒரு தடையல்ல

★ ஆபிரகாம் லிங்கன் ஓர் ஏழை விறகுவெட்டியின் மகன். அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார்.

★ தோமாஸ் அல்வா எடிசன் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த படகு செய்பவரின் மகன். விஞ்ஞானியாக வளர்ந்து அளப்பரிய சாதனைகளைப் புரிந்தவர்.

★ ஜோசப் ஸ்டாவின் சோவியத் நாட்டின் தலைவராக இருந்தவர். இவர் செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகன்.

★ உலகம் போற்றும் உன்னத விஞ்ஞானியாக மாறிய பெஞ்சமின் பிராங்ளின் ஒரு மெழுகுவர்த்தி வியாபாரியின் மகன்.

★ உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாறிய ஹென்றி.ஃ.போர்ட் ஒருபண்ணைத் தொழிலாளியின் மகன்.

*எம். ஹேமா, செட்டிபாளையம்*

## சிறுகதைகள்

# நினைத்ததும் ------ நடந்ததும்

"அம்மா..... அம்மா....." என அழைத்த வண்ணம் வீட்டினுள் நுழைந்தாள் அனுசயா. அவளின் முகம் கோபத்தில் சிவப்பேறியிருந்தது. அவளின் வருகையை எதிர்பார்த்திராத தாய் மரகதம் "ஏன் அனு இப்படிச் சத்தம் போடுறா. என்ன விஷயம் ஊர்ல இருந்து சீக்கிரமா வந்திட்டா" என்றபடி மகளின் அருகில் சென்றவள் திகைத்தாள். "அனு என்னாச்சு ஏண்டா அழுறா" என்று ஆதரவாய் அவளைப் பிடித்து கதிரையில் அமர்த்தினாள்.


"அம்மா இன்னிக்கு மீனாட்சிக்கு கல்யாணமாமே ஏன் என்னைக் கூப்பிடல்ல. அவளுக்கு என் மேல ஏதாச்சும் கோபமா அம்மா. சுமதி தான் சொன்னா. முதல்ல நானும் நம்பல. அவ இப்ப நான் கல்யாணத்துக்குத் தான் போறன் நீயும் வந்து பாரன் என்று சொன்ன பிறகு தான் எனக்கு அங்க இருப்புக் கொள்ளல்ல" என ஒரே மூச்சில் சொல்லியவள் ஏக்கத்தோடு தாயின் முகத்தை ஏறிட்டாள். "அடி பைத்தியமே உனக்குச் சொல்லாம அவ கலியாணம் கட்டிக்குவாளா என்ன? முதலிலேயே நம்ம வீட்டுக்குதான் வந்தா. நேரிலே விசயத்தைச் சொல்லி உன்னையும் கேட்டா. நான்தான் உன்னட்ட சொல்லி அனுப்புறதாச் சொல்லி அனுப்பிட்டேன். ஆனால் மறந்திட்டடேன். நீ சொன்னதுக்கு பிறகுதான் ஞாபகமே வந்திச்சு" என்று தலையில் கை வைத்தாள் அம்மா. " நீங்க இப்படித்தான் முக்கியமானதையெல்லாம் மறந்திடுவீங்க. சரி நான் போய் ரெடியாகிறன் என்று சொல்லியபடி எழுந்து சென்றாள்.

"அனு இன்னிக்கு என்னால வரமுடியாதம்மா. உனக்குத் தெரியும் தானே என்னோட வயிற்று வலி. அவங்க கால் மாறிப் போறப்போ போய்ப் பார்க்கலாம். இன்னிக்கு நீ போயிட்டு வா சரியா'' என்றாள்.

"சரிம்மா நானே போய் வாறன்" என்று தாயின் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளிவிட்டு ஓடினாள் அனுசயா.

தன் மகள் சிறு பிள்ளைபோல துள்ளி ஓடியதைப் பார்த்த மரகதம் "அனு இனி என் பேச்சைத் தட்டமாட்டாள் என்று நினைக்கும் போது சந்தோஷமாக இருந்தாலும், கல்யாண மண்டபத்தில் வைத்து அந்த அதிர்ச்சியை எப்படித் தாங்குவாளோ என்று நினைக் கையில் வேதனையாக இருக்கு'' என வாய் விட்டே சொன்னவள் கண்ணீரைத் துடைத்த படி சென்றாள்.

கல்யாண மண்டபத்தை அடைந்ததும் விரைவாய் தன் நண்பியின் அறையினுள் நுழைந்தாள்.



"என்ன அனு இப்படி பண்ணிட்டையே இதுதான நீ வார நேரமா" என செல்லமாகக் கோபித்த மீனாட்சியை தட்டி விட்டவள் "அப்படி இல்லடா நான் ஊர்ல இருந்தேனா. வர முடியாத சூழ்நிலை. அது கிடக்கட்டும் யாருடி மாப்பிள்ளை? உனக்குப் பிடிச்சவரு தானே? இது ஒண்ணும் கட்டாய கல்யாணமில்லையே'' என அவளைச் சீண்ட,

"சீ, போடி நீ லேட்டா வந்ததுக்கு உனக்கு என்ன தண்டனை தெரியுமா? மாப்பிள்ளைய மேடையில் பார்த்த பிறகுதான் அவரைப் பற்றிய விபரம் சொல்லுவன்" என்றாள் மீனாட்சி. "மீனு அதுவரை தாங்காதுடா, பிளீஷ் சொல்லுடா'' "இல்ல போடி"

"சரிதான் போடி நானே பார்த்துக்கிறன். நீதான் வச்சிக்கனும் உன்னோட மாப்பிளைய" என பொய்க் கோபத்துடன் மீனாட்சிக்கு அலங்காரம் செய்ய உதவினாள் அனுசயா.

"அனு கேட்க மறந்துட்டேன் உன்னோட லவ் விசயம் உங்கம்மாவுக்கு தெரிஞ்சு போச்சு எண்டு சொன்னியே இப்ப என்ன ஆச்சு"

மீனாட்சியை நோக்கினாள் "அது தெரிஞ்சதா அம்மா காட்டிக்கவே இல்லடி. என்ன நடக்குமோ தெரியாது. ஆனா யாருக்காகவும் என் காதல நான் விட்டுக் கொடுக்க மாட்டேன் தெரியுமா'' என்ற அனுசயாவின் கண்கள் பனித்திருந்தது.

"மீனா அதெல்லாம் இப்ப எதுக்கடி. இப்ப நீ கல்யாணம் பண்ணப்போற அப்புறம் நான் கல்யாணம் பண்ணும் போது இதெல்லாம் பேசலாம் என்ன?' என்று பேச்சை மாற்றினாள் அனுசயா.

"அனு உன்னோட ஆள எனக்குக் காட்ட மாட்டியாடி'' என்றாள் மீனாட்சி.

"சரி, சரி அப்புறமா பாக்கலாம்" என்று விட்டு அவ்விடத்திலிருந்து நகர்ந்தாள்.

மாப்பிள்ளை மேடையில் உட்கார்ந்திருக்க ஐயர் மந்திரம் ஓதிய வண்ணம் இருந்தார். அனைவரும் மணப் பெண்ணின் வருகைக்காக காத்திருந்தனர். தோழி என்ற முறையில் அனுசயா மீனாட்சியை அழைத்து வந்து மாப்பிள்ளையின் அருகில் இருத்தினாள். மாப்பிள்ளையின் முகத்தைப் பார்க்க முயற்சித்து ஏமாந்தாள் அனுசயா. தாலி கட்டி இரண்டு முடிச்சு போட்டவன் மூன்றாவது முடிச்சுக்காக கையை நீட்டிய அனுசயாவிடம் கொடுத்தவன் அவளைப் பார்த்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவனால் அவளது பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டேன். ஆனால் அனுசயாவால் இலகுவில் முகத்தைத் திருப்ப முடியவில்லை. ஒரு கணம் அப்படியே நின்றாள்.

"என்னம்மா முடிச்சு போட்டுட்டியா'' என்ற ஐவரின் குரலில் திடுக்கிட்டவள் விரைவில் முடிச்சை போட்டு விட்டு அப்பால் சென்று விட்டாள்.

அனுசயாவிற்கு மயக்கம் வந்து விடும் போலிருந்தது. சற்றுத் தள்ளி இருந்த கதிரையில் அமர்ந்தாள். கண்களில் நீர் முட்டி காட்சிகள் மங்கலானதும் சுயநினைவிற்கு வந்தவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவளது சிந்தனை அவளைச் சுற்றியே வட்டமிட்டன. "அட சே.. இவனுக்காகவா பாகாய் உருகினேன். இவன் கிடைக்கவில்லையென்றால் தற்கொலை என்றெல்லாம் நினைத்தேன் எவ்வளவு முட்டாள் நான். அம்மாவின்ர பேச்சைக் கேட்காமல் இவ்வளவு நாளும்

அந்திநிலா, மட்டக்களப்பு

என்ர வாழ்வையே வீணாக்கிட்டேனே'' என்று வாய் விட்டுச் சொல்ல முடியாதவளாய் எண்ணி எண்ணி கண்ணீர் விட்டாள் அனுசயா.

"அனு இங்க என்னடி பண்ணுற. வா அவர அறிமுகப்படுத்தி வைக்கிறன்" என்றபடி அங்கு வந்தாள் மீனாட்சி. மீனாட்சியை ஏறிட்டவள்.

"மீனா அவர எனக்கு ஏற்கனவே தெரியும். சும்மா உன்னிடம் விளையாடிட்டேன். கோவிச்சுக் கொள்ளாதேடி. இதோ பாரு நான் இங்க வரும் போதே அம்மாவுக்கு வயிற்று வலியாக இருந்தது. இப்ப எப்படி இருக்காங்களோ தெரியல்ல. நான் அவசரமாப் போகணும். சாரிடா" என்ற அனுசயா மீனாட்சியின் பதிலுக்கு காத்திராமல் மண்டபத்திலிருந்து வெளியேறினாள்.

இத்தனை நாள் யாருக்காக பெத்த தாயைக்கூட எதிரியாக பார்த்தாளோ, எடுத்தெறிந்து பேசினாளோ, அந்தக் காதலன் இன்னொருத்திக்குச் சொந்தமானது அவளைப் பக்குவப்படுத்தி விட்டிருந்தது. இனி தன் தாய் சொல்லைத் தட்டுவதில்லை என்றும், தன் மிஞ்சிய வாழ்நாள் முழுதும் தன் தாய்க்கே என்றும் முடிவெடுத்தவளாய் ஓட்டோவில் ஏறினாள் அனுசயா.

---

# யார் அந்த மனைவி

கே.சுகந்தா
அம்பிளாந்துறை

அல்பத்தைப் புரட்டிப் பார்த்த பிரியாவிற்கு அவளுடைய போட்டோ இருக்க வேண்டிய இடத்தில் யாரோ ஒருத்தியின் போட்டோ இருந்ததைக் கண்டதும் இதயமே வெடித்தாற்போல் இருந்தது. அதிர்ச்சி அடைந்தாள்.......

அந்த யாரோ ஒருத்தியின் பக்கத்தில் மாலையும் கையுமாக மாப்பிள்ளைக் கோலத்தில் .......... பார்க்கப் பார்க்க நெஞ்சு நெருப்பாக எரிந்தது.


ஏற்கனவே கட்டிய மனைவியை தைரியமாகத் தூக்கி எறிந்து விட்டு இன்னொருத்தியோடு வாழ்க்கையா? பிரியாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அநாதை என்று என்னை ஏமாற்றி விட்டானே! இவனிடம் மாட்டிக்கொண்டது நானா? முதலிரவின் போது என்னிடம் மறைத்து விட்டானே. என்னை ஏமாற்றி துரோகம் செய்திருக்கின்றான். எனக்குச் செய்யும் துரோகமா? என் பெற்றோருக்குச் செய்யும் துரோகமா? புரியவில்லையே! இவனைப்பற்றித் தெரியாமலா எனக்குத் திருமணம் செய்து வைத்தார்கள் எனது பெற்றோர்! தனக்குள்ளே தானே புலம்பிக் கொண்டாள்.

''இவன் முதல் மனைவியால் துரத்தப்பட்டவனா? அவளை விட்டு ஓடி வந்தவனா?" தனது வீட்டில் இருந்து அவளையே ஆயிரம் கேள்விகளைக் கேட்டுக்கொண்டவளாக தனது கணவனைத் ''துப்பறியும் பணியில்" ஈடுபட்டாள் பிரியா. எனக்குத் தெரியாமலே பாவி மகன் இத்தனை நாளும் தனக்குள்ளே மறைத்து வைத்திருக்கின்றானே. மகாபாவி என தனக்குள் திட்டிக்கொண்டாள். பெண்கள் என்றால் ஆண்களுக்கும் அடிமைகள் என நினைக்கி ன்றார்களா? பெண்களால் எதனையும் சாதிக்க முடியாது. என்று எண்ணிவிட்டார்களா? எப்பவும் அடிமைகள் இல்லை பெண்கள். எனத் தனக்குள் ஒரு வைராக்கியத்தை வளர்த்துக் கொள்கின்றாள். பின்னர்....

குருபரனின் முதல் மனைவியைக் கண்டு பிடிக்கும் வரை இந்த விடயத்தை தெரியப்படுத்தக் கூடாது. என நினைத்தாள்.கவலை மறக்க வெளி இடங்களுக்குச் சென்று தன்னை மாற்றிக்கொண்டாள்.

காலையில் எழுந்ததும் அந்தப் போட்டோவில் காணப்படும் இலக்கத்தை எடுத்துக்கொண்டு ஸ்ருடியோவைக் கண்டுபிடித்து அதில் ''மறுபிரதி" ஒன்றை எடுத்தாள். போட்டோவில் தனது கணவனை நீக்கிவிட்டு கணவனுடன் காணப்பட்ட அந்தப் பெண்ணை மாத்திரம் எடுத்துப் பத்திரிகையில் விளம்பரம் செய்தாள். அச்சாக்கப்பட்டு பத்திரிகையில் வெளியானது. ''இவரைத் தெரிந்தவர்களிடம் தொடர்பு கொள்ளவும். கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்" எனபிரதியின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

மறு நாளே சில விபரங்கள் கிடைத்தன. தான் நடாத்தும் இந்தத் திட்டத்திற்கு வெற்றி கிடைக்கும்





என நினைத்து பிரியா சந்தோஷமடைந்தாள்.

அவள் ஒரு துப்பறிவாளி என்பதால் மூளை வேகமாக வேலை செய்தது. தனக்குக் கிடைத்த தகவலின் படி காரைச் செலுத்தினாள். அந்தத் துரோகியின் பெயர் மதி எனவும் தெரியவந்தது. பெயரை மனதிற்குள் பதிவு செய்து கொண்டாள். வீதியால் காரைத் திருப்பினாள். குறிப்பிட்ட இடம் வந்ததும் காரை நிறுத்திக் கொண்டாள். சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தாள். ஒரு பெரியவர் தென்பட்டார்.

அவரிடம் ஐயா! இந்த விலாசம் உடையவரின் வீடு எது எனக் கேட்டாள். அவர் வீட்டைக் காட்டி விட்டுச் சென்றார். அதே விலாசத்திற்கு காரைச் செலுத்தினாள். அங்கே காரை நிறுத்தி அந்த இலக்கமுடைய வீட்டின் வாசலுக்குச் சென்றாள் பிரியா. கதவில் ''ஜோதி" எனப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. மதி என்பது யார்? ஜோதிக்கும் மதிக்கும் என்ன தொடர்பு ? என் கணவன் எப்படி இவளிடம் மாட்டிக்கொண்டான்? கேள்விக்கு என்ன பதில் எனப் பிரியாவிற்குத் தெரியவில்லை. தன் கணவனை நினைத்த போது ஆத்திரமாகவும் குழப்பமாகவும் இருந்தது.

அதே நேரம் போட்டோவில் காணப்படும் அந்தப் பெண்தான் நிற்கும் வீட்டினை நோக்கி வருவதனைக் கண்டு பிரியா சந்தோசம் அடைந்தாள். அதேவேளை கோபமாகவும் இருந்தாள். இது ஒரு வாழ்க்கை விஷயம். குருபரனை பிரியாவால் மறக்கவும் முடியாது.

''எக்ஸ் கியூஸ்மீ!" என்றபடி அவளின் அருகில் சென்றாள் பிரியா. ''வட் யூ வாண்ட்" அவள் திரும்பிக் கேட்டு அவளை அழைத்து வீட்டிற்குள் சென்றாள்.

''மிஸ்" முன் பின் தெரியாத என்கிட்ட எதை எதிர்பார்க்கிறீங்க?" பயந்தவளைப் போல் கேட்டாள் ஜோதி.

உனக்கு அவசியம் என்றால் நான் சொல்லுறன். துடுப்பறியும் குழுவில் இருக்கிறேன். அங்கிருந்து தான் வருகிறேன். ''உன்னைப் போன்றவர்களைக் கவனிப்பது என்வேலை..." என்று சொன்னபடி சி.ஐ.டி காட்டைக் காட்டினாள்.

ஜோதி பயப்படவில்லை. பதற்றமும் அடையவில்லை. பிரியா மறுபடியும் பல கேள்விகளைக் கேட்டாள். ''உன் பேரு"

''ஜோதி"

''அப்ப மதி என்கிறது"

''அதுவும் என் பெயருதான்"

''காரணம்?"

''நாடகங்களில் நடிப்பதால் வைத்துக் கொண்ட புனை பெயர்"

ஆனால் ''மதிதான் பிரபலியம்" சொல்லி முடித்தாள் ஜோதி. பிரியா தன்னுடைய பேசில் இருந்து குருபரனின் போட்டோவை எடுத்துக் காட்டினாள்.

''சிரித்தாள் ஜோதி" பிரியாவிற்குக் கோபம் வந்தது. ஆத்திரத்துடன் இவனை உனக்குத் தெரியுமா? எனக் கேட்டாள்.

எப்போ பார்த்த ஞாபகம்.

''அப்படியானால் உன் கணவந்தானே!"

''ஐய்யய்யோ!" இல்லங்க. இவர் என்னுடன் நாடகத்தில் நடித்தவர். கதாநாயகனுக்கு சுகமில்லை என்று படுத்ததனால் அவசரத்துக்கு இந்த ஆளைத் தூக்கிப் போட்டோம். இந்தப் போட்டோவும் நாங்க நடிச்சாப்ப எடுத்ததுதாங்க! சத்தியமா சொல்லுறன்.

''அப்படியா?" என ஆச்சரியப்பட்டாள். பிரியா ஜோதிக்கு மகிழ்ச்சியாக கை கொடுத்து விட்டு தனது கார் இருக்கையில் அமர்ந்தாள்.

பிரியாவின் கண்கள் முன் நிலவு போல் வந்து நின்றான் குருபரன்.

இனி அவள் வாழ்வு வசந்தந்தான்.

## கும்ப கர்ணனாய் குறட்டை விட்டுத்தூங்காதே!

ஆத்மனே...
ஆருயிர் நண்பனே...
அறிவுரை ஒன்று புகல்கிறேன்
அடியொற்றி நடப்பாய்.

- - - -

கும்ப கர்ணனாய்
குறட்டை விட்டுத் தூங்காதே
விடிந்து விட்டது
வேலைக்குப் புறப்படு.

- - - -

குறட்டைத் தூக்கத்தால்
குடும்பமே தூங்கும்
தூங்கித் தூங்கியே
தொலைக்காதே வாழ்நாளை.

- - - -

பின்னேறுவதற்கென்றே
பிறந்தவனா நீ
மூளையைப் பயன்படுத்து
முன்னேறு.

- - - -

எறும்புக் கூட்டத்தின்
சுறுசுறுப்பைப் பார்
பொறுப்புணர்ச்சி அற்றவனாய்
புரள்கிறாயே படுக்கையில்...!

- - - -

இளைஞன் நீயே சளைத்தால்
எவர் தான் உழைப்பதோ
உழைக்கப் புறப்படு
உடனே புறப்படு.

- - - -

அடுப்படிப் பூனையும்
அதிகாலையில் எழும்பும்
படுக்கையில் கிடந்தால்
பணமென்ன வருமா?

- - - -

மூளையின் மூலையின்
மூடத்தனம் எதற்கு
வாழவை குடும்பத்தை
விரைந்துமே புறப்படு.

- - - -

முழு உண்மையையும்
மூளையில் ஏற்று
விழி... எழு –வேலைக்குப் புறப்படு...
வையகம் உனை வாழ்த்தும்.

*கன்னிமுத்து வெல்லபதியான்*
*எருவில்.*

## காரணம்

அகிலமெல்லாம் அழகான
ஆடவர் இருக்க
அழகின் அலைகடலே
சிரிப்பின் சிகரமே
குணத்தின் குமுதமே
பண்பின் பணிவே
நீ என்னை
பின்னே பின்தொடர
காரணம் உண்டா?

*கே.லவன், நாவிதன்வெளி.*

## சுனாமியின் குழந்தை

கருவினில் சுமந்தவளும்
காத்து வளர்த்த தந்தையும்
கரிய பேரலைக்கு இரையாயினர்
உன்னைத் தூக்கி வளர்த்த
அன்புச் சகோதர(ரி) களோ
காணாதோர் பட்டியலில் .....
உறவினர் என்பதற்கு
யாருமே இல்லை
அப்படியாயின்
நீர் யார்? அனாதையா?
இல்லையில்லை சுனாமியின்
குழந்தை

*சுக்கிரன்-சுலோசனா*
*மண்டூர்.*

## நிலையில்லை

விழி திறந்திருந்தும் - எம்
வழி தெரியவில்லை!
முகம் அறிந்திருந்தும் - அவர்
மொழி புரியவில்லை!
உறவுகளிருந்தும் -யாரும்
உதவிட வரவில்லை!
பட்டமிருந்தும் - அரசியல்
செல்வாக்கில்லை!
உயிரிருந்தும் - உடலில்
வலுவிருக்கவில்லை!
ஆட்சி கைமாறினாலும் - தமிழர்
அவலம் குறையவில்லை!
மூன்றாம் தரப்பிருந்தும் - பேச்சில்
முன்னேற்றமில்லை!
நிசப்தம் நிலவினாலும் - நாளை
நிலையில்லை!

*திருச்சுதாகரன், அன்னமலை.*

## எழுத முடியாத கவிகள்

விதி என்கிறான் ஒருத்தன்.
எல்லாம் காலம் என்கின்றான்
இன்னொருத்தன்.
எழுதியதை அழித்து
எழுத முடியாது என்கிறான்
உடனிருப்பவன்.
தவிர்க்க முடியாத
கிரகப் பலன் என்றும்
நேர்த்தி வைக்க வேண்டிய
கரும்பறவைக் காலம் என்றும்
தேற்றுகின்றனர் இன்னும் பலர்.

- - -

மனது மட்டும்
எதையோ கேட்க அவாவுகிறது.
மணற்பரப்பில் எழுதி அழிந்த
ஓவியங்களாய் அவை இல்லை.
கருமுகிலோடிய பின்
ஒளி தெரியும் என நம்புகின்றோம்.
முடிந்து விட்ட எதையும் பற்றி
எம்மிடம் கதைத்துக்
கொண்டிராதீர்கள்.
கழிவிரக்கக் கண்ணீர்த் துளியை
விட
ஊன்றுகோல் பற்றி
எழவே விரும்புகின்றோம்.

- - -

வானத்திலும் பறக்க முடியும்
நிச்சயமாய்
வலிகளைத் துடைத்து விட்டு
வண்ணக் கனவுகளின்
இறக்கைகளோடு

*அம்புலி.*

## அவலங்கள்

சமுத்திர விசித்திரத்தால்
மாண்டது கோடி உயிர்
எத்தனை உறவினர்கள்
எத்தனை உற்றார்கள்
எண்ணித்தான் பார்க்கலாமா
சமுத்திர ராஜன் கால்
பதித்த இடமெல்லாம்
எம்மவர் இருப்பிடங்கள்
இருந்த இடமே இல்லை
பூண்டிருந்த நகைகள்
இல்லை
வீட்டிலிருந்த பொருளுமில்லை
கடல் அடித்தது சிலவற்றை
கொள்ளைக் கூட்டங்கள்
அடித்தது சிலவற்றை
பாடசாலைகளில் கேட்கிறது
ஒப்பாரிச் சத்தம்
கூடாரங்களில் கேட்கிறது
ஒப்பாரிச் சத்தம்
இழப்பீடு தாறார்கள்
வீட்டிற்கும் பொருளிற்கும்
மடிந்த உயிருக்கு
நிகராகுமா இது
நிவாரணங்கள் தரும்
இப்போது நிம்மதி
இனி எப்போதும்
நிம்மதியாயிருக்க
என்னதான் வரும்.

*கிருத்திகா.சௌமியரூபன்*
*களுவாஞ்சிகுடி*

## வந்த கனவு

என் பிரியத்தின் பிரிவு - அது
என் சந்தோசத்தின்
கருச்சிதைவு -நீ
சென்ற தூரம்வரை...
நிழலாய் நீண்டிருக்கிறது
என்- நெஞ்சத்தின் நினைவு...!

-- -- -- --

தவழ்ந்து வரும் தென்றலின்
உன் நலம்
விசாரித்துக் கொள்கிறது
என் நெஞ்சம்...
பசுஞ்சோலை மலர்களில்
உன் வாசம் தேடுகிறது
என் உள்ளம்...!

-- -- -- --

என் கனவுகள்
கலைந்து போகையில்...
என் கண்ணீர் மழையில்
தலையணை கூட
தாகம் தணித்துக் கொள்கிறது...!

-- -- -- --

நீ - என்
தூரத்து விண்மீனாய்
ஆகிப் போனதால்...
என் இதயவீணை
இன்பங்களை இழந்து
இருட்டுக்குள் மூழ்கிறது.

*எம்.ரி.எம்.யூனுஸ்*
*காத்தான்குடி*

## நம்பி விடாதே நண்பா

தோளோடு தோள்
சேர்த்து நின்று
தோல் பைக்குள்
என்ன இருக்கின்றது
என்று பார்க்கும்
தோழனையும்,
தோளோடு தோள்
உரசித் திரிந்து
தோகை மயில் போட்ட
பண நோட்டுக்கள் உன்னிடம்
இல்லாவிட்டால்
உன்னைத் தோல்விக்குள் தள்ளும்
காதல் தோழியையும் நீ
எப்போதும் நம்பி விடாதே
என் நண்பா!

*தி.சுதேஸ், சங்கமன் கிராமம்*

## விண்ணப்பித்துப் பார்!

மனசுக்குள் பட்டாம் பூச்சி
சிறகடிக்கும்
நீயும்
வேலைக்கு விண்ணப்பித்துப்பார்!

காத்திருப்பின் நீளம் தெரியும்
நிமிசங்களும்
யுகங்களாம்
நாட்களும்
காலனாவான்
நீயும் வேலைக்கு
விண்ணப்பித்துப் பார்!

விசாரிப்புக்களும் விசனமுண்டாக்கும்
நல்ல உணவும்
நகைப்பதாய்த் தோன்றும்
புதிய உடையும்
புகைச்சல் உண்டாக்கும்
நீயும்
வேலைக்கு விண்ணப்பித்துப் பார்!

ஏமாற்றத்தின் ஆழம் புரியும்
இன்பங்கள் அனைத்தும்
கணத்தில் தொலையும்
நீயே உனக்கு
எதிரியாவாய்
நீயும்
வேலைக்கு விண்ணப்பித்துப் பார்!

*அக்கரை ,வாணி.*




## மரத்துப் போய்விட்டனர்

ஏய் சுனாமி அலையே
நீ என்ன அமைதிக் கடலா - இல்லை
உயிர் எடுக்கும் எம கடலா நீ

-- -- -- -- -- --

உன்னில் மீன் பிடித்து
வாழ்வதற்காகவா பிணங்களை
கடற்கரை மயானத்தில் மீன்களாய்
விதைத்து வைத்தாய்

-- -- -- -- -- --

கரையோர மக்களை - நீ
காவு கொண்டது - உன்
மீது கொண்ட தெய்வ
நம்பிக்கைக்காகவா

-- -- -- -- -- --

கடலைத் தெய்வம் என
வாழ்ந்த மக்கள்
கடல் தெய்வமென்பதை
நிறுத்திவிட்டனர் அத்துடன்
மரத்தும் போய்விட்டனர்.
பல மக்கள்

*தி.கண்ணன், எருவில்.*

## இமயமாய் எழு

யுத்தங்கள் பல கண்டும் நீ
துவளவில்லை
ரத்தங்கள் பல இழந்தும் நீ
விழவும் இல்லை
போர் முடிந்து என்று நீயும்
உறங்கவில்லை தமிழா
வேரோடு அறுத்தெறியா
விதையும் நியே தமிழா
பாரோடும் போர் தொடுத்தும்
விழாவேங்கை நின்
அலையாலே மாண்டதேனோ -
உன்
மலைக்கல் நெஞ்சம்
சுனாமி உனக்கு சினமென்றால்
அனலாய் எழு நீ கனலாக
விழுந்தது நீயும் சுடு காடன்று
சொர்க்கத்தில் தனியொரு
வீடொன்று
விழ விழ எழுவது உன் பழக்கம்
விழுந்தும் உயர்வது நம்
பழக்கம்
விழுந்து கிடக்க நீ துரும்பன்று
வழுவா நெஞ்சுன் இரும்பன்றோ
உடமை உயிர்கள்
இழந்திருந்தும்
நம்பிக்கை ஒன்றை
இழக்கவில்லை
திடமாய் உயர்ந்தது உன்
மன்மொன்றை
சிகரம் தொடு உன் கரம்
கொண்டு
விண் தொட உனக்கு வீரம்
உண்டு-தமிழர்
நம்பிக்கை உனக்கு நிறைய
உண்டு
எழுவாய் இமயமலை போலே
திகழ்வாய் சரியா மலையின்
நிலைபோலே

*ச.கோகுலதாஸ், களுதாவளை.*

## தமிழினம்

தமிழர் என்ற இனம்
தரணியில் மூத்த இனம்
மறவர் என்ற பெயருடன்
வாழ்ந்த எங்கள் இனம்
வீழ்ந்து விட விட மாட்டோம்
தாழ்ந்து விட்ட தமிழனை
மீண்டும் எழுறசியுற
மானமுள்ள தமிழர்கள்
மனத்திடம் கொண்டுள்ளனர்
தானம் பெறுவோரை
தரணி கண்டு நகையாடுமே!

*லோசன்*
*ஆரையம்பதி.*

## அழகு

பூவுக்கு மணம் அழகு
பூமிக்கு புதிர் அழகு
கண்ணுக்கு இமை அழகு
கடலுக்கு அலை அழகு
பெண்ணுக்கு பொறுமை அழகு
வெண்ணிலாவுக்கு வெண்மை அழகு
நட்புக்குப் பிரிவு அழகு
மனிதனுக்கு மன்னிப்பு அழகு
உனக்கு உன் கண் அழகு
எனக்கு நீ அழகு

*ம.குபேரன், மண்டூர்-01*

## மறந்து விடு

பக்கத்தில் நான் இருக்க
பருவ மகள் என்றெண்ணி
பாசத்தால் என்னை
பறிக்க நினைக்காதே!

உன் அசைவுகள்
ஒவ்வொன்றும் என்னை
அசைய வைக்கின்றது
அதற்காக என்னை
அடைய நினைக்காதே!

நான் செய்யும் குறும்பை -நீ
மிக இரசிப்பாய் என்பது
எனக்குத் தெரியும்
அதற்காக நான்
குறும்புகள் செய்பவன்
என்று நினைக்காதே!

என் சிரிப்புத்தான் உனக்கு
பிடிக்கும் என்றாய் அந்த
சிரிப்பையும் விட்டு
விடுகிறேன்
அதனால் நான் கோபமாய்
இருப்பேன் என்று -நீ
சோகமாய் இருக்காதே!

இவையெல்லாம் ஏன் நீ
கூறுகின்றாய்
என்றால் காரணம்
சொல்வேன் நான்
படிக்க வந்த நாம் பருவக்
கோளாறால்
காதல் கொண்டு
காத்திருப்பவர்களின்
கனவுகளைக் கலைத்து
விடக்கூடாது என்பதற்காக
மறந்துவிடு!... என்னை அல்ல
என்மீது கொண்ட காதலை

*கா.தாஸ்.*

# கல்முனையைக் குழப்பிய சுனாமிக் குழந்தை



கல்முனையில் குழந்தையொன்று சர்வ தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த வாரத்தில் கல்முனையை பரபரப்புக்குள்ளாக்கிய இந்தக் குழந்தை சுனாமியில் சிக்கி பெற்றோரை இழந்துள்ளது. 42 நாட்கள் கழிந்த நிலையில் இன்னும் உரிய பெற்றோர் இனம் காணப்படாமல் நீதிமன்றம் மரபணுச்சோதனைக்கு (DNA Test) உத்தரவிட்டுள்ளது.

இக்குழந்தை தொடர்பான விபரங்களைப் பார்ப்போம். கடந்த 26.12.2004ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் சிக்கி இடிபாடுகளுக்கு மத்தியில் குழந்தை கிடந்துள்ளது. இதனைக் கல்முனையைச் சேர்ந்த எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா என்ற ஆசிரியர் கண்டெடுத்து அழகையா என்பவர் மூலமாக கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு ஒப்படைத்துள்ளார்.

சுனாமியில் பலியான 30 ஆயிரம் பேரில் சுமார் 15 ஆயிரம் குழந்தைகள் என்று கூறப்படுகின்றது. இன்னும் ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் காணவில்லை என்றும் செய்திகள் கூறுகின்றன.

இந் நிலையில் வைத்தியசாலையிலுள்ள அழகிய 03 மாத ஆண்குழந்தை பலரது கவனத்தையும் ஈர்த்தது. நூற்றுக் கணக்கானோர் வைத்தியசாலையை நோக்கிப் படையெடுத்தனர். தங்கள் குழந்தையா? என்று இனங்காண்போர் அதிகம். சிலர் தமது குழந்தை போலுள்ளது என்று கூறிச் செல்கின்றனர்.

இதற்கிடையில் முதல் மூன்று நாட்களாக அதாவது 26, 27, 28 ஆம் திகதிகளில் குழந்தை வைத்தியசாலையில் இல்லை என்று சொல்லப்படுகின்றது. இக்குழந்தையை புஷ்பா என்ற தாதி சென்ரல் கேம் வீட்டுக்குக் கொண்டு சென்றதாக ஜனாதிபதியிடம் முறையிட்ட ஆசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல் மூன்று தினங்களில் வைத்தியசாலை ஒழுங்காக இயங்கவில்லை. எனவேதான் பால் கொடுத்துப் பராமரிக்க அந்தத் தாதி கொண்டு சென்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் நியாயம் கூறுகின்றது.

தாய் பால் கொடுக்க அவதிப்பட்டும் காட்டவில்லையாம் என்றும் கூறுகின்றது. இந்நிலையில் பாண்டிருப்பைச் சேர்ந்த ஜெயராஜா ஜூனிதா தம்பதியினர்தான் உண்மையான பெற்றோர் என்று கூறி கல்முனை பொலிசில் முறைப்பாடு செய்து நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். வழக்கு இலக்கம் AR/01/05 ஆகும்.

அக்குழந்தையைப் பராமரிக்க பிரஸ்தாப பெற்றோரிடம் வழங்குமாறு நீதிமன்று 12.01.2005 இல் உத்தரவிட்டது. அதன்பிறகும் குழந்தை ஒப்படைக்கப்படாதது குறித்து ஜனாதிபதியிடம் முறையிடப்பட்டது.

"குழந்தைப் பராமரிப்புப் பணியை நாம் செய்கிறோம். அதிலிருந்து கைமாறினால் குழந்தைக்கு நோய் வரலாம். எனவே உண்மையான பெற்றோர் வரும்வரை வைத்தியசாலையில்

**(விரி.சகாதேவராஜா)**

இருப்பது நல்லது" என்று வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் டாக்டர் முகுந்தன் ஆலோசனை கூற நீதி மன்றமும் அதனை ஏற்று 02.02.2005 வரை வழக்கு பின்போடப்பட்டது.

அதன்படி கடந்த புதனன்று (02.02. 2005) கல்முனை நீதிமன்றத்தில் வழக்கு எடுக்கப்பட்டது. அன்று உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சுமார் 100 பேர் மன்றுக்குச் சமூகமளித்திருந்தனர். சிறுவர் நன்நடத்தைப் பராமரிப்புப் பிரிவினரின் வாதத்தில் அக்குழந்தைக்கு ஒரே ஒரு பெற்றோர் உரிமை கோருவதால் அதனை ஒப்படைக்கலாம் என்றனர்.

அதற்கு டாக்டர் முகுந்தன் மறுக்க அப்படியெனில் மரபணுச்சோதனை செய்தபின் ஒப்படைக்கலாம். அதுவரை 20.04.2005 வரை ஒத்திவைக்கப்படுகின்றது என கல்முனை மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்கியது.

அதன்பின் உரிமை கோரிய பெற்றோர் அழுதுபுலம்பி குழந்தை இருந்த வைத்தியசாலை விடுதிக்குச் சென்று தூக்கியெடுக்க வைத்தியசாலை ஊழியர்கள் முரண்பட நிலைமை சிக்கலானது. பொலிசார் வரவழைக்கப்பட்டனர். அத்துமீறி வைத்தி யசாலைக்குள் பிரவேசித்தவர்களை கைது செய்ய வைத்தியசாலை ஊழியர்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். விளைவாக பெற்றோர் உட்பட 04 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுவிக்க முயற்சி நடைபெற்றது. இருவர் பிணையில், இருவர் சிறையில் குழந்தைக்கு 09 பேர் உரிமை கோரியதாகக் கூறப்பட்டது. ஒரு மாயை என்றும், ஒரே ஒரு பெற்றோர் உரிமை கோரினால் குழந்தையை ஒப்படைத்திருக்கலாம் என்று ஒரு தரப்பு வாதம் கூறுகின்றது. இக்குழந்தையை வைத்தியசாலை ஏன் தொடர்ந்து பேண வேண்டும். மாறாக நீதிமன்றிடம் அல்லது சிறுவர் நன்நடத்தைப் பிரிவிடம் ஒப்படைத்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

மரபணுப் பரிசோதனையில் இவர்கள் தான் பெற்றோர் என்றால்..? மாறாக இல்லை என்றால் குழந்தையைத் தொடர்ந்து வைத்தியசாலை வைத்திருக்குமா? இவையெல்லாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். குழந்தை விடயத்தில் வைத்தியசாலை கூடுதல் சிரத்தை காட்டியுள்ளது என்றே கூறலாம்.

# தமிழீழத்தின் எதிர்காலக் கடற்கரைக் குடியிருப்புகள்

தமிழீழத்திற்கு இலங்கையில் நீண்ட கடற்பரப்பு மட்டுமல்ல கடற்கரையும் உண்டு.இது இலங்கையின் வடமேற்குக் கரையையும் கிழக்குக் கரையையும், தெற்கில் பாணமை வரையான தென்கிழக்குக் கரை வரையும் அடக்கியுள்ளது.இது முழு இலங்கையின் கடற்கரைத் தரையின் முக்காற் பங்கு எனப் பொருந்தும்.இந்தப் பெரும் பகுதியைத் தமிழ் பேசும் தமிழ் இனத்தவர்களும், தமிழ் பேசும் இஸ்லாமிய இனத்தவர்களும் தமது தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர்.

அதை எதிர்காலத்தில் தமிழினம் சரிவரப் பயன்படுத்த வேண்டுமென்பதை அருட்திரு கருணாரெத்தினம் போதகர் அவர்கள் புலிகளின் ஒளித்திரையில் தோன்றி சொல்லிய அந்தச் செய்தி தமிழினத்தை முழுமையாக எட்ட முதலே அதனை ஒன்பதாவது கடல் கோள் செயலிற் காட்டி உணர்த்தி ஒரு பாடம் படிப்பித்துள்ளது.

2004 டிசம்பர் மாதம் 26ந் திகதி நடந்த இந்தக் கடல் கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் யாவும் கடற்கரையை அண்டிய பகுதிகள். ஆதலால் மீள் குடியேற்றத்தின் போது சில காரியங்களைக் கைக்கொள்ள வேண்டியது விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கட்டாயச் செயற்பாடாகவே இருக்க வேண்டும் என்பதை தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். அதுபற்றிய எனது அனுபவக் கருத்துக்களைக் கீழே தருகின்றேன்.

கடலலைப் பாதிப்புக்கள் காலத்துக்குக் காலம் வங்கக் கடலில் உருவாகி வரும் தாழமுக்கத்தால் ஏற்படும் புயலனர்த் தங்களையும் தமிழீழத்துக்கு ஒரு சவாலாகவே இருக்கப் போகின்றது. இது மனித முயற்சியால் தடுத்து நிறுத்த முடியாத இயற்கை நியமம். எனவே இவற்றை மேற்கொள்ள வேண்டுமானால் நெடுங்காலப் பாதுகாப்புக்குத் தக்கதான சில குடியிருப்புக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இதனை பின்வரும் மூன்று அம்சங்களின் கீழ் பகுத்துணரல் நன்று என நம்புகிறேன்.

**01.** கடற்கரைக் குடியிருப்புக்களின் எல்லைகளை வகுத்து சட்ட விரோதமான குடியிருப்பு நிலத்தைப் பிரகடனம் செய்தல்.


**02.** அலைப் பெருக்கத் தாக்கத்தை எதிர் வடிவங் கொண்ட வீடுகளின் மாதிரியை அறிமுகப்படுத்தல்.

**03.** அலை உயர்வு (அ) அவதான- (ஆ) எச்சரிப்பு கடற்கரை நிலையங்கள். (இ) அபாய உணர்வு எச்சரிப்புப் பரப்பு தளங்களை கரையில் அமைத்தல்.

இதற்கான என் சிந்தனைகளைக் கீழேதருகிறேன்.

**01.** கடற்கரைக் குடியிருப்புகளுக்கு மக்களை அனுமதிக்கும் அபாயமற்ற எல்லைகளைத் தீமானித்தல். இத்தகைய குடியிருப்பு மீனவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். இத்தகைய காணிகள்

**கடலலை உயர்வு அழிவுத் தடுப்பு எச்சரிப்பு நிலைய அமைப்பு விபரம்**




மூன்று வலயங்களாகப் பிரித்து அறுதியிடப்படல் வேண்டும். இந்த வலய எல்லைகள் இப்போது நடைபெற்ற பேரழிவின் தடயங்களைக் கொண்டு வகுக்கப்படலாம்.

01. கடலோரத் தரை


02. பேரழிவுத் தரை

03. கடல் சீற்றத்தின் தாக்கம் குறைந்த தரை

இவற்றுள் முதலாவது கடலோரத் தரைக் குடியேற்றம் முற்று முழுதாகச் சட்டவிரோதமாக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது பேரழிவுத் தரை தக்க

**கடலலை உயர்வு அழிவுகளைத் தடுக்கத்தக்க கடற்கரை குடியிருப்புகளின் வீடுகளின் அமைப்பு**




அழிவுத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்த பின்னரே அதற்கென வடிவமைத்த மாதிரி வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்களை அமைத்துக் குடியேற அனுமதிக்கப்படல் வேண்டும்.

மூன்றாவது கடல் சீற்றத் தாக்கம் குறைந்த தரைக் குடியிருப்பு இங்கே அலைப் பெருக்கத்திலிருந்து பாதுகாப்புத் தேடக் கூடிய வீட்டு மாதிரிகளை உருவாக்கி அதன் படி வீடுகளைக் கட்ட அனுமதிக்க வேண்டும்.

எப்படியோ மக்கள் அலை அனர்த்த அபாய எச்சரிக்கையை அறிந்ததும் ஓடி ஒரு உயரமான கூரையை அடையத் தக்கதாக இடைக்கிடை மாடிகள் கொண்ட கட்டிடங்கள் இருக்க வேண்டும்.இவைகள் சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், போன்ற பொதுத் தாபனங்களாக இருக்கலாம். வசதி உள்ளவர்கள் வீடு அமைக்கும் போது இத்தகைய சிறு மாடிகளைத் தங்கள் வீடுகளில் அமைத்துக் கொள்ளலாம். இத்தகைய உயர் மாடிகள் வெள்ளப் பெருக்கோ அல்லது புயலழிவுகளோ அலை உயர்வு அழிவுகளுக்கோ புகலிடமாக அமையும். இதனால் தங்கள் பாதுகாப்புக்கும் மற்றவர்களின் தஞ்சத்திற்கும் புகலிடமாக அமையும்.

**கலாநிதி ஈழத்து பூராடனார்**
**க.தா.செல்வராசா கோபால் கனடாவிலிருந்து**

எனது கருத்தில் தோன்றிய கடற்கரை வாழிடங்களை அலைத் தாக்கத்திலிருந்து காப்பாற்ற நான்கு புறமும் முக்கோண வடிவுள்ள கூர்முனை வீடமைப்பு ஏற்றதென நம்புகிறேன். இதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் பொங்கிவரும் கடலலை வந்து வீட்டில் மோதுகையில் அந்த நீரின் தாக்கம் நீள் சதுர அமைப்புள்ள வீட்டின் சுவரில் மோதித் தள்ளும். ஆனால் அந்த நீர் மோதி இரண்டாகப் பிரிந்து செல்லுமானால் வீடு பாதிப்புக்குள்ளாகாது. அது போலவே சென்ற அலை திரும்பி வடிந்து வரும் போது வீட்டின் எதிர் முனைக் கூர் அதை இரண்டாகப் பிழந்து விடும்.இதனால் அலைத்தாக்கம் மிகவும் குறையும்.

அடுத்தது கடலலை உயர்வை காட்டும் கணனிக் கோபுரமும் அதை எச்சரிக்கைப் படுத்தும் அபாய ஒலி எச்சரிப்பு இயக்கமும் கடற்கரைக் கிராமங்களின் ஒரு முக்கியத்துவத்தைப் பெறுவது அவசியம். இதை இரவு பகலாக வருடம் முழுவதும் கண்காணிப்பதற்கும் பெருஞ் செலவு ஏற்படலாம். அதையும் தானாக இயங்கித் தன்னைத் தானே மனித வலு இல்லாமல் பேணிக் காக்கும் காவல் கோபுரத்தை அமைக்கலாம் என்பது என் எண்ணம்.அத்தகைய நிலையம் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதை அடுத்த படம் காட்டுகிறது. இதை மிகக் குறைந்த செலவில் கிராமங்கள் தோறும் அமைக்கலாம். பொறியியல் நுட்பப் பிரச்சினைகளும் மிக மிகக் குறைவானது. மின்சார எச்சரிப்பு ஒலி பெருக்கிக்கான மின்சாரவலு மட்டுமே தேவையானது. இதை ஒவ்வொரு கிராமத்திலும் அமைத்துக் கொள்வதால் கடற்றொழிலாளர்கள் கடல் அலை உயர்வை முற்கூட்டியே கவனித்துக் கொள்ளவும் வசதியாக இருக்கும். இந்தக் கோபுரத்தில் ஒளிரும் தனித்துவத்தைப் பிரதிபலிக்க வல்ல சிறுநிற விளக்கு கலங்கரை வழிகாட்டியாகவும் விளங்கவல்லது. இந்தச் சிந்தனைகள் பொறி நுட்பம் மிக்கதல்ல. அதை கடற்காற்று, புவி. இயல் அறிவுள்ளவர்களும் பொறியியலாளர்களும் தமது அறிவு நுட்பத்தைக் கொண்டு சீராக்குவது கடனாகும்.

அழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிக் குடியிருப்புக்களை மீளக் கட்டியமைப்பதில் இத்தகைய முன் எச்சரிப்பும் தேவை.

# தமிழின அழிப்புக்களின் நினைவுச் சுவடுகள்

இவ்வாறு நாட்கணக்கில் வாரக் கணக்கில், மாதக் கணக்கில் நடந்து, நடந்து அவர்களை அந்த பேரினவாத சிங்களக் கூலிப்படைகள் பேதலிக்க வைத்து விட்டனர். பின்பு தமது உறவுகளுக்கு நடந்த கதி என்ன என்பது அனைவருக்கும் தெரிந்து விட்டது.


இனியும் இக்கிராமத்தில் இருந்தால் மென்மேலும் இவர்களால் ஆபத்து என எண்ணிய மக்கள் படிப்படியாக கிராமங்களை விட்டு வெளியேறினர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய சிங்களப் பேரினவாத அரசு மக்கள் வெளியேறிய இடங்களில் சில முஸ்லிம்களைத் திட்டமிட்டு குடியேற்றம் செய்தனர். இவ்வாறான நடவடிக்கை மூலம் தமிழர் தாயகப் பிரதேசங்களை சிங்கள தேசத்துடன் இணைக்கத் திட்டமிட்டனர்.

**அக்கரைப்பற்று அகதி முகாம் படுகொலை:-**

அம்பாறை மாவட்டத்தில் பரவலாக நடைபெற்ற தமிழர் இனஅழிப்பு நடவடிக்கையில் சிங்கள இராணுவத்தினர் முஸ்லிம் கும்பல்கள் சிலரை இணைத்தே நடாத்தினர்.

அதாவது காலம், காலமாய் ஒன்று பட்டு வாழ்ந்து வரும் இவர்களின் உறவைப் பிரித்து தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் சிங்கள அரசோடு முஸ்லிம் சமூகத்தையும் இணைத்துக் கொள்ளும் நோக்கோடு இனத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டு நிற்கும் இவ்விரு உறவுகளையும் பிரித்து விட்டு வேடிக்கை பார்த்தனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழர் பிரதேசங்கள் அனைத்திலும் சிங்கள வெறியர்கள் தமது இனவெறி வேட்டையை ஆரம்பித்திருந்தனர். தமிழ் மக்கள் சுட்டும், வெட்டியும், பொல்லால் அடித்தும் வகை



தொகையின்றிக் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் அனாகரிகமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். இவை அனைத்தும் மக்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவ முகாம்களை நிறுவி இரவோடு இரவாக தமிழ்க் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு ஒவ்வொரு கிராம மக்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டு உறவினர்களின் கண் முன்னும் சிலரை விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டும் கொன்று குவித்தனர்.

சிங்கள இராணுவத்தின் திட்டமிட்ட இவ்வாறான சதித் திட்டங்களை அறியாத அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாக அவர்களின் கைகளில் அகப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இவர்களின் அட்டூழியங்களையும், ஆக்கினைகளையும் கண்ட மக்கள் தமது சொந்தக் குடியிருப்புக்களை விட்டு வெளியேறி அயல்க் கிராமங்களில் அகதிகளாய்த் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வந்தனர். ஆனால் இவர்களைக் கூட அந்தச் சிங்கள இனவெறியர்கள் விட்டு வைக்கவில்லை. அகதி முகாம்களையும் கொலை முகாம்களாக



மாற்றியிருந்தனர்.

"மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்" கிராமத்திற்குள் வைத்து அடித்து ஆக்கினைப்படுத்தி விட்டு மீண்டும் அகதி முகாமில் தஞ்சம் புகுந்த வேளைகூட விட்டு வைக்கவில்லை. அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எங்கெல்லாம் செல்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று அவர்களை அழித்தனர். அம்பாறை மாவட்டத்தை விட்டு தமிழர்கள் எங்கும் வெளியேறாத வண்ணம் பல இராணுவ முகாம்களை நிறுவியிருந்தனர்.

கிராமங்களை விட்டு வெளியேறி இராணுவ முகாம் வழியால் சென்ற அநேகமான அப்பாவிப் பொது மக்களை பிடித்தெடுத்து தனது இனவெறியைத் தீர்த்தனர். தாய்மாருடன் வந்த இளம் பெண்கள் பலரின் கையைப் பிடித்து கொற கொற வென முகாமிற்குள் இழுத்துச் சென்று மாறி மாறி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி சித்திரவதை செய்து கொன்றனர். விறகெடுக்கச் சென்றோர் மீன் பிடித் தொழிலுக்காகச் சென்றோர், கால் நடைகளை மேய்க்கச் சென்றோர், கூலித் தொழிலுக்காகச் சென்றோர், வேளா

**சுவடு -40**

ண்மை அறுவடைக்காகச் சென்றோர் எனப் பல வழிகளிலும் அப்பாவிப் பொது மக்களை துரத்தித் துரத்தி வேட்டையாடினர்.

1990ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இனக்கலவரம் தலைவிரித்தாடியது. இதனால் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்கள் நிலையாக இருந்து வாழமுடியாமல் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர். இராணுவத்தினர், ஊர்காவல் படையினர் மற்றும் முஸ்லிம் கும்பல்கள் எனப் பலபேர் பல்வேறு விதமான ஆக்கினைகளை எம் மக்கள் மீது புரிந்தனர். திடீரென தமிழர் கிராமங்களுக்குள் நுளையும் இவர்கள் அவர்களை அடித்து விரட்டி விட்டு இருப்பிடங்களைத் தீயிட்டுக் கொழுத்தினர். விலைமதிப்பான பொருட்

**தருவது-நிர்மலன்**

கள் பலவற்றைக் கொள்ளையிட்டனர். இதனால் உயிர்க்காப்புத் தேடி பல இடங்களில் இடப்பெயர்வுகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு கொடுமைகள் தாங்கமுடியாத மக்கள் தமது சொந்த ஊரிலேயே அகதிகளாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1990ஆம் ஆண்டு ஆனி மாதம் 24ஆம் திகதி இனக் கலவரத்தின் அகோரம் தாங்க முடியாத அக்கரைப்பற்றுக் கிராமத் தமிழ் மக்கள் அங்குள்ள மெதடிஸ்த தேவாலயம் மற்றும் ஆலையடி வேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயம், இராம கிருஸ்ணமிசன் பாடசாலை போன்றவற்றில் அகதிகளாய் தஞ்சம் புகுந்தனர்.

*(சுவடுகள் தொடரும்)*

**வாசகர் கவனத்திற்கு,**
**தொடர்ந்து வெளிவரும் இக் கட்டுரை தொடர்பான மேலும் தகவல்கள், ஆலோசனைகள், ஏதும் இருப்பின் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் எமக்கு அறியத்தரவும்.**
**எமது முகவரி:-**
**ஈழநாதம்(மட். பதிப்பு)**
**கொக்கட்டிச் சோலை**

---

*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:~ 21.02.2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 40

**குறுக்கெழுத்துப் போட்டி இல -40**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 |
| 5 | | ■ | | ■ | |
| 6 | | 7 | | 8 | ■ |
| 9 | | | ■ | 10 | 11 |
| 12 | | | ■ | 13 | |
| ■ | 14 | | 15 | | |
| 16 | ■ | 17 | | | |
| 18 | | ■ | | ■ | ■ |

### இடமிருந்து வலம்

01. மனிதருக்கு உள்ளதும், ஏனைய ஜீவராசிகளுக்கில்லாததுமான அறிவு.
05. புடவையை இதில் நெய்வார்கள். (திரும்பியுள்ளது)
06. முதல் எழுத்தைக் கொஞ்சம் திருத்தினால் இவனும் முதலையும் கொண்டது விடா என்னும் பழமொழி ஞாபகம் வரும்.
09. மருந்துப் புட்டிகளை அடைத்திருந்தும் இறப்பர், மரத்திலான அடைப்பான் இப்பெயர் பெறும்.
10. இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் வேட்டையாடப்படும் காட்டு விலங்கு.
12. இரவின் எதிரி திரும்பி வருகின்றான்.
13. செல்வம், மேன்மையைக் குறிக்கும் சொல்.
14. அடிபட்டு உட்காயம் உள்ள இடங்களில் வலிகுறைய இது பிடிப்பார்கள். (திரும்பியுள்ளது)
17. அரச சபைகளில் அரசனை வாழ்த்தி பாடல் இயற்சி பரிசு பெறுபவர் (குழம்பியுள்ளார்)
18. வெண்ணெய் திரண்டு வருகையில் இது உடைந்தது போல்.. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. ஒருவரின் குற்றத்திற்குத் தண்டனையாக அவரிடம் உள்ள பொருட்களை அரசு எடுத்துக் கொள்வது இப்படி அழைக்கப்படும்.
02. எதையும் மறுத்துப் பேசும் பேச்சு.
03. வாழை இனங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
04. மரணம், இழவு (தலைகீழ்)
07. தன்மை, முன்னிலைக்கு அடுத்ததாய் வருவது. (குழம்பியுள்ளது)
08. அறிவு ஜீவிகளை இப்படியும் அழைப்பர் (தலைகீழ்)
11. ஒருத்தியின் எதிர்ப்பால் (குழம்பியுள்ளது)
15. கண்டியில் உள்ள பௌத்த மாளிகையின் பெயர்
16. சாகரம்.

### குறுக்கெழுத்துப் போட்டி 38ற் கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆத்திரம்.
5. யாசகம்.
7. கன்னம்.
9. மணம்.
10. கார்.
11. (மு)காம்.
12. கங்கை.
13. மீதி.
16. அசோகன்.
18. அறவழி.

**மேலிருந்து கீழ்**

1. ஆரோகணம்.
2. தியானம்.
3. ரசம்.
4. (மோ)கம்.
6. அகங்காரம்
8. மீகாமன்.
10. சோனகர்.
14. திறன்.
15. சுழி.
17. அக(தி)

### பரிசு பெறும் அதிஸ்டசாலி

**மீராமுகைதீன்-ஹாலீத்**
**இல-21,காட்டுப்பள்ளி வீதி**
**ஏறாவூர்-03A**

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

1. செ.ஜோன்சன், சாஸ்திரியார் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
2. றுக்ஷன் சஜீத், பெரியகல்லாறு~02
3. ஜெ.நவபுத்திரன், அன்னமலை, கல்.நாவிதன்வெளி.
4. பி.கஜமுகன், நாவிதன்வெளி, கல்முனை.
5. பி.லவகுமார், மட்~எருவில், கண்ணகி ம.வித்.
6. எஸ்.யோகேஸ் எருவில்.
7. கு.உமா, பரமன் சந்தை வீதி, ஆரையம்பதி~01.
8. சு.வனஜா, மருங்கையடிப் பூவல், மண்டூர்.
9. ஆர்.மதனா, கரடியனாறு, செங்கலடி.
10. திருமதி.மி.பவானந்தலிங்கம், இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.

# வீரகாவியமான இந்த வேங்கையின் விடுதலை வரலாற்றுப் பதிவுகள்

















# அம்பாறை மாவட்டத்திலுள்ள நலன் புரி முகாம்கள்

கடந்த வாரத் தொடர்ச்சி.....

| இல | பிரதேச செயலகம் | முகாம்பெயர் | ஆண் | பெண் | சிறுவர் | மொத்தம் | அம்பாறையிலிருந்து |
|---|---|---|---|---|---|---|---|
| | | 09. அல்.நாசர் வித் | 424 | 403 | 877 | 1704 | |
| | | 10. அல்.மிஸ்பா வித் | 659 | 638 | 1277 | 2574 | |
| | | 11. அல்.சுகாரா வித் | 514 | 498 | 1084 | 2096 | |
| | | 12. ம.'.மூத் மகளிர் கல் | 445 | 409 | 1082 | 1936 | |
| | | 13. மக்கள் நூலகம் | 321 | 310 | 407 | 1038 | |
| | | 14. இஸ்லாபாத் | 329 | 301 | 611 | 1241 | |
| 11. | கல்முனை(தமிழ் | 01. சே.குடியிருப்பு கனேசா | 1119 | 1278 | 168 | 2565 | 21 கி.மீ |
| | | 02. பாத்திமாக் கல்லூரி | 660 | 811 | 140 | 1611 | |
| | | 03. பாண்டிருப்பு ம.வித் | 418 | 442 | 396 | 1256 | |
| | | 04. விஷ்ணு வித்தி | 412 | 382 | 92 | 886 | |
| | | 05. இ.கி.மி.வித்தி | 470 | 502 | 108 | 1080 | |
| | | 06. விவேகானந்த வித்தி | 150 | 133 | 91 | 374 | |
| | | 07. நாவலர் வித்தி | 128 | 147 | 10 | 285 | |
| | | 08. கல்முனை சிங்கள ம.வி | 374 | 408 | 84 | 866 | |
| | | 09. பிள்ளையார் கோவில் | 768 | 733 | 125 | 1626 | |
| | | 10. உவெஸ்லி கல்லூரி | 266 | 262 | 70 | 598 | |
| 12. | நிந்தவூர் | 01. இமாம் கசாலி வித்தி | 176 | 209 | 119 | 504 | 18 கி.மீ |
| | | 02. காஷிபுல் உலூம் வித் | 455 | 485 | 162 | 1102 | |
| | | 03. அல் மதினா வித்தி | 186 | 211 | 41 | 438 | |
| | | 04. அறபா வித்தி | 351 | 467 | 432 | 1250 | |
| | | 05. அல்-மினா வித்தி | 570 | 610 | 55 | 1235 | |
| | | 06. அட்டப்பள்ளம் | 86 | 83 | 10 | 179 | |
| 13. | காரைதீவு | 01. ஆண்கள் பாடசாலை | 510 | 515 | 541 | 1566 | 15 கி.மீ |
| | | 02. விபுலானந்தா மணி மண்டபம் | 260 | 240 | 293 | 793 | |
| | | 03. நேரு சனசமூக நிலையம் | 510 | 505 | 305 | 1320 | |
| | | 04. சண்முகா ம.வித்தி | 515 | 500 | 356 | 1371 | |
| | | 05. சபீனா வித்தி | 900 | 875 | 656 | 2431 | |
| 14. | சாய்ந்தமருது | 01. அல்.ஹிலால் வித்தி | 1122 | 1115 | 966 | 3203 | 17 கி.மீ |
| | | 02. ம.'.மூத் பாலிகா வித் | 810 | 1142 | 915 | 2867 | |
| | | 03. சாஹிரா கல்லூரி | 708 | 793 | 491 | 1992 | |
| | | 04. ஜி.எம்.எம்.எஸ்.வித்தி | 1536 | 1098 | 442 | 3076 | |
| | | 05. அல்-அமீன் நிலையம் | 632 | 620 | 591 | 1843 | |
| | | 06. மஸ்ஜிதுல் அறபா | 495 | 489 | 396 | 1380 | |
| 15. | சம்மாந்துறை | 01.முஸ்லிம் தேசிய பாட | 129 | 127 | 60 | 316 | 15 கி.மீ |
| | | 02. வளத்தாப்பிட்டி சந்தை | 129 | 123 | 16 | 268 | |
| 16. | இறக்காமம் | 01. மாணிக்கமடு தமிழ் வி | 26 | 35 | 09 | 70 | 10 கி.மீ |
| | மொத்தம் | 91 முகாம்கள் | 36607 | 38201 | 33283 | 108091 | |

-விரி.சகாதேவராசா-

# எமது தேசத்தின் கல்வியை..........

**கேள்வி:-** *எதிர்வரும் சில தினங்களில் 2005 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய தொழிலில் பயிற்சி பெறவென புதிய ஆசிரிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இவ்வாசிரிய மாணவ ஆட்சேர்ப்பின் போது மட்டக்களப்பு மாவட்டம் எவ்வகையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றன எனக் கூற முடியுமா?*

**பதில்:-** மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிக்கு 2005ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கும் விடயத்தைப் பொறுத்தவரையிலே தற்போது நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலங்களைப் போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அனுமதியானது கல்வியில் முன் தங்கிய மாவட்டங்களாகக் கருதப்படுகின்ற கொழும்பு, கண்டி, ஹம்பகா, குருநாகல் போன்ற மாவட்டங்களோடு எங்களது மாவட்டமும் கல்வியில் முன்னேறிய மாவட்டமாகக் கருதப்பட்டு இங்கு அதற்கான ஒதுக்கீடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே இந்தக் கடந்த காலப் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டம் மேலும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற வேளையிலே கஸ்ரப் பிரதேசங்களாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அனைத்து மாவட்டங்களும் இருக்க மட்டக்களப்பு மாவட்டம் இன்னும் கல்வியில் முன்னேறிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அதனூடாக மாணவர்கள் உள்வாங்கப்பட்டுவதனால் அதிகமான மாணவர்கள் இந்த அனுமதியைப் பெறுவதிலே பல சிக்கல்களையும், சிரமங்களையும் பெற்றிருக்கிறார்கள்.

**கேள்வி:-** *இச் சுனாமி அலையின் தாக்கத்திற்கு உள்ளான மக்களுக்கு உங்களது கல்விக் கல்லூரி அமைப்பின் நிறைவேற்று நிர்வாகி என்ற நிலையில் ஏதாவது கூற நினைக்கிறீர்களா?*

**பதில்:-** சுனாமி அனர்த்தத்தினால் எங்கள் தேசம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு போராலும் மற்றும் வன் செயலாலும் பாதிக்கப்பட்ட எங்கள் பிரதேசம் மீண்டும் இந்தச் சுனாமியால் பல தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு கல்விச் சமூகத்திற்கும் எங்களது மக்களுக்கும் உண்டு. இழந்து போன சொத்துக்களையும் இழந்து போன கல்வியையும் நாங்கள் எண்ணி மீண்டும் மீண்டும் துயருற்றுக் கொள்ளாமல் அந்த இழந்து போன சொத்துக்களையும், இழந்து போன கல்வியையும் மீளக் கட்டியெழுப்புவதில் அனைத்து சமூகமும் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட ஜப்பான் மற்றும் முன்னேறிய பல நாடுகளை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நாடுகளுடைய வரலாற்றை நாங்கள் நோக்கிப் பார்க்கையில் அந்த நாடுகள் எந்தவகைளில் தங்களது முன்னேற்றத்தைத் தயார்படுத்திக் கொண்டனவோ, அதே போன்று எங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து சமூகங்களும் இந்தச் சந்தர்ப்பத்திலே விழிப்படைய வேண்டிய கட்டாய கடமை எங்களுக்கு உண்டு.

அதனூடாக எங்கள் பிரதேசத்திற்கு எங்கள் நாட்டுக்கு அன்னிய தேசத்தால் வழங்கப்படுகின்ற பல்வேறு உதவிகளையும் நாங்கள் சரியான முறையில் பெற்று ஆற்றுப்படுத்தல் சேவையை பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்கும் வழங்கி மீண்டும் எங்களது தேசத்தை ஒரு சுபீட்சமான தேசமாக கட்டியெழுப்புவதில் அனைவரும் பாடுபட வேண்டும்.




ஈழநாதமே!
ஈழநாதமே இது என் இதய நாதம்
எழுதுகிறேன் ஓர் க(வி)தை - என்
பேனாமுனை கண்ணீரால்
கழுவப்பட்டு துருப்பிடிக்கும் வரை....



இரவுகளை விரும்பாத - என்
இமைகளுக்காகவும்
பிரிவுகளை விரும்பாத
இதயங்களுக்காகவும்....
நீ தான் இறுதிச் சமர்ப்பணம்.

நானோ.....
ஓட்டை விழுந்த - ஓர்
ஓலைக் குடிசை
விடியல்களால் மாத்திரமே
வெளிச்சத்தைக் காண்கிறேன்.



புயலுக்குள் சிக்கிய புதுக்கீதமாய்
இசைக்கப் படாமலே நான்
இழுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

என்னை இறைவன் ஏமாற்றி விட்டான்
நாதமே என் பேனையை
என் வசனங்களை - நீ
ஏமாற்றி விடாதே ஈழநாதமே.

சீ.யோகேஸ்வரன்
ஆலையடி வேம்பு வீதி,
அக்கரைப்பற்று -07

என் இதய நாதமே!

வெள்ளி தோறும் என் வாசல் வந்து என்னை ஆனந்தத்தில் ஆழ்த்தும் நாதமே. உன் வரவைக் கண்டவுடன் சூரியனைக் கண்ட தாமரையாய் என் மனம் துள்ளுகிறது. அரசியல் கட்டுரைகளோடு, நேர்காணல்களையும் சுமந்து உன் தரத்தை உயர்த்துகிறாய். கவி நாதத்தில் சுனாமி அரக்கனால் ஏற்பட்ட வேதனைகளை எங்களுக்குத் தருகிறாய். உன் படைப்புக்களை எப்படி வார்த்தைகளால் வர்ணிப்பது எந்தப் பகுதியைக் குறை கூறுவது. எல்லாமே அமிர்தமாய் இருக்கிறது.

நாதமே நீ என்றும் போல் வளர்ச்சி பெற்று பெருமை அடைய எனது வாழ்த்துக்கள்.



வேதசகி
செங்கலடி.

ஈழநாதமே


நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கமும் தேன் சொட்டுகிறது. எதைப் படிப்பது எதை விடுவது என்று தெரியவில்லை. வளர்ந்து வரும் புதுமை எழுத்தாளர்களுக்கு எனது பாராட்டுக்கள் ஈழநாதம் சுமந்து வந்த கவியரங்கத்தில் எழுத்தாளர் சிவலிங்கம் சுமதி எழுதிய ''சிந்தித்துப் பார்'' என்ற கவிதை இளைஞர் எங்களைச் சிந்திக்கத் தூண்டியது. எழுத்தாளருக்கு நல்வாழ்த்துக்கள். ஈழநாதத்திற்கு நன்றிகள்.



வி.தீபன்
மட்டக்களப்பு.

# விடுதலைக்கு வித்தாகிவிட்டாயா?











வித்துடல் காண விரைந்து வந்த தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் மற்றும் பொறுப்பாளர்களும்



மேஜர். செந்தமிழன்
[தம்பிராசா – கந்தசாமி]
சின்னவத்தை மண்டூர்
பிறப்பு 20.01.1977



2ம் லெப். விதிமாறன்
[சிவபாதம்–மதன்]
செட்டிபாளையம்
பிறப்பு 13.05.1982



மேஜர். புகழன்
[சிவலிங்கம்–சுரேஸ்காந்தன்
தன்னாமுனை

# மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர் அறிவுத் திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள் பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடை எழுதி, பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்குப் பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி-** 2005-02-21

**அனுப்பவேண்டிய முகவரி**

**மாணவர் பரிசுக்குவியல் —24,**
**ஈழநாதம்[மட். பதிப்பு],**
**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை**

இவ்வார வினாக்கள்:

01. 13வது சார்க் உச்சிமாநாடு எப்போது எங்கு நடைபெறவுள்ளது?
02. அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணித் தலைவராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்றவர் யார்?
03. "ஏறுது பார் கொடி ஏறுது பார்" என்ற தமிழீழ தேசியக் கொடியேற்றப் பாடலை இயற்றியவர் யார்?
04. இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் மட்டக்களப்புக்கு எப்போது விஜயம் செய்தார்?
05. இதயமாற்றுச் சிகிச்சையை முதன் முதலில் செய்தவர் யார்?

*பரிசுக்குவியல் 22ற்கான சரியான விடைகள்.*

01. ஈபிள் கோபுரம் 02. 2006ம் ஆண்டு மேற்கிந்தியத் தீவில்
03. ஜனவரி 17ம் திகதி, கிளிநொச்சியில் 04. கார்த்திகைப் பூ
05. 9.0

பரிசு பெறும் அதிஸ்டசாலி
மு.தேனுஜா
தரம் 07 ஏ,
மட்.புனித சிசிலியா பெண்கள் பாடசாலை.

**பாராட்டுப் பெறுவோர்.**

01. எஸ்.நிசாந்தி
செங்கலடி ம.வி

02. ம.டிலோசன்
மட்.புனித மிக்கேல் கல்லூரி

03. க.தயானந்தி
கோட்டைக்கல்லாறு

04. வி.மாலதி
நொச்சிமுனை மட்டக்களப்பு.

05. ஆர்.சஞ்ஜிவ்
ஆரையம்பதி


**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




தொ.பே.இல:- 065-2222371 065-2225341


## மூத்த வேங்கைக்கு இக்கவியை சாத்துகிறோம் சமர்ப்பணமாய்....

தலைவன் வளர்த்த தம்பி கௌசல்யன் நேற்றிரவு
சரிந்து விட்டாய் என்று செய்தி எட்டியதும் நாங்களெல்லாம்
நிலையிழந்து விட்டோமடா? நித்தியமாய் இருக்காதென்று
மருவி வந்த செய்தியாக வேண்டுமென்று மறுத்தோமடா.

வீரம் விளை நிலத்தின் விடி வெள்ளியாய் நின்ற மகன்
தீரமுடன் அரசியலில் சாணக்கியம் மிக்கவராய்
கொட்டமிட்டு மீனினங்கள் குதூகலிக்கும் இந்த மண்ணில்
மட்டு நகர் அம்பாறை மக்கள் மனங்களிலே பதிந்து விட்டீர்

விலை மதிக்க முடியாத உந்தனுடல் வீதியிலே
அலையடித்து ஓய்ந்தது போல் அங்கமெல்லம் விழுப்புண்ணாகி
எதிரி மறைந்து நின்று இயக்கி நின்ற கிளைமோர் குண்டு
அதிரடியாய்ப் பாய்ந்துயிரை அவ்விடத்தே பறித்ததென்று

உண்மைச் செய்தி எட்டியதும் ஊரெல்லாம் அவல ஓசை
விண்ணோடு கலந்ததடா! வீரமகன் வித்துடலை
கண்ணாலே பார்க்க வேண்டும் கயவர்களும் எதிரிகளும்
மண்ணோடு மண்ணாக மறைகவென்று கத்றினோம் நாம்.

நீதிப்பிரிவில் நீயிருந்த காலத்தை நினைக்கும் போது
நீங்காது மனங்களிலே நிறைந்து விட்டாய் தம்பி நீயும்
முதியவரும் மெச்சுகின்ற முகஷ்துதியும் அரவணைப்பும்
மூத்த ஒரு வேங்கையென்ற அணிகலனைக் காட்டியது.

உன்னினத்தின் விடிவினிற்காய் உயிர் கொடுத்து மாண்டு விட்டீர்
தன்னினமோ விடிவு காணும் காலம் வெகுதூரமிலை
வெற்றிக் கொடிபறக்கும் விடிவு வரும் தமிழர் இனம்
பற்றுடனே உங்கள் புகழ் எழுதும் ஒரு பரணியிலே.

**மட்/முதலைக்குடா**
**மகா வித்தியாலயம்.**

## பெருமைக்கே விலங்கு

-உமேஸ்காந்-

ஆரையம்பதி அன்னையவள்
பெற்றெடுத்த அணையாத தீபமே
அண்ணா - உனை ஈன்றவள்
பெருமைக்கே பெரிதான தளபதியே
அண்ணா நீலன் என்ற பெயர்
கொண்டு நீழ் கடல் ஆண்டு
ஈழம் நிறைவு பெறாத ஈழமண்ணில்
இனிதாக உதித்தெழுந்த தளபதியே
தமிழ் நெஞ்சங்களின் புலனாய்வாளனாக
விடுதலைக்கு பெருமை சேர்த்த தளபதியே
பெரும் படைத் தலைவன் உடனிருந்து
சாதனைகள் நிறைவேற்றினாய் - மறக்குமா
உதிக்கும் ஈழம் உனை
விடுதலை உணர்வுடன் சுவடு பதித்து
இருபத்திரெண்டு ஆண்டுகள் தமிழ் - ஈழமண்ணில்
இணையற்ற சாதனைகள் நிலை நாட்டினாய்
உனை நினைத்து வேதனை கொள்கின்றோம்
அண்ணா
அண்ணனாக தம்பியாக தோளோடு - தோள்
நின்ற கொடிய கொலையாளிகள் - உனை
கொலையுண்ட செய்தி கேட்டு - வியந்து
நின்றோம் நாம் நடந்து வந்த பாதை வழியே
அசைக்க முடியுமா - அண்ணன் படைதனை
உள்ளத்தில் உனை நிறுத்தி - நாம்
இறுதி வரைக்கும் தொடர்வோம்
ஈழமதை எமதாக்குவோம்
விரைந்து செல்வோம் - நிமிர்ந்து
செல்வோம் தமிழீழ தேசிய
படையணிகளாக - நாம்
பலம் பெறுவோம்.

## வித்தாகிப் போன எங்கள் சொத்தான அண்ணனுக்கு....

சிரித்த புன் முகத்துடனே சிந்தனை நீ மிக்கவராய்
சரித்திரத்தில் நல்லதொரு தளபதியாய் அரசியலை
வழி நடத்தி தோள் கொடுக்கும் வரிப்புலியாய் நீயிருந்து
விழிப்புடனே காலமெல்லாம் ஏங்கினாயே விடுதலைக்காய்

கௌசல்ய அண்ணன் என்றால் கண்டவர்கள் மனதினிலே
நிறைந்து விட்ட ஒரு உருவம் நிழலாடுகின்ற தண்ணா!
வேதனையை சாதனையாய் வாழ்க்கையிலே சுமந்து கொண்டு
ஆதவன் போல் அவர்களது இதயங்களில் பதிந்து விட்டீர்

சந்திக்க வருகின்ற மக்களது மனங்களிலே
சிந்திக்க வைக்கின்ற திறமையான அரசியலை
அந்தமாய் எடுத்துச் சொல்லி அவர்களது இதயங்களில்
சொந்தமாய்ப் பதிந்திருந்த தூய ஒரு வேங்கையல்லோ

ஆத்திர உணர்வுனக்கு அடியோடு இல்லையண்ணா
நாத்திகம் இல்லாத நம்பிக்கை கொண்டவர் நீ
மக்களைக் கவர்வதிலும் மரியாதை கொடுப்பதிலும்
எக்காலம் நீ திரும்பி வருவாயண்ணா எங்களிடம்

நீண்ட காலம் இயக்கத்திலே நின்றுழைத்த வேங்கையண்ணா
ஆண்ட எங்கள் பரம்பரைக்கு அரண் அமைத்துக் கொடுத்தவர் நீ
பூண்டோடு புலிப்படையை அழிக்க வந்த இந்தியனும்
மாண்டுபோன பதிவுகளாய் மனங்களிலே இருக்கின்றது.

ஒட்டி நின்று சுட்டு விட்டால் கெட்டித்தனம் வந்திடுமா
முட்டாதே! கயவனே நீ மூக்குடையும் அறிந்து கொள்ளு
குட்டக்குட்ட குனிந்திட்டால் நீ கோழை என்று எண்ணிடாதே
தட்ட மாட்டோம் தலைவன் ஆணை கிடைக்கு மட்டும்
பொறுத்திடுவோம்.

**வர்த்தகர் சங்கம்,**
**கொக்கட்டிச்சோலை.**

## சுயலாப அரசியலால்.....

இம்மீனவர்களின் ஜனநாயக உரிமை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்த உண்மைகளைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் காலத்தில் மீனவர்கள் மாபெரும் மறியல் போராட்டத்தை நடாத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து மீண்டும் அரசு மூலமாக மீனவர்கள் உரிமைகளை அடைவதுதான் மாவட்ட மீனவ பேரவையின் நோக்கம்.

**கேள்வி:-** பாதிக்கப்பட்ட மீனவர்களை அரச, அமைச்சர்கள், அதிகாரிகள் வந்து பார்வையிட்டார்களா?

**பதில்:-** அரசின் மீன்பிடி அமைச்சு மற்றும் அதிகாரிகள் வந்து சென்றதாகக் கேள்வியுற்றோம். இருந்தும் அந்த நிலமைகள் பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பட்ட என்பது கேள்விக் குறியாக உள்ளது. காரணம் என்ன என்பது பொத்துவில் பிரதேசத்தை மாத்திரமல்ல கரையோரப் பிரதேசமான வடகிழக்கை எவ்வாறு விகிதாசார அடிப்படையில் குறைத்து இதை ஒரு சிங்கள மயமாக்கலாம் என்னும் செயற்றிட்டமாக இருக்கிறதே தவிர பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தரமான தீர்வு வழங்கப்படவில்லை.

**கேள்வி:-** பொத்துவில் பிரதேசத்தில் ஜே.வி.பியின் மக்கள் படையணி 3000 பேர் வரை இங்கு தங்கி சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:-** மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைபோல்தான் இன்று ஜே.வி.பியும் இவர்கள் மக்கள் சேவைக்காக வந்திருப்பதாகக் குரல் கொடுத்து மக்கள் மத்தியில் சிறுபிள்ளைக்கு மிட்டாய் காட்டி அரசியல் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். ஜே.வி.பி. அன்று ஒரு சரியான நிலைப்பாட்டில் இருந்து தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தார்கள்.

இன்று முதலாளித்துவம் பேரினவாதமின்றி இவற்றிற்குப் பின் சென்றுகொண்டிருப்பதால் நிச்சயமாக பொத்துவிலில் இருக்கும் மீனவர்களுக்கு மாத்திரமல்ல கரையோர மட்டத்தில் வாழுகின்ற மீனவர்களுக்கு ஒரு சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க மாட்டார்கள் என்பது உண்மை. காரணம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இனவாதப் போக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இனவாதமற்ற நோக்குடையவர்களாக இருந்ததால் இந்த வடகிழக்கில் சுயநிர்ணய உரிமைக்காக எத்தனையோ உயிர்ப் பலிகள், உடமைகள் பொருட்களை இழந்து இன்று வடகிழக்கில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை ஒன்று அவசியம் என்பதை சர்வதேசமும் விளங்கியிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படுகின்ற ஒரு அமைப்பாக ஜே.வி.பி. உள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்த அடிப்படையில் நோக்கும் போது இவர்கள் இங்கு வந்திருப்பது இந்தப் பொத்துவில் என்ற பிரதேசத்தை எவ்வாறு சிங்கள மயப்படுத்தலாம் என்ற நோக்கத்திற் கொழிய இங்கு பாதிக்கப்பட்டு வாழுகின்ற மக்களுக்கு புத்துயிர் ஊட்டுவதற்காகவல்ல என்பது ஆணித்தரமான உண்மை என்பதை கூற விரும்புகிறேன் என்றார்.

## மாலையில் கிறிஸ்மஸ் ......

நான் சேர்த்து வச்சது எல்லாம் அன்புதான். இந்த அன்பைத்தான் என்ர குடும்பத்துல சேர்த்து வச்சன். எங்கட சகோதரங்கள் எல்லாம் கலியாணம் கட்டுற வயதுக்கு வந்தவங்கதான். அதேபோல தான் அவருக்கு 44 வயசிலையும் எனக்கு 39 வயசிலையும்தான் கலியாணம் கட்டினம். உண்மையில் ஆண்டவன் நல்லா ஆசீர்வதித்தார் என்ர கணவருக்கு நிரந்தரத் தொழில் இல்ல. இப்படியிருந்தும் நாங்க மிச்சம் சந்தோசமாக இருந்தம் எங்கட பிள்ளைகள் மிச்சம் கெட்டிக்காரப் பிள்ளைகள், எங்கட பிள்ளைகள் சிசிலியா, சென்மிக்கல் எல்லாத்திலயும் சேர்த்திட்டோம். இரண்டு பேரையும் மூத்தவவுக்கு 10 வயது. சின்னவவுக்கு 6 வயது. என்ன கெட்டித்தனமாக படிப்பதுகள். சரியான கெட்டித்தனம் என்ர செல்லங்கள். சரியான சந்தோசம், எங்கட வாழ்க்கை ஆண்டவர் என்னத்துக்காக எனக்கு இந்தப் பிரிவைத் தந்தார். என்று தெரியல்லியே என்று கூறி அழுகிறார். பின் அவர்களுடைய படங்களை எடுத்துக் காட்டி எனக்கு ஆண்டவர் தந்த செல்வம் என்றார். நான் சேர்த்து வச்ச செல்வம் என்று சொன்னால் இதுதான் எனக்கு பொருள் போச்சுதே, பண்டம் போச்சுதே என்று பெரிய கவலையில்லை. என்ர செல்லங்கள் தான் என்னை தனிய விட்டுப் போயிட்டே. இந்தச் சுனாமி வருவதற்கு முதல்நாள் கிறிஸ்மஸ் என்ர பிள்ளைகளோட அந்த மனிசன் என்னையும் வச்சு நல்ல சந்தோசப்படுத்தினார்.

அந்த மனிசன் அடுத்த நாள் காலையிலேதான் என்ர பிள்ள வகுப்புக்குப் போயிற்று வந்து உடுப்பு மாத்துறத்துக்குள்ளதானே அலை அடிச்சிக்கிட்டுப் போனது. ஒரு நாளையில நாங்க துக்கமாக இருந்ததில்லை. இன்றைக்கு துக்கமே வாழ்க்கையாகி விட்டுது எனக்கு விருப்பம் நான் குடியிருந்த வளவிலதான் மீண்டும் போய் இருக்க வேண்டும். எங்கட செல்வங்களுடனே பழகின இடத்திலதான் நான் போய் இருக்க வேண்டும் என்று நினைக்கிறன். அத்துடன் ஒரு ஜெப மண்டபம் ஒன்று கட்டி அங்கிருந்தே ஜெபம் செய்ய வேண்டும். என்ர செல்லங்களை நினைச்சுக் கொண்டே இருக்கிறேன். என்னால இந்த கொடுமையை தாங்கவே இயலாது தம்பி என்று மீண்டும் சத்தமிட்டு அழுதார்.

இதேபோன்று பலரிடம் தங்களது பாதிப்புக்கள் பற்றி அறிந்து கொண்டோம். அனைவரும் பெருமளவு தங்களது சொந்த பந்தங்களை இழந்தவர்களே இந்த டச்பார் பிரதேசத் தில் இருந்து தற்போது நலன்புரி நிலையத்தில் தங்கியிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாற்பத்தோராம் நாள் நினைவில்...

11-02-2005



அமரர்

## சோமசுந்தரம் — சுதர்சன்

தாய்க்கோர் தனயனாக தாரணியில் வந்துதித்தாய்
தகப்பனது பெயரை நீ தடம் பதிப்பாய் என்றிருந்தோம்
தான்தோன்றி அப்பனவன் தடுத்து விட்டான் இப்போது
தாங்கவொணா துயரமதை தந்து நீ மறைந்து விட்டாய்.

உன்னால் உயர்ந்தவர்கள் ஊரினிலே பலபேர்
உன் ஆன்மா பிரிந்தவுடன் உருகியவர் சிலபேர்
உத்தமனே உன்னுடைய உள்ளமதைப் புரிந்து
கொண்டோம்

உருத்திரனே உனைச் சேர்ப்பான்
அவனுடைய பாதமதில்

குடும்பத்தார்,
கல்லடி உப்போடை.




சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் மட்-தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அண்மையில் சத்துருக்கொண்டானில் சுவிஸ் தமிழ் கிராமம் திறந்து வைக்கப்பட்ட போது



# ௪௧ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

11-02-2005

மண்ணில் - 29.07.1969
விண்ணில் - 02.01.2005

அமரர்

## பாலிப்போடி ஜெகநாதன் (ஜெகன்)

(கிராமஉத்தியோகஸ்தர் பட்டிப்பளை, அகில இலங்கை உதைபந்தாட்ட நடுவர்)

2005.01.02 ந் திகதி அன்று எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலரஞ்சலி செலுத்தியும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும், துயரம் நிறைந்த நாட்களில் பல்வேறு வழிகளிலும் உதவிகளும் ஒத்தாசையும் வழங்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் 41ம் நாள் நினைவஞ்சலி 11.02.2005ம் திகதி வெள்ளிக்கிழமை இல:174 பழைய கல்முனை வீதி, நொச்சிமுனை இல்லத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையின் பின்பு நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
மனைவி கேகலாதேவி ஜெகநாதன்
இல: 174 பழைய கல்முனை வீதி
நொச்சிமுனை.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 11-02-2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

Registered as a News paper பக்கங்கள் 04

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

சிறப்பு பிரதி
வார வெளியீட்டு
இணைப்பு

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை 29 11.02.2005 வெள்ளிக்கிழமை ஓசை 245

# தேசியத் தலைவரின் எண்ணங்களை சரியாக முன்கொண்டு சென்றவர்

## வீர வணக்கவுரையில் சு.ப. தமிழ்ச்செல்வன்

(எஸ்.சசி)

எமது தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் மக்கள் மத்தியில் சரியான முறையில் கொண்டு சென்றவர் லெப். கேணல் கௌசல்யன் எனத் தமிழீழ அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு மாவீரர்களின் இறுதி வீர வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், சமாதானத்தைத் தொடர்ந்தும் காப்பாற்றுவதற்காக, விடுதலைப் புலிகள் பெரும் விலையைக் கொடுக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்தா.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

சர்வதேச நாடுகள் யாவற்றிற்கும் சென்று எமது மக்களின் விடுதலைக்காக அயராது முன்நின்று உழைத்த கௌசல்யன் கோழைத்தனமானவர்களின் தாக்குதலில் இன்று மீளாத்துயிலில் இருக்கின்றார்.

எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு பல சக்திகள் எடுத்த முயற்சிகளையும் முறியடித்து மக்கள் மத்தியில் சரியான கருத். துக்களை முன்கொண்டு சென்றவர் கௌசல்யன் எனவும் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார். கிழக்கில் ஒரு முழுமையான புனர்நிர்மானப் பணியை மேற்கொண்டு, சிறப்பாக கிழக்குப் பகுதிகளை எழுச்சிபெற வைக்கும் கனவுகளைச் சுமந்தபடி இங்கு திரும்பிவரும் போது, கௌசல்யன் அவர்களை, சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதி முயற்சி காவுகொண்டு சென்றுள்ளது என்றும் தமிழ்ச்செல்வன் அவர்கள் உணர்ச்சி பொங்க கருத்துக் கூறினார்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த கோழைத்தனமான திட்டமிட்ட செயல் காரணமாக எங்கள் தேசத்திலே வித்தாகிப்போய் இருக்கின்றார்கள் இவர்கள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து விட்டார்கள். அவர்கள் பிரிந்தாலும் அவர்களுடைய உறுதி அவர்களுடைய உணர்வுகள், அவர்களுடைய இலட்சியங்கள் எல்லாவற்றையும் எங்கள் நெஞ்சிலே ஆழமாகப் பதித்து வைத்திருக்கின்றார்கள்.




எங்கள் கௌசல்யனோடு நீண்ட காலமாக இருந்து ஒன்றாக உணவருந்தி, ஒன்றாகப் பயணித்து பல அரசியல் முன்னெடுப்புக்களிலே கருத்துக்களை உணர்வுகளை பரிமாறிச் சென்று இருக்கின்றோம். அப்படியான ஒரு சீலனையும், தோழர்களையும் இழந்து இருக்கின்றோம். உலகிலே எங்களுடைய கௌசல்யன் என்றவுடன் தமிழீழ தேசமே கலங்கிப் போய் இருக்கின்றது. எனவே அவருக்கென்ற சில பதிவுகள் இருக்கின்றது சிங்கள இனவாதிகளால் நாங்கள் காலம் காலமாக வாழ்ந்த தாயக பூமியை பிளவுபடுத்தி சிதைக்க எடுத்த முயற்சிகளையெல்லாம் முறியடிப்பதில் எங்களுடைய தேசமும் எங்களுடைய மக்களும் தமிழ் பேசும் மக்களும் காலம் காலமாக தங்களை அற்பணித்து இருக்கின்றார்கள். அந்த வகையின் தொடர்ச்சியிலே சிங்கள இனவாதிகள் மீண்டும் ஒரு கைங்கரியத்தை நிறைவேற்ற முயலுகின்றார்கள். இங்கே துரோகிகளை உருவாக்கி எமது தேசத்தின் ஒற்றுமையை குலைத்து பிளவு படுத்தி எங்களுக்குள்ளே மோதல்களை உருவாக்கி எங்கள் மக்களையும் தேசத்தையும் அழிக்க முயன்றார்கள் அவர்களின் வேலைத்திட்டங்கள் சதி என விளங்கிக் கொண்டு கௌசல்யன் அங்கிருந்து வந்து எங்கள் தேசியத் தலைவரின் தலைமைத்துவத்திலே நம்பிக்கை ஒளிரவைத்த ஒரு முன்னணி வீரன் என்பது எல்லோருக்கும் தெரியும்.

கௌசல்யனைப் பற்றி கூறும் போது:- நாங்கள் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காக பயணம் செய்தவேளையிலே அங்கே நான் மக்களை சென்று சந்திக்க முடியாத இடங்களுக்கு கௌசல்யனும் எங்களது பொறுப்பாளர்களும் சென்று மக்களை சந்திக்கின்ற பல சந்திப்புக்கள் நடைபெற்றது. அப்போது அங்கே வந்த சக பொறுப்பாளர்கள் கூறினார்கள்.

போன இடமெல்லாம் எங்கள் கௌசல்யனை கட்டியனைத்து முத்தமிட்டு பலர் கண்ணீர் இட்டார்கள் இந்த வீரனை நாங்கள் நேரிலே காண்பது நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று கூறினார்கள்.

இவரை உலகத்திலே வாழ்கின்ற அத்தனை தமிழ் பேசும் மக்களும் ஒரு கட்டத்திலே துடித்தார்கள். அந்தத் துடிப்பிலிருந்து அந்த சோகத்திலிருந்து அந்த வேதனையில இருந்து உடனடியாகவே எங்கள் தலைவனுக்கு எங்கள் தேசத்திற்கும் எங்களுடைய உரிமைப் போராட்டத்திற்கும் பலம் கொடுத்த அந்த மாவீரனை அந்த மக்கள் கண்டவுடன் அவர்களுடைய உணர்வுகள் நன்றி செலுத்துவதாக நான் பார்த்தேன். அந்த மக்கள்



எல்லோரும் ஒருமித்து இந்தக் கௌசல்யனை வரவேற்றதும் கௌசல்யனை வாரி அணைத்து முத்தமிட்ட நிகழ்வும் எங்கள் தேசத்தை காத்த வீரன் என்பதை ஒரு உன்னதமான செய்தியைத்தந்தது. அப்படியான ஒரு வீரன் என்றும் எந்த வித ஆபத்து அச்சுறுத்தல் மத்தியிலும் அங்கு மிகளவிலான கொள்கைகளை வைத்திருந்தான்.

எங்கள் தலைவனதும் எங்கள் தேசத்தினதும் எண்ணங்களை உணர்வுகளை எங்கள் மக்களுக்கு சரியாகக் கொண்டு செல்ல வேண்டும் திருப்தியாக ஒன்று பட்டு ஒரு முகப்படுத்தப்பட்ட அரசியல் சமூக வேலைத்திட்டங்கள் அனைத்து பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்பதில் கௌசல்யன் உறுதியாக இருந்தனர்.

ஒவ்வொரு விடயங்களையும் எங்கள் தலைமைப்பீடத்திற்கு கொண்டு வந்து பேசிக் கலந்து ஒவ்வொரு காரியங்களையும் முன்னெடுக்க வேண்டும். என்பதில் உறுதியாக இருந்தனர்.

ஏனெனின் அவனுக்கு இந்த வரலாற்றிலே ஏற்பட்ட சில குளறுபடிகள், சில பிரச்சினைகள் அவனுக்கு எப்போது உறுத்திக் கொண்டு இருப்பதை நான் அறிகின்றேன். மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திற்கு நீண்ட வரலாறு இருக்கின்றது.

எனவே நாங்கள் காலம் காலமாக ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்த தாயக பூமியிலே எங்களின் உரிமைகளைக் கேட்ட போது தங்கள் தாயகத்தைச் சிதைத்து பிளவுபடுத்தி எங்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க எப்பொழுதும் எதிரிகள் பிரிவினவாதிகள் முயன்று வந்திருக்கின்றார்கள்.

அது எங்களுடைய தலைவரின் ஆயுதப் போராட்ட காலத்தில் மட்டுமல்ல முன்னைய தலைவர்கள்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## லெப்.கேணல்.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளின் வித்துடல்கள் இராணுவ மரியாதையுடன் விதைப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்த் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல். கௌசல்யன் மற்றும் மேஜர். புகழன், மேஜர். செந்தமிழன், 2ம் லெப். விதிமாறன் ஆகியோரது வித்துடல்கள் நேற்று மாலை தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் இந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பில் இருந்து வித்துடல்கள் தாங்கிய பேழைகள் வாகன ஊர்தியில் எடுத்து வரப்பட்டு தாண்டியடி அ.த.க பாடசாலை முற்றத்தில் அமைக்கப்பட்ட மேடையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.


தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி ஈகைச் சுடர் ஏற்றி வைத்தார் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன், மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். இதன் பின்பு வீர வணக்க உரை இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமார், காத்தான்குடிப் பள்ளிவாயல் சம்மேளனத் தலைவர் அப்துல் ஜபார், தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பி.சந்திரசேகரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, என். சிவாஜிலிங்கம், தளபதி ரமேஷ் ஆகியோர் வீர வணக்கவுரை நிகழ்த்தினர்.


பின்னர் வித்துடல் தாங்கிய பேழைகள் மாணவர்களின் மரியாதை இசையுடன் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. தளபதிகள் பேழைகளை தாங்கி சென்றனர்.

அங்கு மாவீரர் துயிலுமில்லத்தில் வித்துடல்கள் வைக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

பின்னர் இராணுவ மரியாதையுடன் விதை குழியில் விதைக்கப்பட்டது. கிழக்கு திட்டமிடல் பணிப்பாளர் மார்ஷல் தலைமையில் நடந்த இந்த அஞ்சலி நிகழ்வில் மட்டு அம்பாறை இராணுவத் தளபதி ராம், துணைத் தளபதி பிரபா, தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, மட்டு அம்பாறை நிருவாகப் பொறுப்பாளர் தயாமோகன், அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், தமிழீழ பொருண்மிய நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ராதாகிஷ்ணன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், செல்வி தங்கேஸ்வரி, பத்மநாதன் மற்றும் விடுதலைப் புலிகளின் தளபதிகள் பொறுப்பாளர்கள், போராளிகள் உட்பட பல ஆயிரக் கணக்கான மக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



மட்டு நகரில் மக்கள் அஞ்சலி



மக்கள் துயரில் மலையக மைந்தன்



விழிகள் கசியும் வீரர் தலைவர்



ஒருமித்த உணர்வுடன் இதயத்து அஞ்சலி



மலரால் வணங்கும் மானத் தமிழர்



மைந்தர்க்காய் மனமுருகி................





வித்துடல் அருகில் வீரர் நினைவில்

தேம்பும் தாயை தேற்றும் தளபதி





விதைகுழி நோக்கி வீர மறவர்





வீர வணக்கம் வேங்கையர் உமக்கு





எங்கள் தோழர்களின் புதைகளில் மண்போட்டுச் செல்கின்றோம்.
நீங்கள் சிந்திய குருதி தமிழீழம் மீட்பது உறுதி.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

# லெப். கேணல். கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளின் வித்துடல் விதைப்புக்கு முன்னதான வீர வணக்க உரையிலிருந்து..

(எஸ்.சசி)

## கற்களும் புற்களும் நிறைந்த பாதையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சாதனை படைத்துள்ளனர்

மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி

இங்கு விழி மூடி வித்துடல்களாக எங்கள் முன் இருக்கின்ற மாவீரர்களான லெப்.கேணல் கௌசல்யன், மேஜர். செந்தமிழன், மேஜர். புகழன், 2ம் லெப். விதிமாறன் இந்த மகத்தான மாவீரர்களின் வித்துடல்களின் முன்னால் நாங்கள் அனைவரும் ஒன்று கூடி இருக்கின்றோம்.

இந்த மானமறவர்கள் விடுதலைப் பயணத்தில் பல்வேறுபட்ட இடர்களையும் துன்ப துயரங்களையும் சுமந்து கொண்டு கம்பீரமாக நடந்தவர்கள் எங்களுடைய விடுதலைப் பயணம் ஒரு சாதாரண பாதையினால் பயணிக்கின்ற பயணம் அல்ல கற்களும் புட்களும் நிறைந்த கரடுமுரடான பாதை இந்தப் பாதையிலே எங்களுடைய விடுதலைப் இயக்கம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

அந்த சாதனைகளைப் புரிந்ததாக இன்னோரன்ன வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து இருக்கினறது. இந்த விடுதலைப் போராட்டத்திற்கான பயணத்தில் பல்வேறுபட்ட எதிரிகளுக்கு முகம் கொடுத்து இருக்கின்றோம்.

களமுனைகளில் எங்களுடைய போராளிகள் கழுத்தல் நஞ்சை அணிந்த படி கைகளிலே துப்பாக்கியை ஏந்தியபடி கொடூரமான யுத்தங்களைச் சந்தித்து இருக்கின்றார்கள். அதனால் வீரச்சாவைத் தழுவி இருக்கின்றார்கள்.



இது வரை 17785 இற்கு மேற்பட்ட மாவீர்களின் கனவுகளைச் சுமந்து கொண்டு ஒப்பரும் தலைவன் மகத்தான மாமனிதன் எங்களுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கின்றான்.


இந்த உறுதியான தலைமைத்துவத்திற்கு கீழ் சரியான உயர்ந்த இலட்சியத்தை வைத்துக் கொண்டு லெப். கேணல். கௌசல்யன் இன்று வித்துடல்களாக இருக்கும் மற்றைய தோழர்களும் நடந்தார்கள் அவர்கள் எதற்கும் வளைந்து போகவில்லை. அசைந்து கொடுக்கவில்லை. தமி ழீழ விடுதலைப் போராட்டத்தில் வெற்றிக்காக தம்மால் முடிந்த பணி செய்து இன்று வீரகாவியம் படைத்துள்ளார்கள் அவர்களுக்கு எமது அஞ்சலிகளை செலுத்துவோமா என்று கூறினார்.

## சிறிலங்கா அரசாங்கத்தின் கபடத்தை உலகம் புரிந்து கொண்டுள்ளது

சிவாஜிலிங்கம் எம்.பி.

மீளாத் துயிலில் தூங்கிக் கொண்டிருக்கும் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளுக்கும் மற்றும் சந்திரநேரு மற்றும் அவரது சாரதியுட்பட ஆறுபேருக்கும் எமது அஞ்சலியினை தமிழ் மக்கள் சார்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக செலுத்துகின்றோம்.


இக்கொலை சம்பவத்தினை சிறிலங்கா அரசாங்கத்தினரே செய்து இருக்க வேண்டும் ஏனென்றால் சம்பவம் இடம் பெற்ற இடம் இராணுவ பாதுகாப்புக்குரிய இடமாகும். இதற்கு அரசு முழுப் பொறுப்பு ஏற்கவேண்டும். இந்தப் படுகொலை தமிழ் மக்களைப் பெருந்துன்பத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியிருக்கின்றது. அதைவிட அவர்கள் எத்தனையோ வழிவகைகள் மூலம் தங்கள் கைங்காரியங்களை மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் இன்று உலகம் விழித்துக் கொண்டுள்ளது. ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அன்னான்கூட இப்படுகொலையில் உயிர்நீத்த லெப் கேணல் கௌசல்யன் உள்ளிட்ட ஏனையோருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தது சிறிலங்காவினுடைய முகமூடிக் கபட நாடகத்தை உலகம் புரிந்துகொள்ள ஆரம்பித்திருப்பதைக் காட்டுகிறது.

## சர்வதேச நாடுகள் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

மூத்த உறுப்பினர் பாலகுமார்



லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட படுகொலையில் வீரகாவியமான வேங்கைகளுக்கு எமது அஞ்சலி வணக்கம் தமிழீழ விடுதலைப் போராட்ட காலம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சுமார் 17785 இற்கு மேற்பட்ட மாவீர்களை இழந்து இருக்கின்றோம். வீரச்சாவுகளினால் விடுதலைப் புலிகள் ஒரு போதும் துவண்டு போவது கிடையாது எங்களுடைய வரலாற்றிலே வீரச்சாவுகள் இன்றும் நிமிர்ந்து நின்று இலக்க அடைவதற்கு வழி வகுக்கின்றன.

இதேவேளை இவர்களின் வீரச்சாவு மேலும் பல வரலாற்று கோட்பாடுகளை எடுத்து செல்வதற்கு வாய்ப்பு அளிக்கப் போகின்றது. கடந்த கால சுனாமி பேரழிவால்.

அரசிற்கு அதனோடு சேர்ந்து நின்று செயற்படும் விரோத சக்திகளுக்கும் ஒரு தெளிவு வரவில்லை தொடர்ந்து அவர்கள் யுத்தத்தை எதிர்பார்க்கின்றார்கள் போன்று எங்களுக்கு இது வலியுறுத்துகின்றது.

இதற்கு சர்வதேச நாடுகள் முழுமையான அழுத்தத்தினைக் கொடுத்து இது போன்ற அப்பட்டமான படுகொலை சம்பவங்களை நிறுத்த வேண்டும் இல்லையேல் தொடர்ந்து நாங்கள் எடுக்கும் முடிவுக்கு அரசு அமைய வேண்டிவரும்.

மீண்டும் மீண்டும் மாண்புமிகு எமது தலைவரின் பொறுமையை கடைப்பிடிப்பார் அதற்கும் ஒரு எல்லை இருக்கின்றது இதனை நீங்கள் எல்லோரும் அறிந்து இருக்க வேண்டும்.

### கௌசல்யன் மீதான தாக்குதலை கண்டித்து வாகரையில் இன்று பேரணி

(நமது நிருபர்)

லெப்.கேணல். கௌசல்யன், மற்றும் மூன்று போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கட்டித்து வாகரைப் பிரதேசத்தில் இன்று கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

பனிச்சங்கேணி, கதிரவெளி ஆகிய இடங்களிலிருந்து பேரணிகள் புறப்பட்டு வாகரையைச் சென்றடையும்.

வாகரைப் பிரதேச செயலகத்தை பேரணி சென்றடைந்ததும் அங்கு பிரதேச செயலாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இந்தக் கண்டனப் பேரணியில் அனைவரையும் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்துமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## கௌசல்யன் மறைவு முஸ்லிம் மக்களுக்கும் பேரிழப்பு

காத்தான்குடி பள்ளிவாயல் சம்மேளனத் தலைவர் அப்துல் ஜப்பார்

கௌசல்யன் அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் பெரும் பேரிழப்பு ஆகும். அண்மையில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவுக்குப் பின் முஸ்லிம்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கியிருந்தனர்.

அவர்களுக்கு குடியமர்வதற்கு காணியில்லை. இத்தகைய ஒரு சூழலில் முஸ்லிம் பிரதிநிதிகளை லெப்கேணல் கௌசல்யன் அழைத்து பேசியிருந்தார். முஸ்லிம் பிரதிநிதிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பல பிரச்சினைகளை முன்வைத்தோம்.

அனைத்து பிரச்சினைகளையும் பெரும் தன்மையுடன் ஏற்றுக் கொண்ட அவர் தீர்வுக்கான சில உத்தரவாதங்களையும் வழங்கியிருந்தார். ஆனால் இன்று அவரது மறைவு எங்களுக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது. அவரது மறைவுக்காக அனைத்து முஸலிம் மக்கள் சார்பாகவும் எமது அஞ்சலியை தெரிவிப்பதோடு முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் மனப் பூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என இங்கு வேண்டுகோளாகவும் விடுக்கின்றோம் என்றார்.



## பொலனறுவை படுகொலைக்கு அரசு பதில் கூற வேண்டும்

ஜெயா எம்.பி



கண்மூடி மீளாத்துயில் கொண்டிருக்கும் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல். கௌசல்யன் மற்றும் ஏனைய போராளிகளுக்குமாக இங்கு அஞ்சலி செலுத்த வந்திருக்கும் தமிழ் நெஞ்சங்களுக்கும் தமிழ் கூட்டமைப்பின் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-நீண்ட போராட்ட வரலாற்றிலே பல போராளிகள் அமைதிச் சூழல் ஏற்பட்டிருக்கும் வேளையில் கூட சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு பின்னர் இங்கு எத்தனை போராளிகள் வீரமரணமடைந்து இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம் இதனை தலைமைப்பீடம் பொறுத்துக் கொண்டே வந்தது.


இதனைப் பாராது கடந்த 07.02.2005 தினம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வெலிக்கந்தையில் இடம் பெற்ற இக்கொலை சம்பவத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் நான்கு பேரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரநேருவும் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்று நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்றத்தில் தெரிவித்தோம். இதற்கு அரசு தமிழ் பேசும் மக்களுக்கு பதில் கூற வேண்டும் இனிமேல் இவ்வாறான சம்பவங்களும் இடம் பெறாது இருக்க வேண்டும் என்றார்.

## படுகொலைகளுக்கு சிறிலங்கா அரசு பதில் கூற வேண்டும்

சந்திரசேகரன் எம்.பி.

லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளை இழந்து இருக்கின்றோம். இவ்விழப்பு புதிதல்ல. இதே போன்று ஆயிரக்கணக்கான மாவீர் செல்வங்களை எமது எதிர் காலத்தின் நன்மைக்காக இழந்து இருக்கின்றோம். இது ஒரு அப்பட்டமான பாரிய குற்றம் இதனை அரசு பொறுப்பேற்று தமிழ் மக்களுக்கு பதில் கூற வேண்டும் நாங்கள் பாராளுமன்றத்தில் வலியுறுத்தி இருக்கின்றோம்.

இப்படி மறைமுகமாக அரசு செயற்பட்டு படுகொலைச் செய்து வந்தால் எங்களின் விடுதலைப் போரையே வெற்று ஆயிரக்கணக்கான மக்கள் இழந்து உள்ளோம். படைபலம் குறைந்து விடமாட்டாது. ஆனால் போராட்ட சக்தியும் போரிலிருகின்ற சக்தியும் விவேகம் கூடிக் கொண்டு தான் செல்கின்றது.



இன்று இவர்கள் விதைக்கப்படுகின்றார்கள். இவர்களைப் போன்று ஆயிரம் பேர் இங்கு உருவாக இருக்கின்றார்கள். அதனை மெய்ப்படுத்தி அரசு அதனுடன் இணைந்து செயற்படும் விரோத சக்திகளும் சிந்தித்திருக்க வேண்டும்.

இருந்தும் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினரும் ஆழந்த அனுதாபத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

## மட்டு அம்பாறை மாவட்டம் நேற்றும் துக்கத்தில் மூழ்கி கிடந்தது

(நமது நிருபர்)

மட்டு அம்பாறை மாவட்டத்தில் நேற்றும் பூரண துக்கமனுஷ்டிக்கப்பட்டது. மட்டு அம்பாறை அரசியல்த் துறைப் பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன், மற்றும் மூன்று போராளிகள் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாட் டுப் பற்றாளர் அ.சந்திரநேரு ஆகியோர் மீதான படுகொலையை கண்டித்து இந்த துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் பேசும் சமூகங்கள் இணைந்து இந்த துக்க தினத்தை அனுஷ்டித்தனர்.

நேற்றைய தினமும் எங்கும் சோகமயமாக காட்சியளித்தது. கறுப்பு வெள்ளை கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் பூட்டு சந்தைகள் வங்கிகள், அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்துமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

### தேசியத் தலைவர்....

மக்கள் ஜனநாயக வழியில் அறிந்து போராட்டங்களை முன்னெடுத்த போதும் அவர்கள் இதனைத்தான் செய்தார்கள்.

நாங்கள் காலம் காலமாக ஒன்று பட்டு வாழ்ந்த தமிழ் மக்களின் உரிமைகளைப் பிளவுபடுத்த அவர்களது உரிமையை குலைத்து அதனூடாக நன்மை பெறமுயன்றார்கள் என்றார்

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 11.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.